உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 18 திங்கட்கிழமை (04.10.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 312

# பொன்சேகாவை மீட்டெடுக்க ஜனநாயக மக்கள் இயக்கம்

## ஜே.வி.பி. மற்றும் பிக்குகள் அமைப்பு இணைந்து போராடுவதற்கு முடிவு

கொழும்பு, ஒக்ரோபர் 4

**சிறைத்தண்டனை அனுபவித்துவரும் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்கான ஜனநாயகப் போராட்டங்களை உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் மேற்கொள்ளும் நோக்கில் நேற்று 'ஜனநாயக மக்கள் இயக்கம்' என்ற பெயரில் புதிய அமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது.**

ஜே.வி.பி., பிக்குகள் அமைப்பு, சமூக சேவை அமைப்புகள் ஆகியன ஒன்றிணைந்து இந்த அமைப்பை உருவாக்கியுள்ளன. இந்த அமைப்பில் வந்து இணையுமாறு இந்த அமைப்பு அரசியல் கட்சிகளுக்கும், சமூக சேவை அமைப்புகளுக்கும், பொதுமக்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த அமைப்பின் ஆரம்ப நிகழ்வு நேற்று நாவலயில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு எம்.பி. விஜித ஹேரத் கூறியவை வருமாறு:-

சர்வாதிகார ஆட்சியை இல்லாதொழித்து சரத் பொன்சேகாவை விடுவிப்பதற்காக நாம் ஜனநாயக மக்கள் இயக்கம் என்ற பெயரில் அமைப்பொன்றை உருவாக்கியுள்ளோம்.

இந்த நாட்டு மக்கள் அனைவரும் இன, மத பேதமின்றி, அரசியல் வேறுபாடு இன்றி இந்த இயக்கத்தில் ஒன்றிணைய வேண்டும். நாட்டுக்காகப் பாடு

(24 ஆம் பக்கம் பார்க்க)

## கைதி எண் 22032 சரத் பொன்சேகா

கொழும்பு, ஒக்.04

22032 இதுதான் விடுதலைப் புலிகளை முற்றாக ஒழித்த முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு வெலிக்கடைச் சிறைச்சாலை வழங்கியுள்ள இலக்கம்.

சிறைச்சாலை விதிமுறைகளின் படி 30 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்ட சரத் பொன்சேகாவை சிறைச்சாலை அதிகாரிகள் இந்த இலக்கத்தைக் கொண்டே அழைப்பர்.

இவர் சிறை வைக்கப்பட்டிருக்கும்

(24 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே

**பலாலியில் 18,000 பேர் குடியமர்வு**
பலாலி அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் 18 ஆயிரம் மக்களை மீள்குடியமர்த்த அரசு தீர்மானித்துள்ளது — பக்கம் 3

**அன்று நாட்டில் சிறந்த இராணுவத்தளபதி இன்றோ சிறையில் தரையில் படுக்கும் நிலையில்** — பக்கம் 5

**இரணைமடு குடி தண்ணீர் திட்ட வேலை 2000 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு**
வடக்கின் பாரிய அபிவிருத்தித் திட்டமான கிளிநொச்சி - இரணைமடு குடிதண்ணீர் திட்டத்துக்கான (யாழ்- கிளிநொச்சி நீர் விநியோகத்திட்டம்) புனரமைப்புப் பணிக்கு 2 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கீடு. — பக்கம் 11

## பொன்சேகாவின் அபிலாஷைகளை நிறைவேற்ற நாடாளுமன்ற அரசியலில் களமிறங்கவும் தயார்!

### அனோமா பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 04

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்ட எனது கணவர் சரத் பொன்சேகா முன்னெடுத்த அரசியல் பாதை வழியே தொடர்ந்து செல்வேன். அவரது அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்ற அவசியமேற்பட்டால் நாடாளுமன்ற அரசியலில் குதிப்பேன்.

- இவ்வாறு சரத் பொன்சேகா எம்.பியின் மனைவி அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் வாழ்வுக்கு எனது கணவர்தான் பாரிய அச்

(24 ஆம் பக்கம் பார்க்க)

## 37 இலங்கையருடன் ஆஸி.யில் பிடிபட்டது படகு

மெல்போன், ஒக்.04

இலங்கையர்கள் 37 பேருடன் ஆஸ்திரேலியா நோக்கிச் சென்ற படகொன்றை கிறிஸ்மஸ் தீவுக்கருகில் ஆஸ்திரேலிய கடற்படையினர் மடக்கிப் பிடித்தனர்.

படகிலுள்ளவர்கள் அனைவரும் கிறிஸ்மஸ் தீவிலுள்ள அகதி முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என ஆஸ்திரேலிய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா வந்த பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆஸ்திரேலியாவிலுள்ள கிறிஸ்மஸ்தீவில் ஏற்கனவேமுகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (சி)

## கீரிமலைவரை நாளாந்தம் பஸ்சேவை நடத்த அனுமதி

### யாழ். மாவட்டத் தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 4

தெல்லிப்பழைச் சோதனைச் சாவடி ஊடாகக் கீரிமலை வரை நாளாந்தம் பஸ் சேவை நடத்த இராணுவம் அனுமதி வழங்கி உள்ளது.

இன்றுமுதல் அனுமதி வழங்கப்படுகிறது என யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க அறிவித்தார்.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான தூதுக்குழுவினர், யாழ். அரச அதிபர், பாதுகாப்புப் படையினர் ஆகியோருக்கு இடையிலானசந்திப்புநேற்று மாலை யாழ். ஆயர் இல்லத்தில் இடம்

(24 ஆம் பக்கம் பார்க்க)

## சுமந்திரன் போன்று சுவாமிநாதனும் நியமனத்தை ஏற்க மறுக்கலாம்

கொழும்பு, ஒக்.04

நாடாளுமன்ற சபைக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ள பிரதிநிதியான டி.எம்.சுவாமிநாதன் தம் பதவியை ஏற்றுக் கொள்வாரா இல்லையா என்பது குறித்து சிக்கல் ஏற்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் ஏற்கனவே நியமித்த பிரதிநிதியான கூட்டமைப்பு எம்.பியான எம்.ஏ. சுமந்திரன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. தற்போதைய பிரதிநிதியான டி.எம்.சுவாமிநாதன் கட்சியின் ஆலோசனைப்படி தாம் செயற்

(24 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரின் சமகால அரசியல் பற்றி சுவிஸில் இன்று கலந்துரையாடல்

கொழும்பு, ஒக். 04

'தமிழ் மக்களின் சமகால அரசியலும், மீள்குடியேற்றமும்' என்ற தலைப்பிலான கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு சுவிற்ஸர்லாந்து லுசேர்ன் மாநிலத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கலந்து கொள்கிறார்.

தாயக மற்றும் புலம்பெயர் தமிழர்களின் அரசியல் நிலைவரங்கள் தாயக மக்களின் மீள்குடியேற்றம், பொருளாதார மேம்பாடு, பெற்றோரை இழந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான செயற்றிட்டங்கள் குறித்து இக்கலந்துரையாடலில் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. உரையாற்றவுள்ளார். (சி)



ஐ.நா சபையின் 65ஆவது பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது பாரியாருடன் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வழங்கிய விருந்துபசாரத்தில் கலந்துகொண்டார். அப்போது ஒபாமா தம்பதியினருடன் எடுத்துக்கொண்ட படம்.

## கிழக்கு அபிவிருத்திக்குழுக் கூட்டத்திற்கு தமிழ்க் கூட்டமைப்புக்கு அழைப்பில்லை

கொழும்பு, ஒக். 04

கிழக்கு மாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட வில்லை - என்று தமிழ்க் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரிய நேத்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கிழக்கு மாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டம் இன்று காலை திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பங்கு பற்றுவதற்காக கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குஅழைப்பு விடுக்கப்பட்டதா? அழைப்பு விடுக்கப்பட்டிருந்தால் நீங்கள் அதில் கலந்து கொள்வீர்களா என்று பா.அரியநேந்திரன் எம்.பியிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு உறுப்பினர்கள் எவருக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை.

அழைப்பு விடுக்கப்பட்டிருந்தால் அரசியலை ஒரு புறம் வைத்துவிட்டு நாங்கள் நிச்சயம் பங்குபற்றியிருப்போம். ஏனெனில் மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பாக ஆராயும் இக்கூட்டத்தில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எம்மால் சுட்டிக் காட்டியிருக்க முடியும்.

- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

சாரதி அனுமதிப்பத்திரம் (Lisence) தேவையில்லை

ASP ENTERPRISES

யாழ் மண்ணில் புதியதோர் உதயம்

# பெற்றோல் செலவில்லை
# குறைந்த எடை & நீண்ட பாவனை
# இலகுவாக மிதித்தும் செல்லலாம்
# இலகு தொழில்நுட்பத்துடன் அமைந்தது
# எட்டு மணித்தியாலங்கள் தொடர்ந்து மின்னேற்றினால் 60-70Km வரை பயணம் செய்யலாம்
# ஒரு Km க்கான செலவு 0.15 சதம் மாத்திரமே
# பற்றரிக்கு 8 மாதம் மோட்டாரிற்கு ஒரு வருடம் உத்தரவாதம்

மின்சார சக்தியில் இயங்கும் புதிய Atlas E-Bike புதிய தோற்றத்துடன் விற்பனையாகின்றது.



மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாட வேண்டிய இடம்

கத்தோலிக்க அச்சக கடைத்தொகுதி
360/9, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ்ரியன் சந்திக்கு அருகாமையில்)
தொலைபேசி - 0213001585, 0776079352









வடமாகாண தமிழ் இலக்கியப் பெருவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நேற்று கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற போது எடுக்கப்பட்டபடங்கள் இவை.

மங்களம்மாள் மாசிலாமணி அரங்கில் இடம்பெற்ற ஆய்வரங்கில் கலந்துகொண்ட தென்கிழக்கு பல்கலைக்கழக மொழியியல்துறை விரிவுரையாளர் அப்துல் ரமீஸ், எழுத்தாளரும் ஊடகவியலாளருமான பத்மா சோமகாந்தன், ஊடகவியலாளரும் இலக்கியவாதியுமான அன்னலட்சுமி இராசதுரை ஆகியோரை முதல் மூன்று படங்களிலும், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் என்.ஸ்ரீதேவி, வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட் டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், நாடா ளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் நிற்பதை மேல் வரிசைப் படத்திலும்-

கலைநிகழ்வுகளை கீழ்வரிசைப் படங்களிலும் காணலாம்.

(படங்கள்: ஔண்யன், ஹரிஸ்)

கடும் மழைக்கு மத்தியிலும்

# இலக்கியப் பெரு விழாவின் நிகழ்வுகள் 2 ஆம் நாளாக நேற்று இடம்பெற்றன

கிளிநொச்சி, ஒக். 4

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் கல்வி அமைச்சும் இணைந்து நடத்தி வரும் தமிழ் இலக்கிய விழாவின் 2 ஆம் நாள் நிகழ்வுகள் மழையின் சீற்றத்திற்கு மத்தியிலும் கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் காலை 9 மணியளவில் ஆரம்பமாகியது. மங்களம்மாள் மாசிலாமணி அரங்கில் திருமதி பத்மா சோமகாந்தன் தலைமையில் ஆய்வரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

ஆய்வரங்கத்தை பொறுத்தவரையில் குறைந்தளவு பார்வையாளர் களே கலந்துகொண்டனர். இதில் ஆய்வுகளின் வரிசையில் 'சுதந்திரத்திற்கு முற்பட்ட தமிழ் சிறுகதைகளில் பெண்கள்' என்ற தலைப்பில் கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ் ஆய்வுரை நடத்தினார்.

அடுத்த ஆய்வுரையை 'தமிழ் ஊடகத்துறையில் பெண்கள்' என்ற தலைப்பில் அன்னலட்சுமி ராசதுரை நிகழ்த்தினார். அடுத்து ஆய்வுரையை ' நாட்டார் பாடல்களில் பெண்கள் - காதல் '' சம்பந்தமாக றமிஸ் அப்துல்லா நிகழ்த்தினார். திருமதி க. தாமரைச் செல்வி நிகழ்வுக்கு வருகை தராத போதும் அவரின் ஆய்வுக் கட்டுரை மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

பின்னர் கருத்தாடல் இடம்பெற்றது. இதில் காரசாரமான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றதைக் காணக்கூடியதாக இருந்தது. பின்னர் நன்றியுரையை உடுவில் கலாசார உத்தியோத்தர் அ.சிவஞானசீலன் நிகழ்த்தினார். இத்தோடு ஆய்வரங்க நிகழ்வுகள் முடிவுக்கு வந்தன.

பின்னர் 3 மணியளவில் கலை இலக்கியப் பெருவிழா ஆரம்பமாகியது. வடமாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் வன்னியூர் கவிராயர் அரங்கிலே ஆரம்பமாகியது. ஆய்வரங்கின் போது மழை தனது சீற்றத்தை வெளிப்படுத்தியது. பிற்பகல் நடைபெற்ற இலக்கிய விழாவுக்கு வழிவிட்டு ஒதுங்கிக்கொண்டது.

விழாவின் பிரதம விருந்தினராக நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் கலந்து கொண்டார். கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி உதவி அர சாங்க அதிபர் திருமதி ப.ஜெயராணி, வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.குருகுல ராஜா, கிளிநொச்சி உள்ளூராட்சி ஆணையாளர் பி.கிருஷ்ணானந்தலிங்கம் ஆகியோர் கலந்து கொண் டனர்.

முதலாம் நிகழ்வை விட அதிகளவு பார்வையாளர்கள் கலந்து கொண்டனர். எனினும் வெளிமாவட்ட பார்வையாளர்களின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. இதேவேளை, இன்று ஆய்வரங்கு மட்டுமே இடம்பெறும். நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணியளவில் வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்கள விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் இலக்கிய விழா இடம்பெறும். (ஐ-310)

# மீள்குடியேறிய 25 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஒக். 4

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட வறிய குடும்பங்களில் 25 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவி வழங்கப்பட்டுள்ளன.

வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையும் - காரைநகர் உதவி அரச அதிபரும் இணைந்து இந்த வாழ்வாதார உதவிகளை வன்னியில் இருந்து மீளக்குடியமர்ந்த வறிய குடும்பங்களுக்கு வழங்கினர்.

நல்லின ஆடுகளும், ஆட்டுக் கொட்டகைக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன என வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர். தர்மலிங்கம் பிரபாகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கமநெகும - 2010 திட்டத்தின் கீழ் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் 5 லட்சம் ரூபாவுக்கு முன்வைக்கப்பட்ட கருத்திட்டத்தின் அடிப்படையிலேயே உடனடியாக அபிவிருத்தி செய்யும் நோக்கில் முதற்கட்டமாக 25 பயனாளிகளுக்கு இந்த வாழ்வாதார உதவி வழங்கப்பட்டுள்ளது.

விரைவில் மீளக்குடியமர்ந்த ஏனைய குடும்பங்களுக்கும் உதவி அரசாங்க அதிபர் ஊடாக உதவிகள் வழங்கப்படும் என கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் தர்மலிங்கம் பிரபாகரன் தெரிவித்தார். (ஐ-302)

## சமுர்த்தி முத்திரைக்கான கொடுப்பனவுகள்

தென்மராட்சி கிழக்கு, ஒக். 4

2010 ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதத்துக்கு உரிய சமுர்த்தி முத்திரையின் பணப்புள்ளிகளுக்கான கொடுப்பனவுகள் தனது அலுவலகத்தில் வைத்து வழங்கப்படுவதாக வரணி, இயற்றாலை சமுர்த்தி உத்தியோகத்தர் (ஜே/343) எஸ்.பரமா னந்தன் அறிவித்துள்ளார். ரூபா 900, ரூபா 1,500 முத்திரைகள் பெற்றுக்கொண்ட பயனாளிகள் அனைவரையும் தமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி அவர் கேட்டுள்ளார். (ஐ-122)

# கடை முன்பாக நிறுத்திய மோ. சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், ஒக்.4

கடைக்கு முன்னால் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை ஹெல்மற்றுடன் வந்த திருடன் தூக்கிக்கொண்டு மின்னல் வேகத்தில் பறந்துசென்றான்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் யாழ். ஓட்டுமடம் சந்தியில் உள்ள சீற்கவர் (ஆசன உறை) தைக்கும் கடையொன்றில் மாலை 6 மணி யளவில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

குறித்த கடைமுதலாளி தனது மோட்டார் சைக்கிளை கடை வாசலில் நிறுத்திவிட்டு வேலை செய்துகொண்டிருந்த போது அவ்வேளை அவ்வழியால் வந்த 'ஹெல்மட்' அணிந்து கொண்டு வந்த திருடன் மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு மின்னல் வேகத்தில் சென்று கொண்டிருந்ததைக் கண்ட கடை முதலாளி அந்தத் திருடனை துரத் திச் சென்ற போதும் திருடன் மறைந்து சென்று விட்டான்.

சுமார் ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபா பெறுமதியான 'பஸன் பிளஸ்' இன மோட்டார் சைக்கிளே கண்முன்னே இவ்வாறு களவாடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-9)

# புதிய ஆசிரிய நியமனங்களை வன்னிக்கு வழங்கி அப்பகுதி ஆசிரியர்களுக்கு இடமாற்றங்களை வழங்குக

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக். 4

வடமாகாணக் கல்வி அமைச்சினால் புதிதாக வழங்கப்பட இருக்கும் ஆசிரியர் நியமனங்களை வன்னிப் பகுதியில் உள்ள பாடசாலைகளுக்கு வழங்கி, அங்கு இடமாற்றம் பெறத் தகுதியுடைய ஆசிரியர்களின் இடமாற்றத்தைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரிடம் இந்தக் கோரிக்கையை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் முன்வைத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தவை வருமாறு :-

வன்னிப்பகுதியில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றிக்கொண்டிக்கும் ஆசிரியர்கள் பலர் வெளிமாவட்டத்துக்கு சுய விருப்பத்துடன் இடமாற்றம் பெற உள்ளனர். எனினும் இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் வெற்றிடங்களுக்குப் பதிலாக ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்.

வன்னிப்பகுதிப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்வதற்கு என ஏற்கனவே மாகாணக் கல்வி அமைச்சு பெயர் விவரங்களை வெளியிட்டுள்ளது. அவை யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்ட இடமாற்றச் சபையுடன் கலந்துரையாடி அந்த இடமாற்றப் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்படவில்லை என்ற காரணத்தை முன்வைத்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்து அந்த இடமாற்றத் திட்டத்தை இரத்துச் செய்யும்படி கேட்டுள்ளது.

அதற்கேற்ப வன்னிப் பகுதிக்கான ஆசிரியர் இடமாற்றத்தை மாகாணக் கல்வி அமைச்சு தற்காலிகமாக இரத்துச் செய்வதாக அறிவித்துள்ளது.

இந்த நிலையில் வன்னிப் பகுதியில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களை வெளிமாவட்டத்துக்கு இடமாற்றஞ் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக இடமாற்றம் பெறத் தகுதியுடைய ஆசிரியர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் கல்வி அமைச்சால் புதிதாக வழங்கப்படவிருக்கும் தேசிய கல்வியியற் கல்லூரிகளிலிருந்து வெளியேறிய டிப்ளோமா பட்டதாரி ஆசிரியர்கள் 225 பேருக்குரிய நியமனங்களை வன்னிப் பகுதிப் பாடசாலைகளுக்கு வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளோம்.

அவ்வாறு புதிய நியமனங்களை வன்னிப் பகுதிக்கு வழங்குவதன் மூலமே வன்னிப் பகுதியில் கடமையாற்றும் ஆசிரியர்கள்வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் பெறக்கூடியதாக இருக்கும் என தமது கோரிக்கையில் தெளிவுபடுத்தியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்தக் கோரிக்கையைப் பெற்றுக்கொண்ட வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சாதகமான முறையில் பரிசீலனை செய்துகொள்வதாகத் தெரிவித்துள்ளதாக அவர் கூறினார். (201-14)

# பலாலியில் 18,000 மக்களை மீள்குடியமர்த்த அரசு திட்டம்

## 'ஏசியன் ட்ரிபியூன்' தகவல்

கொழும்பு, ஒக். 04

பலாலி அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் 18 ஆயிரம் மக்களை மீள்குடியமர்த்த அரசு தீர்மானித்துள்ளது என்று 'ஏசியன் ட்ரிபியூன்' இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த இணையதளத்தில் இது தொடர்பாக மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

யாழ். பலாலி அதி உயர் பாதுகாப்பு வலயம் வலிகாமம் வடக்கு எல்லையில் இருந்து ஒரு கிலோ மீற்றரால் குறைக்கப்பட்டு அந்தப் பகுதியில் 18 ஆயிரம் மக்களை மீள்குடியமர்த்த அரசு தீர்மானித்துள்ளது. இந்த 18 ஆயிரம் பேரில் சுமார் 8 ஆயிரம் பேர் கொழும்பிலும், வெளிநாடுகளிலும் வசிக்கின்றனர் என்று நம்பப்படுகின்றது.

குடாநாட்டு மக்கள் வாழ்விடங்களை மக்களிடம் மீள ஒப்படைக்கும் அரசின் நடவடிக்கை, அதி உயர பாதுகாப்பு வலயத்தில் உள்ள வயாவிளான் மத்திய கல்லூரியை மீளத் திறந்துவைத்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த மாதம் 28ஆம் திகதி இப்பாடசாலை மீளத் திறக்கப்பட்டது. மீள் திறப்பு விழாவின் போது ஆயிரத்து 350 மாணவர்கள் பாடசாலைக்குச் சமுகம் கொடுத்தனர்.

அதேபோல் தற்போது கண்ணிவெடிகள் அகற்றி முடிக் கப்பட்ட நிலங்களை விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தவும் அரசு தீர்மானித்துள்ளது என அந்த இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

கிளிநொச்சியில்

# கூடாரங்களில் வாழும் மக்களுக்கு தற்காலிக தகரக் கூரை வீடுகள்

கொழும்பு, ஒக்.04

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்காலிக கூடாரங்களில் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு- மழைக்குத் தாக்குப்பிடிக்கக்கூடிய தற்காலிகத் தகரக் கூரைகளுடனான வீடுகளை நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக குழுக்களின் பிரதித் தலைவர் எம்.சந்திரகுமார் நேற்றுத் தெரிவித்தார்.

வன்னியில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களில் பலர், வீடுகள் சேதமுற்ற நிலையில் தற்காலிகக் கூடாரங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

மழை காலம் ஆரம்பித்துள்ளதால் இவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இம் மக்களுக்குக் கூரைத் தகரங்கள் தற்போது வழங்கப்படுகின்றன என கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் நேற்றுத் தெரிவித்தார்.

மேலும் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் மழையால் பாதிக்கப்படாமலிருக்க அரச சார்பற்ற நிறுவனங்களும் பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றன என எம்.சந்திரகுமார் எம்.பி. தெரிவித்தார். (சி)

---

# சுன்னாகத்தில் பாதுகாப்பான பகுதியில் கடை உடைத்துப் பொருள்கள் களவு

யாழ்ப்பாணம், ஒக். 4

சுன்னாகம் நகரத்தில் பலத்த பாதுகாப்பு உள்ள பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிறுவனம் ஒன்று நேற்றுமுன்தினம் இரவு உடைக்கப்பட்டு பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

கடையில் இருந்து மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் அபகரிக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் இரவு கடையின் முன்கதவின் மூன்று பூட்டுக்களும் உடைக்கப்பட்டு உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இராணுவக் காவலரண் மற்றும் தனியார் பாதுகாப்புச் சேவை, வர்த்தக வங்கியின் பாதுகாப்புச் சேவை ஆகியன அந்தப் பகுதியில் அமைந்துள்ள நிலையில் இடம்பெற்றுள்ள இந்தச் சம்பவம் வர்த்தகர்களுக்கு இடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ஐ-86)

---

## சீரற்ற காலநிலை இன்று மாலையுடன் சீராகும் என அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.4

குடாநாட்டில் கடந்த சில தினங்களாக தொடர்கின்ற சீரற்ற காலநிலை இன்று மாலையுடன் சீராகும் என்று திருநெல்வேலி வானிலை ஆராய்ச்சி நிலையம் நேற்றிரவு அறிவித்துள்ளது.

கடந்த சில தினங்களாகப் பெய்த மழை இன்று மாலையுடன் சீராகும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

---

# ஜே.வி.பி. சுவரொட்டிகளை அகற்றல்; எதிர்த்து மனித உரிமை மீறல் வழக்கு

சரத் பொன்சேகாவுக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு எதிராக ஜே.வி.பி. நாடு முழுவதும் ஒட்டியுள்ள சுவரொட்டிகளை பொலிஸார் அகற்றியதை எதிர்த்து மனித உரிமை மீறல் வழக்கொன்றை தாக்கல் செய்யப் போவதாக ஜே.வி.பியின் பேச்சாளர் விஜித ஹேரத் எம்.பி. நேற்றுத் தெரிவித்தார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சிறையில் அடைக்கப்பட்டதை எதிர்த்தும், இந்த நடவடிக்கையை எதிர்த்து மக்கள் அணிதிரள வேண்டும் என அறைகூவல் விடுத்தும் இந்தச் சுவரொட்டிகளில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

ஜே.வி.பியினர் இந்தச் சுவரொட்டிகளை ஹங்வெல்ல, அவிசாவெல, மஹரகம, பொரளை, வெல்லம்பிட்டிய ஆகிய பிரதேசங்களில் ஒட்டிக்கொண்டிருந்த போது கைதுசெய்யப்பட்டனர். ஓர் இரவு முழுவதும் பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அவர்கள் காலையில் வெளியேற அனுமதிக்கப்பட்டனர். ஆனால் பொரளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டவர்கள் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர் என்றும் விஜித் ஹேரத் எம்.பி. தெரிவித்தார்.

மக்களை கிளர்ச்சியில் ஈடுபடத் தூண்டும் என்று கூறியே இச் சுவரொட்டிகளை அகற்றி வருவதாகவும், சுவரொட்டிகளை ஒட்டியவர்களைக் கைதுசெய்து வருவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர் என விஜித ஹேரத் எம்.பி. தெரிவித்தார்.

இருந்தும் இந்த ஜனநாயக விரோத செயலை எதிர்த்து ஜே.வி.பி. மனித் உரிமை மீறல் வழக்கொன்றை தாக்கல் செய்யப்போவதாகவும் அவர் தெரிவித்தார். (சி)

---

# யாழில் இந்தியத் தூதரகக் கிளை: எதிர்வரும் 27இல் திறந்துவைப்பு

கொழும்பு, ஒக். 04

இலங்கைக்கான இந்தியத் தூதரகக் கிளை அலுவலகம் எதிர்வரும் 27ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது. யாழ். நகரின் பிரதான வீதியில் இந்த அலுவலகத்தை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா திறந்து வைக்கவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் ஊடகங்களுக்கு யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அனுப்பியுள்ள அறிக்கையிலேயே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அடுத்தடுத்துள்ள 3 கட்டடத் தொகுதிகளில் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளது. வெளிவிவகார அமைச்சின் செயலாளரால் தமக்கு விடுக்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரமே இந்த இந்தியத் தூதரக யாழ்ப்பாண அலுவலகத் திறப்பு விழாவுக்கான அறிவிப்பு விடுக்கப்படுகிறது என்றும் அவர் அவ்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

# வலி.மேற்கு துரித்துப்பிட்டியில் பனந்தோப்பு அமைக்கத் திட்டம்

மூளாய், ஒக். 4

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள துரித்திப்பிட்டியில் புதிய பனந்தோப்பு அமைப்பதற்கான விசேட திட்டம் ஒன்று மிக விரைவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேச செயலர் பிரிவில் பொன்னாலைக் கடலின் நடுவில் ஒரு சிறிய தீவு போன்ற பிரதேசமே இந்தத் துரித்திப்பிட்டி ஆகும். இப்பிரதேசத்திலேயே இப்புதிய பனந்தோப்பை அமைப்பதற்கான உத்தேசத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

இப்பகுதியில் சுமார் நாநூறு பரப்புக்கும் மேற்பட்ட நிலப்பரப்பு பாவனை எதுவுமின்றிக் கால்நடைகளின் மேய்ச்சல் தரவையாகக் காணப்படுகின்றது. இந்த நிலப்பரப்பைப் பயன்படுத்தியே இப்பனந்தோப்பு உருவாக்கப்படவுள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலரின் விசேட பணிப்புரைக்கமைய இச்செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளைப் பிரதேச செயலகத்தின் திட்டமிடற் கிளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. (ஐ-99)

---

# இரவு வேளைகளில் ஆடுகள் திருடப்படுகின்றன

வடமராட்சி, ஒக். 4

தென்புலோலி, குரும்பை கட்டி, காந்தியூர் ஆகிய கிராமங்களில் இரவு வேளையில் ஆலயங்களின் சூழலில் தங்கி நின்ற ஆடுகள் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளன.

கால்நடை வளர்ப்போரால் கட்டாக்காலிகளாக விடப்படும் ஆடுகள் இப்பகுதிகளில் உள்ள ஆலயச் சூழல்களில் தினமும் இரவு வேளையில் தங்கி நிற்பது வழக்கமாகும்.

ஆலயங்களில் தங்கி நின்ற ஆடுகளில் குறிப்பிட்ட எண்ணிக்கையான ஆடுகளைத் திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

இறைச்சி விற்பனைக்காக இந்த ஆடுகள் திருடப்பட்டிருக்கலாம் எனக் கிராமவாசிகள் நம்புகின்றனர். (ஐ-236)

---

# வாகன இறக்குமதி வரியில் மாற்றமில்லை

வாகன இறக்குமதி வரியில் எதுவித மாற்றமும் செய்யப்படமாட்டாது என்று அரசு நேற்று அறிவித்தது. இதுதொடர்பான பொய்யான தகவல்களை நம்பி ஏமாறவேண்டாம் என்று அரசு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போது நடைமுறையில் இருக்கும் வரி மாற்றமடையாமல் அவ்வாறே இருப்பதால் வாகனம் உள்ளிட்ட ஏனைய பொருட்களின் இறக்குமதியை இடைநிறுத்தவோ அல்லது அதிகரிக்கவோ திட்டம் எதுவும் இல்லை என்று நிதி அமைச்சின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர கூறினார்.

---

# யாழ். இந்துக் கல்லூரி விடுதி நூற்றாண்டு விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 4

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விடுதியின் நூற்றாண்டு விழா எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் வாரத்தில் கொண்டாடப்பட உள்ளது.

இந்த நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே பொதுஅறிவு, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளும் நடத்தப்பட உள்ளன. விடுதி மாணவர் களுக்கு இடையிலான விளையாட்டு நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

விடுதி மாணவர்களின் ஆக்கங்களுடன் நூற்றாண்டு விழா மலர் ஒன்றும் வெளியிடப்பட உள்ளது. இந்த மலருக்கான ஆக்கங்கள் பழைய விடுதி மாணவர்களிடம் கோரப்பட்டுள்ளன.

ஆக்கங்கள் மற்றும் விடுதியின் வரலாற்று ஆவணங்கள், படங்களை வைத்திருக்கும் பழைய மாணவர்களை அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

---

# கொழும்பு மாநகர சபையை அதிகார சபையாக மாற்றும் திட்டம் 'அவுட்'

கொழும்பு, ஒக். 4

கொழும்பு மாநகர சபையை அதிகார சபையாக மாற்றியமைப்பதற்கான திட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்க மாட்டாதென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் ஐக்கிய அமெரிக்காவுக்குத் தான் விஜயம் மேற்கொண்ட வேளையில் அங்கு வாழும் இலங்கைப் பிரஜை ஒருவரேதான் இந்த விவகாரம் பற்றித் தனக்குக் கூறியிருந்தாராம். அமெரிக்காவில் நடைமுறையில் இருந்துவரும் மாநகர சபை விதிமுறைகள் சிலவற்றை மேற்கோள் காட்டிக் கொழும்பு மாநகர சபையையும் அவ்வாறு மாற்றி அமைக்கலாமென அவர் தனக்கு ஆலோசனை வழங்கியதாகவும் ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

இந்த விவகாரம் தொடர்பாக ஊடகங்கள் பல்வேறு விமர்சனங்களை வெளிப்படுத்தியிருந்தது மாத்திரமல்லாமல் புதிய அதிகார சபையானது பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் பொறுப்பில் இருக்குமெனவும் அந்த ஊடகங்கள் கருத்து வெளியிட்டிருந்தன.

இந்த விடயம் உண்மை தானா எனக் கொழும்பிலுள்ள சிரேஷ்ட ராஜதந்திரி ஒருவர் அமைச்சர் கோத்தபாய ராஜபக்ஷவைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டுமுள்ளார்.

கொழும்பு மாநகர சபையை அதிகார சபையாக மாற்றும் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட மாட்டாதென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பகிரங்கமாகத் தெளிவுபடுத்தியுள்ளார். இதுபற்றி மக்களிடையே மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருப்பின் அவற்றைத் தெளிவுபடுத்தி உண்மை நிலையை எடுத்துக் கூற வேண்டும் என அமைச்சர்களுக்கு அறிவித்துள்ளார் - ஜனாதிபதி.

இது இவ்வாறிருக்கக் கொழும்பு நகருக்கு அதிகார சபையொன்றின் அவசியம் பற்றி செப்.12 - ''சண்டே ரைம்ஸ்'' இல் விளக்கிக் கூறப்பட்டிருந்தது. பல நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த கொழும்பு மாநகர சபையின் அதிகாரங்கள் முற்றுமுழுதாக இல்லாதொழிக்கப்பட்டுப் புதிய அதிகார சபைக்கேதான் முழுமையான அதிகாரங்களும் வழங்கப்படவுள்ளன எனவும் அமைச்சர் விமல் வீரவன்ஸவும் இப்புதிய அதிகார சபையை நியமிக்க விருப்பந் தெரிவித்துள்ளோர்களில் ஒருவராவாரெனவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. (சி)

---

# பள்ளிவாசலுக்கு முன்பாகவுள்ள கழிவு வாய்க்காலைத் திருத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 4

யாழ்.நகர் மானிப்பாய் வீதியிலுள்ள பெரிய முகைதீன் ஜும்மா பள்ளிவாசலுக்கு முன்பாகவுள்ள கழிவு நீர் செல்லும் வாய்க்கால் தடைப்பட்டுள்ளது. அதனைச் சீர் செய்வதற்கான உடனடி நடவடிக்கையை யாழ். மாநகர சபை மேற்கொள்ள வேண்டும் எனப் பள்ளிவாசல் நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது.

பள்ளிவாசலுக்கு முன்பாகவுள்ள கால்வாய் கழிவு நீர் செல்ல முடியாத வகையில் தடைப்பட்டுள்ளதனால் பள்ளி வாசலிலிருந்து வெளியேறும் கழிவு நீர் வீதிக்குப் பெருக்கெடுப்பதாக பள்ளிவாசல் நிர்ாவாகத்தினர் குறிப்பிடுகின்றனர்.

கடந்த 3 மாதத்துக்கு முன்னரே கழிவு நீர் செல்லும் வடிகாலைச் சீர்செய்து தருமாறு யாழ். மாநகர சபை முதல்வரின் கவனத்துக்கு இரண்டு முறை கொண்டுவரப்பட்டது. எனினும் இதுவரை அது துப்புரவு செய்யப்படவில்லை எனவும் நிர்வாகத்தினர் மேலும் தெரிவித்தனர். (ஐ-14)

### ஈகுவேடரில் வெடித்தது கலவரம்

# பொலிஸாரினால் சிறைபிடிக்கப்பட்ட ஜனாதிபதி சிறப்புப் படையால் மீட்பு

கொய்டோ, ஒக். 4

தென்னமெரிக்க நாடான ஈகுவேடரில் ரபேல் கொரேயா (வயது 47) ஜனாதிபதியாகவுள்ளார். சமீபத்தில் அவர் புதிதாக ஒரு சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றினார்.

இதற்கு அரச ஊழியர்கள் மத்தியில் எதிர்ப்புக் கிளம்பியது. குறிப்பாக இந்தச் சட்டத்தைப் பொலிஸார் கடுமையாக எதிர்த்தனர்.

இதனால் தங்களுக்குப் போதிய சலுகை கிடைக்காது எனத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்த நிலையில் நேற்று அனைத்து பொலிஸாரும் திடீரென கலவரத்தில் ஈடுபட்டனர்.

இதில், பொலிஸ்துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் முதல் கடைநிலை பொலிஸார் வரை ஈடுபட்டனர். வேலை நிறுத்தத்தில்ஈடுபட்ட அனைவரும்கொய்டொ நகரிலுள்ள விமான நிலையத்தைக் கைப்பற்றி அதை இயங்க விடாமல் முடக்கி வைத்தனர்.

மேலும் நெடுஞ்சாலைகளையும் கைப்பற்றி போக்குவரத்தைத் தடுத்து நிறுத்தினர். பொலிஸ் தலைமையகம் உள்ளிட்ட பல இடங்களில் போராட்டத்தில் ஈடுபட்டு வன்முறையில் இறங்கினர்.

இந்த நிலையில் ஜனாதிபதி ரபேல் கொரேயா உடல்நிலை பரிசோதனைக்காக வைத்தியசாலைக்குச் சென்றிருந்தார். அதை அறிந்த கலவரக்காரர்கள் வைத்தியசாலையை முற்றுகையிட்டு ஜனாதிபதி கொரேயாவை சிறைபிடித்தனர்.

தகவலறிந்த ஜனாதிபதி போராட்டத்தில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரிகளுடன் பேச்சுகள் நடத்த முயன்றார். அதற்கு மறுத்த அவர்கள் கண்ணீர் புகை குண்டுகளை வீசி தங்கள் கோபத்தை வெளிப்படுத்தினர்.

மேலும் சிறைபிடிக்கப்பட்ட ஜனாதிபதியை மிகவும் கீழ்த்தரமாக நடத்தினர். அவர் மீது தண்ணீரை பீச்சி அடித்து துன்புறுத்தினர். எனவே, கலவரத்தை அடக்கும் பொறுப்பு இராணுவத்திடம் விடப்பட்டது. அவர்கள் விரைந்து வந்து வைத்தியசாலையைச் சுற்றி முற்றுகையிட்டனர்.

இதைத் தொடர்ந்து இராணுவத்துக்கும், பொலிஸாருக்குமிடையே கடுமையான துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதற்கிடையே ஜனாதிபதியின் ஆதரவாளர்களும், பொதுமக்களும் பொலிஸாருக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில்ஈடுபட்ட பொலிஸாரை கல்லால் அடித்து விரட்டினர். இவற்றுக்கிடையே 12 மணிநேர போராட்டத்துக்குப் பின்னர் ஜனாதிபதி ரபேல் கொரேயா மீட்கப்பட்டார். பின்னர் அவர் பத்திரமாக அரண்மனைக்கு அழைத்தும் செல்லப்பட்டார்.

இதைத்தொடர்ந்து கலவரம் அடக்கப்பட்டது. இந்தத் துப்பாக்கிச் சண்டையில் ஜனாதிபதி கொரேயா சிறப்புப் பாதுகாப்புப் படையினர் 27 பேர் படுகாயமடைந்தனர். அரண்மனை திரும்பிய ஜனாதிபதி தன்னை மீட்ட இராணுவத்துக்கும், ஆதரவாளர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

தன்னைப் பார்க்க வந்த ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் பேசினார். அப்போது, தனது வாழ்க் கையில் இது ஒரு மிகவும் சோகமான நாள் எனத் தெரிவித்தார்.

உலக அரங்கில்

# அமெரிக்க ஏவுகணைத் தாக்குதலில் பாகிஸ்தானில் 18 தீவிரவாதிகள் பலி!

இஸ்லாமாபாத், ஒக். 04

பாகிஸ்தானின் வடமேற்கு மாகாணத்தில் வடக்கு வசிரிஸ்தான் பகுதியில் அல்- குவைதா தீவிரவாதிகள் பதுங்கியுள்ளனர். அவர்களை அழிக்கும் பணியில் அமெரிக்க இராணுவம் ஈடுபட்டுள்ளது.

அங்குள்ள தத்தாஹெல் கிராமத்திலுள்ள வீடுகளில் தீவிரவாதிகள் பதுங்கியிருக்கின்றனர் எனத் தகவல் கிடைத்தன.

இதைத் தொடர்ந்து சனிக்கிழமை அந்த வீடுகளின் மீது அமெரிக்க இராணுவம் விமானி இன்றி ரிமோட் மூலம் இயக்கப்படும் ஆளில்லா விமானங்கள் மூலம் ஏவுகணை வீசி தாக்குதல் நடத்தியது.

முதலில் 2 ஏவுகணைகளும், அடுத்து 4 ஏவுகணைகளும் வீசப்பட்டன. இதில் வீடுகள் இடிந்து தரைமட்டமாயின. வாகனங்கள் தீயில் எரிந்தன. இச்சம்பவத்தில் 18 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இந்தத் தகவலை உளவுத் துறை அதிகாரிகள் தெரிவித் தனர். கடந்த மாதம் மட்டும் இப்பகுதியில் 25 தடவைகள் அமெரிக்க ஆளில்லா விமானங்கள் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளன.

இதில் 150 பேர் பலியாகியுள்ளனர். இதில் தீவிரவாதிகளுடன் சேர்ந்து பொதுமக்களும் அடங்குவர். சமீபத்தில் நடந்த தாக்குதலில் பாகிஸ்தான் இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள அமெரிக்கப் படைகளுக்கு உணவுப் பொருட்கள் கொண்டு செல்லும் வாகனங்கள் பாகிஸ்தான் வழியாகச் செல்ல தடைவிதிக்கப்பட்டது.

இருந்தும் மீண்டும் ஏவுகணை வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இம்மாதத்தில் ஆளில்லா விமானங்கள் மூலம் நடத்தப்படும் முதல் ஏவுகணைத் தாக்குதல் இதுவாகும்.

# இரு ரயில்கள் நேருக்கு நேர் மோதல்; இந்தோனேசியாவில் 36 பேர் மரணம்

பெமாலங், ஒக். 04


இந்தோனேசியாவில் இரு ரயில்கள் மோதி விபத்துக்குள்ளானதில் 36 பேர் உயிரிழந்தனர்.

ஜாவா தீவிலுள்ள பெதருகான் பெமாலங் ரயில் நிலையத்தில் சனிக்கிழமை அதிகாலை இந்த விபத்து நடந்தது.

ரயில் நிலையத்தில் நின்று கொண்டிருந்த ரயிலின் பின்புறம் மற்றொரு பயணிகள் ரயில் வேகமாக வந்து மோதியது. இதில் முன்புறம் நின்ற ரயிலின் கடைசிப் பெட்டியில் பயணம் செய்த பயணிகளில் 36 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். மேலும் பலருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது.

இரு ரயில்களும் மோதிக் கொண்டதும் பலத்த சப்தம் கேட்டது. அதிகாலை நேரம் என்பதால் பெரும்பாலான பயணிகள் தூங்கிக் கொண்டிருந்தனர். இதனால் என்ன நடந்தது என்பதே அவர்களுக்குப் புரியவில்லை.

விபத்தில் சிக்கிய பயணிகள் மரண ஓலம் எழுப்பினர். இந்தச் சப்தம் கேட்டு ஓடிவந்த ரயில்வே பாதுகாப்புப் படையினர் விரைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.



இலேசாகக் காயமடைந்தவர்கள், பலத்த காயமடைந்து உயிருக்குப் போராடியவர்கள் ஆகிய அனைவரையும் மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்த்தனர்.

இந்த விபத்து போக்குவரத்து மேலாண்மையில் ஏற்பட்ட தவறால் நிகழ்ந்துள்ளது என்று அரசு தெரிவித்துள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் ஜாவா ரயில் பயணிகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதன் பின்னணியில் தீவிரவாத சதி ஏதும் இருக்கிறதா என்பதைத் தீர விசாரிக்கவேண்டும் என்று அவர்கள் அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆனால், இந்த விபத்தின் பின்னணியில் தீவிரவாத சதி ஏதும் இல்லை. இது போக்குவரத்து மேலாண்மையில் ஏற்பட்ட தவறுதான் என்று அரசு திட்டவட்ட மாகத் தெரிவித்துள்ளது.

# முஸ்லிம் நாடுகள் பாகிஸ்தானுக்கு சிறியளவு உதவி செய்யவில்லை

## ஒலிநாடாவில் ஒசாமா தெரிவிப்பு

கெய்ரோ, ஒக். 04

''பாகிஸ்தான் வெள்ள நிவாரணப் பணியில் முஸ்லிம் நாடுகள் போதுமான உதவிகளைச் செய்யவில்லை" என்று தீவிரவாதி ஒசாமா பின்லேடன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பாகிஸ்தானில் சமீபத்தில் வெள்ளம் ஏற்பட்டு ஏராளமானோர் உயிரிழந்தனர். பல்லாயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டனர். அங்கு பல்வேறு நாடுகளின் நிதியுதவி மூலம் நிவாரணப் பணிகள் நடந்து வருகின்றன.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை வெள்ள நிவாரணம் பற்றி முதன் முறையாக, பின்லேடன் பேசிய ஒலிநாடா வெளியிடப்பட்டது.

மொத்தம் 11 நிமிடங்கள் ஓடும் இந்த ஒலிநாடாவில், ''வெள்ள நிவாரணப் பணியில் பாகிஸ்தான் அரசு சரியாக செயல்படவில்லை. உலகளவில் இயற்கைப் பேரிடர்கள், போர்களால் பாதிக்கப்படும் முஸ்லிம்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஒரு தனி அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்'' என்று, பின்லேடன் குறிப்பிட்டிருந்தார்.

இந்த இணையதள ஒலிநாடா வெளியிடப்பட்ட 24 மணி நேரத்துக்குள், ஞாயிற்றுக்கிழமை அமெரிக்கப் புலனாய்வு அமைப்பொன்றால் மற்றொரு இணையதள ஒலிநாடா வெளியிடப்பட்டது.

அதில், பின்லேடன் உருவமும், வெள்ளக் காட்சிகளும் காட்டப்பட்டுள்ளன. அவற்றின் பின்னணியில் பின்லேடன் பேசுவது போன்ற ஒரு குரல் ஒலிக்கிறது.

அதில்,''பாகிஸ்தான் வெள்ள நிவாரணத்துக்கு முஸ்லிம் நாடுகள் போதுமான உதவி செய்யவில்லை. ஊடகங்கள் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்பை, சரியான முறையில் மக்களிடம் எடுத்துச் சொல்லவில்லை'' என்று அந்தக் குரல் குற்றஞ்சாட்டியது.



பிரேஸிலில் இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதிப் பதவிக்கான தேர்தலில் போட்டியிடும் கிரீன் பார்ட்டியை சேர்ந்த மரினா சில்வா(வலது) ரியோடிஜெனிரோ நகரில் தமது ஆதரவாளர்களைச் சந்தித்து கைகுலுக்குகிறார்.

# நைஜீரிய சுதந்திரதின விழாவில் குண்டுவெடிப்பு; ஜனாதிபதி அருந்தப்பு

அபுஜா, ஒக். 04

நைஜீரியாவில் நடந்த குண்டு வெடிப்பில் பலியானவர்களின் எண்ணிக்கை 15 ஆக உயர்ந்துள்ளது.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் 50ஆவது சுதந்திரதினம், தலைநகர் அபுஜாவில் வெள்ளிக்கிழமை கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

இந்த விழாவில், இந்திய கம்பெனி விவகாரத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தலைமையிலான இந்தியக் குழு, பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத் உள்ளிட்ட 15 நாடுகளின் தலைவர்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

நைஜீரிய ஜனாதிபதி குட்லக் ஜோனாதன், இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டிருந்தபோது, அவருக்கு அருகில் 40 அடி தூரத்தில் திடீரென குண்டு வெடித்தது.

மேலும், அருகேயுள்ள நீதிமன்ற வளாகத்திலும் அடுத்தடுத்து இரண்டு குண்டுகள் வெடித்தன. இந்தச் சம்பவத்தில் 15 பேர் உயிரிழந்தனர்; 22 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில், ஜனாதிபதி ஜோனாதன் அதிர்ஷ்டவசமாகக் காயமின்றி உயிர் தப்பினார்.

நைஜீரியாவில் செயல்பட்டு வரும் 'மெண்ட்' என்ற பயங்கரவாத இயக்கம், குண்டுவெடிப்புகளை நடத்தியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

ஐ. நா. செயலாளர் நாயகம் பான் கீ- மூனும், அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்களும் இந்தக் குண்டுவெடிப்புக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

# டைட்டானிக் மூழ்கியதற்கு கப்பல் மாலுமியே காரணம்.

## துணைக் கப்டனின் பேர்த்தி தெரிவிப்பு

டைட்டானிக் கப்பல் மூழ்கியதற்கு மாலுமியே காரணம் எனப் பரபரப்பு தகவல்கள் வெளியாகியுள்ளன.

டைட்டானிக் உல்லாசக் கப்பல் நடுக்கடலில் மூழ்கிய தினம், கடந்த நூற்றாண்டின் கறுப்புத் தினமாகக் கருதப்படுகிறது. விபத்துக்கான காரணம் குறித்து இதுவரை எந்த தகவலும் வெளியிடப்படாமல், இரகசியம் காக்கப்படுகிறது. இந்த நிலையில், மாலுமியின் தவறான முடிவுகளால் கப்பல் விபத்துக்குள்ளானது என சமீபத்தில் வெளியான 'குட் இஸ் கோல்ட்' என்ற புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புத்தகத்தை டைட்டானிக் கப்பலில் துணை கெப்டனாக இருந்த சார்ள்ஸ் லைட்டோலர் பேத்தி லூயிஸ் பேட்டன் எழுதியுள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:-

பனிப்பாறை இருப்பது குறித்து இரண்டு கடல்மைல் தொலைவுக்கு அப்பால் வரும்போதே கப்பல் கெப்டன் வில்லியமுக்குத் தெரிந்திருந்தது. உடனடியாக கப்பலை மாற்றுப்பாதையில் செலுத்த அவர் உத்தரவிட்டார். பனிப்பாறையில் மோதாமல் கப்பலை மாற்றுப் பாதையில் செலுத்துவதற்குப் போதுமான கால அவகாசம் இருந்தது. ஆனால் கப்பலை செலுத்திய மாலுமி பதற்றமடைந்து, தவறான பாதையில் செலுத்தினார்.

இத்தகவலை கப்பல் கெப்டனுக்கு கடைசி நேரத்தில் தெரிவித்து விட்டு, சரி செய்ய முயன்றார். ஆனால், அதற்குள் கப்பல் பனிப்பாறையில் மோதிவிட்டது.

இரண்டாவது தவறு, பனிப்பாறையில் மோதிய இடத்தில் கப்பலில் ஓட்டை விழுந்து தண்ணீர் உள்ளே புகுந்தது. கப்பலின் நீராவி இன்ஜினை மாலுமி, தொடர்ந்து இயங்க செய்திருந்தால், உள்ளே புகுந்த தண்ணீர் ஆவியாகி, கப்பல் மூழ்க அதிக நேரம் பிடித்திருக்கும்.

இதன் மூலம், மேலும் ஏராளமான பயணிகளைக் காப்பாற்றி இருக்க முடியும். இவ்வாறு லூயிஸ் தெரிவித்துள்ளார்.

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## கிளிநொச்சிப் பெருவிழாவால் மக்களுக்கு பயன் ஏதும் உண்டா?

வன்னியில் நேற்றுமுன்தினம் கடும்மழை பெய்தது. இரண்டு வாரங்களுக்கு முன்னரே கிளிநொச்சி உட்பட வன்னிப் பெருநிலப்பரப்பின் எல்லாப் பகுதிகளிலும் மாரி மழை ஆரம்பமாகியது. சனிக்கிழமை தொடங்கிய கடும் மழையினால் வன்னி நிலப்பரப்பு எங்கும், மீளக்குடியேறி கூடாரங்களில் வாழும், இல்லை, இல்லை வசிக்கும் எமது மக்கள் பெரும் சிரமங்களை அனுபவிக்கின்றனர். மொத்தத்தில் அடிப்படை வாழ்விட வசதிகள் இல்லாமல், பாதுகாப்பற்ற வீடுகளில், கட்டாந்தரைகளில், தடிகள் மீது தெந்தட்டில் கொழுவிய தறப்பாள் வீடுகளில், எழுத்தில் வடிக்க முடியாத அளவுக்கு இம்சைப்படுகின்றனர்.

இப்போது வாய்க்கால்கள், ஆறுகள், பெருக்கெடுக்கத் தொடங்கியுள்ளன. அவை தமது கொட்டகை உள்ள வளவுகளுக்குள் புகுந்தால் போரின்போது உயிர் தப்பிப்பிழைத்தவர்கள் இனிமேல் வாழ்வதிலும் சந்தேகம் கொள்ளத் தொடங்கும் வேளை இது. ஒவ்வொரு கணமும் பதற்றத்துடன் நிமிடங்களை கழித்துக் கொண்டு இருக்கிறார்கள். மழைகாலம் தொடங்கினால், அவர்கள் சீரழிந்த வாழ்க்கை வாழ நேரிடும் என்பது அரசாங்கத்துக்கும் அதிகாரிகளுக்கும் தெரியாதது அல்ல.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டு இன்று முடிவுறும் வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் மற்றும் வடக்கு கல்வி அமைச்சு என்பவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலக்கியப் பெருவிழாக் குறித்துச் சில கருத்துக்களை முன்வைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இந்த விழாவை இவ்வேளையில், கிளிநொச்சியில் அதுவும் இந்த மாரிமழை நேரத்தில் நடத்துவது அத்தியாவசியம் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கருதியதும் மாநாட்டை அங்கு நடத்துவதும் எந்த வகையிலும் பொருத்தமற்றது.

வன்னி மக்கள் - அங்கு ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த மக்கள் -

* கடந்த 2009 ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் பட்ட அவலங்கள் -
* தமது உயிரைக் கையில் பிடித்துக்கொள்வதற்கு அனுபவித்த கஷ்டங்கள் -
* தத்தமது குடும்ப உறவுகளைப் பிரிந்த சோகத்தில் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கும் பரிதாபத்துக்குரிய நிலை -
* ஒருவருட காலத்துக்கும் கூடுதலாக முட்கம்பி வேலிகளில் அடைத்து வைக்கப்பட்டதால், உடல், உள ரீதியாக அவர்களுக்கு ஏற்பட்ட தாக்கங்கள், பாதிப்புக்கள் -
* அவர்களை மீளக்குடியேற்றுவதில் உண்டான தாமதத்தால், காட்டப்பட்ட தாமதத்தால், அவர்கள் மெனிக்பாம் முகாம் போன்றவற்றில் கைதிகள் போன்று நடத்தப்பட்டதால் அவர்களுக்கு ஏற்பட்ட மனஉளைச்சல் மற்றும் நோய் நொடிகளால் உண்டான எண்ணற்ற தாக்கங்கள், பாதிப்புக்கள் -

மொத்தம் பதினெட்டு மாதங்களுக்கும் அதிகமாக மேற்கூறப்பட்ட தாக்கங்களினால் நொந்து, நொடிந்து நூலாகிப் போன வன்னி உடன்பிறப்புக்கள் மீள்குடியேறி அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் அல்லாடிக் கொண்டிருக்கும் -

இத்தருணத்தில், -

இலக்கியப் பெருவிழா அத்தியாவசிமான ஒன்றுதானா? எமது இலக்கியத்தின் பெருமைகளைப் பேசவும், அவை குறித்த அறிவையும், ஆர்வத்தையும் பெருக்கவும், மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தவும் இதுவா தருணம்? இந்த விழாவிலும் அதன் அம்சங்களிலும் அக்கறை கொள்ளும் நிலையிலா அந்தச் சகோதரர்கள் உள்ளனர்?

அல்லது -

இந்த விழாவை, இந்த வேளையில் கிளிநொச்சியில் வைப்பதால் தமக்குக் கிடைக்கக்கூடிய மெய்ச்சுதல் சான்றிதழ்கள் ஏனைய அனுகூலங்கள், சலுகைகள் பறிபோய்விடும் என்ற அச்சத்தினால் இலக்கியப் பெருவிழாவை நடத்த முற்பட்டார்களா?

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் இலக்கியப் பெருவிழாவை நடத்திட, ஆளுநர் விருதுகளை வழங்கி தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்கும் மேலாக இந்த விருதுகளையும், விளம்பல்களையும் ஏற்றிப் போற்றினார்கள் என்ற காரணத்தினால் வரிசையில் அடுத்ததான கிளிநொச்சியில் நடத்தி தமது செயல் திறனை நிரூபிக்க முனைந்தார்களா?

தமது எதிர்காலத்தை எவ்வாறு முந்திய நிலைக்கு மீள்விப்பது என்று தெரியாது, திக்குத் தெரியாத காட்டில் சிக்கியவர்கள் போலத் தவித்து அல்லற்படும் மக்கள் மத்தியில் இத்தகைய ஒரு விழாவை நடத்தி விட்டு -

இறுதியில் போர் நடைபெற்ற இரண்டு (வன்னி) மாவட்டங்களில் ஒன்றான கிளிநொச்சி மாவட்ட மக்கள் சர்வ சாதாரண நிலைக்கு மீண்டுவிட்டார்கள். பருவ மழையின் மத்தியிலும் இலக்கியப் பெருவிழாவுக்குப் பெருந்திரளாக வந்து பயனடைந்தார்கள் - என்று அரசாங்கம் பீற்றிக் கொள்ளும் என்று பெருவிழாவை கிளிநொச்சியில் நடத்த இடம் தெரிவு செய்யதவர்களுக்குத் தெரியாது போனது ஏனோ?

அரசாங்கத்தினதும் அதிகாரிகளினதும் மனதில் உதித்த கிளிநொச்சி இலக்கியப் பெருவிழா வர்ணபகவானுக்கும் இறைவனுக்கும் கூட தப்பெனத் தெரிந்துதான் மக்கள் கூட்டம் திரளாமல் பொலிவற்றுப் போகச் செய்தனரோ என்னவோ....!

விழா நடைபெற்ற இடத்தின் பொருத்தப்பாடற்ற நிலையும் மழையின் சீற்றமும் மாநாட்டில் கலந்துகொண்ட பேராளர்களில் பலரிடமும் ஒருவகை அதிருப்தியை ஏற்படுத்தி இருந்ததாகவும் தகவல்கள்.

அடைமழை காலத்தில் போரினால் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்ட மக்கள் மீளக்குடியமர்ந்து ஒரு சில மாதங்களில், இப்படியொரு "பெரு விழா" தேவைதானா? இதனை ஏற்பாடு செய்தவர்களின் சிந்தனையும் சித்தாந்தமும் இந்த அளவுக்கு மழுங்கிப் போனதற்கு யார் என்ன செய்யலாம்? கழிவிரக்கமும் பயனற்றதே!

**ஞாலம் கருதினும் கைகூடும், காலம்**
**கருதி இடத்தால் செயின்** - என்ற வள்ளுவன் மொழியை கருத்தில் கொள்ள விழா அமைப்பாளர்களும் அவர்களைத் தூண்டிய அரசாங்கமும் மறந்தது ஏனோ...?

# அன்று நாட்டின் சிறந்த இராணுவத்தளபதி இன்றோ சிறையில் தரையில் படுக்கும் நிலையில்

*நேற்று 03.10.2010 ஆம் திகதி 'சண்டே ரைம்ஸ்' எழுதியிருந்த அரசியல் விமரிசனத்திலிருந்து ஒரு பகுதி இது.*

கடந்தவாரம் வியாழக்கிழமை நள்ளிரவுவேளை முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா உயர்பாதுகாப்புள்ள வெலிக்கடைச் சிறைச்சாலையில் விடுதி 'எஸ்' என்று அடையாளப் படுத்தப்பட்டுள்ள அறையில் அடைக்கப்பட்டார். பொன்சேகா இப்பொழுது கைதி இலக்கம் 0/22032 என்றே குறிக்கப்படுகிறார். தேசிய உடைமாற்றப்பட்டு, வழமையான சிறைக்கைதிகள் அணியும் உடையை அணிகின்றார். சிமெந்துத் தரையில் ஒருபாயில் படுக்கிறார். ஒரே ஒரு தலையணைதான் வழங்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை காலை 5 மணிக்கு அவர் ஏனைய கைதிகளைப் போலவே எழுப்பப்பட்டார். அவரது அறையில் கழிப்பிடம் இருக்கிறது. ஆனால் தண்ணீர் குழாய் ஒழுங்கில்லையென்று அவர் புகார் தெரிவித்தார். சிறைவிடுதிக்கு வெளியில் உள்ள கிணற்றுக்கு அவர் நடக்க வேண்டியிருந்தது. அங்கு குளிப்பதற்கோ, முகம் அலம்புவதற்கோ தண்ணீரை ஒரு வாளியில் அள்ளிக் கொள்ள வேண்டியிருந்தது. பின்னர் ஓர் உலோகத்திலான பாத்திரத்தை ஒரு கையிலும்இன்னொரு பாத்திரத்தை மறுகையிலும் ஏந்தியபடி காலை உணவுக்காக ஏனைய குற்றவாளிகளுடன் வரிசையில் நின்றார். அன்று காலை உணவு, சோறும் தேங்காய்ச் சம்பலுமாகும். தினசரி கடமைகள் அதிகாரிகளால் வழங்கப்படுவதற்கு முன்னராக ஒரு மருத்துவர் அவரை பரிசோதனை செய்தார். தையற்காரர்கள் அவருக்கு புதிய சிறை ஆடைகள் வழங்குவதற்காக அளவு எடுத்துக் கொண்டார்கள்.

அன்று மதியமும் உணவுக்காக அவர் முன்போலவே உலோகக் கோப்பை, பாத்திரத்தோடு மற்றவர்களோடு வரிசையில் நின்றார். பகலும் சோறுதான். பீர்க்கங்காயில் நீர்ப்பதமான ஒரு கறி, பருப்பு, மரக்கறிச் சுண்டல், ஒரு சிறு துண்டு மீன் மற்றும் ஆணம் இத்தியாதி வழங்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் மீண்டும் தம் அறைக்குத் திரும்பி பிற்பகல் 2 மணிவரை இருந்தார். சிறிது நேரம் ஓய்வுக்குப் பின் மீண்டும்வெளியில் அழைத்துச் செல்லப்பட்டு இரவு 7 மணிக்குத் திரும்பினார். இத்துடன் வெளிச்சம் நிறுத்தப்பட்டு அடுத்த நாள் விடியும் வரை இருட்டிலேயே படுத்திருக்க வேண்டும்.

இதுதான் இனி முன்னாள் இராணுவ தளபதிக்கான தினசரி வேலைகள்.

அவர்தான் கடந்த வருடம் மே மாதம் புலிப் போராளிகளைத் தோற்கடிதத்தவர். இராணுவத்தின் 61 வருடகால சரித்திரத்தின் சேவையில் இருக்கும்போதே பதவி உயர்த்தப்பட்டவர். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சிக் கூட்டமைப்புத் தலைவர்களிடமிருந்து பல விருதுகளைப் பெற்றவர். உலகிலேயே திறமைமிக்க ராணுவத் தளபதி என்று புகழப்பட்டவர். அவரைக் கௌரவிப்பதற்காக ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் பொது வைபவங்கள் எல்லாம் நிகழ்த்தப்பட்டன. பொன் சேகாவின் மிகச் சிறந்த ராணுவ வியூகங்களும் போர் வெற்றிக்கு பேருதவி புரிந்துள்ளன என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. பொன்சேகாவின் இரக்கமின்மை, அகங்காரம் போன்ற குணங்கள் ராணுவத்துக்குள்ளே மட்டுமின்றி வெளியிலும் அவருக்கு எதிரிகளை உருவாக்கிக் கொடுத்தன என்பதிலும் சந்தேகமில்லை. தமக்கு விருப்பமில்லாத ஊடகத்தினருக்கும் சிம்ம சொப்பனமாக அவர் விளங்கியுள்ளார்.

கடந்த புதன்கிழமை நியுயோர்க்கிலிருந்து திரும்பியதன் பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரண்டாவது ராணுவ நீதிமன்றம் அளித்திருந்த தீர்ப்பில் கையெழுத்திட்டார். 12 பக்கங்கள் கொண்ட அந்த ஆவணத்தில் தமது அதிகாரப்பூர்வ முத்திரையை ஆங்கிலத்தில் இட்டு சிங்களத்தில் கையொப்பம் வைத்தார் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்களிலிருந்து அறிய முடிந்தது.

வெள்ளிக்கிழமை பின்னேரம் திருமதி பொன்சேகா தமது கணவரை சிறையில் சென்று பார்த்தார். அவர் திரும்பி வந்தபோது சிறை அதிகாரிகளால் தம்மிடம் தரப்பட்டிருந்த கணவரின் தேசிய உடையை நிருபர்களுக்கு காண்பித்து 'பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டியமைக்காக அவர் (பொன்சேகா) பெற்றுக் கொண்டவை இது தான்' என்று கூறினார்.

முதலாவது பொது ராணுவ நீதிமன்றம் பொன்சேகாவின் சீருடையை அகற்றியது என்றால் இரண்டாவது நீதிமன்றம் அவருடைய தேசிய உடையை அகற்றிவிட்டது எனலாம்.

வியாழக்கிழமை திருமதி பொன்சேகா அவசரமாக அழைக்கப்பட்ட பத்திரிகையாளர் கூட்டமொன்றில் பேசிய திருமதி பொன்சேகா; 30 வருடகால யுத்தத்தை ஒழித்து பொதுமக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கு வழிசமைத்த எனது கணவருக்குக் கிடைத்துள்ள கைமாறு சிறைத்தண்டனை

## முறைப்படி மன்னிப்புக் கேட்டால் ஜனாதிபதி ஆலோசிக்கத் தயார்

யாகும் என்று குறிப்பிட்டார். இந்த சிறைத் தண்டனை ஆயுதப்படைகளை இழிவுபடுத்தும் செயலாகும். இந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று அவர்களுக்கு நான் வேண்டுகோள் விடுக்கின்றேன். ஜனாதிபதி இந்தத் தீர்ப்பை எழுதியுள்ளார். அவர் விருப்பப்படியே அது வழங்கப்பட்டுள்ளது என்றார் அவர். அவர் மேலும் கூறுகையில்; ராணுவ நீதிமன்றத்தின் உறுப்பினர்கள் ராணுவ உடைதரித்த பொம்மைகள். இதுவும் கூட ஆயுதப் படையினருக்கு இழிவு ஏற்படுத்துவதாகும். இந்தத் தீர்ப்பில் மன்னிப்பு வழங்கும்படியாக ஜனாதிபதிக்கு நாங்கள் விண்ணப்பம் செய்யப் போவதில்லை. ஆனால் நாம் சட்ட முறைகளை நாங்கள் அனுசரிப்போம் என்றார். அவர் மீதான தீர்ப்பை வழங்க வேண்டாம் என்று வணக்கத்துக்குரிய மகாநாயக்க தேரர்களும் ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்டார்கள். அந்தக் கோரிக்கையையும் கூட ஜனாதிபதி ஏற்கவில்லையென்று அனோமா பொன்சேகா கூறினார்.

இருந்தாலும் வியாழக்கிழமையன்று அரச ஊடக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல பத்திரிகையாளர் கூட்டத்தில் பேசியபோது, நாட்டின் சட்டங்களுக்கு அமைவாகவே இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதே சட்டத்தை இலங்கையின் 4500 ராணுவத்தினர் மீது பொன்சேகா செயல்படுத்தியிருக்கிறார் என்றார்.

நாட்டின் அரசமைப்புக்கு இசைவாக அவர் நாடாளுமன்ற ஆசனத்தையும் இழப்பார் என்று கூறிய அமைச்சர் அதனை விவரித்துக் கூறவில்லை. அதனால் ராணுவ சட்டத்தின்படி உறுதிப்படுத்தும் அதிகாரியாக ஜனாதிபதி இருப்பதால் ராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பையும் அது விதித்துள்ள தண்டனையையும் சபாநாயகர் நாமல் ராஜபக்ஷவுக்கு அறிவிப்பார் என்ற கருத்து உருவாக ஏதுவாயிற்று. அவ்வாறாயின் இப்போது ராணுவ நீதிமன்ற தீர்ப்பையும் தண்டனையையும் எதிர்த்துப் பொன்சேகாவின் சட்டத் தரணிகள் நீதிமன்றத்துக்குச் செல்ல எடுத்திருக்கும் முயற்சிகளை தயக்கமுறச் செய்வதாய் இருந்திருக்கும்.

சபாநாயகர் தொடர்ந்தும் பொன்சேகா நாடாளுமன்ற உறுப்பினராய் இருக்க முடியாதென அறிவிப்பாராயின், ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் அடுத்த வேட்பாளரான லக்ஷ்மன் நிபுணாராச்சிக்குக் கிடைக்கும், பட்டியலில் அடுத்தபடியாக ஜயந்த பெரேரா, சஞ்சிப் கந்தனராச்சி, அஜித்குறே, வட்டகல மற்றும் 18 பேர் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் ஒரு சேர மறுத்தால் மாத்திரமே வேறு ஒருவரை மாற்றாக கட்சி நியமிக்க முடியும். இல்லாவிடத்து தமது கணவருக்கு மாற்றாக தாம் நியமிக்கப்பட வேண்டுமானால் அனோமா பொன்சேகாவுக்கு உள்ள ஒரே வழி ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் மற்ற உறுப்பினரான ரிரான் அல்லஸ் தமது பதவியை ராஜினாமா செய்தால் மட்டுமே சாத்தியமாகும்.

இப்போதைய நிலையில் அனோமா பொன்சேகா மாதம் ஒரு தடவை மட்டுமே தமது கணவரை சிறையில் சென்று பார்க்க முடியும். ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தினசரி மாலை 6 மணி வரை சென்று பார்க்கும் உரிமை உடையவர்கள்.

பொலன்னறுவ ஸ்ரீ பிரியதர்ஷனராமய பௌத்தாலய தேரர்களை அண்மையில் ஜனாதிபதி பொலன்னறுவையில் சந்தித்துப் பேசினார். அந்த ஆலயத்தின் பிரதம தேரர் வண. ஹபரண ரத்தன தம்ம முன்னாள் இராணுவத் தளபதி மீதான தீர்ப்பை வரவேற்பதாகவும் ஆட்சேபனை இல்லையென்றும் தெரிவித்தார். பொன்சேகா நாட்டின் தலைமைப் பதவிக்கு வந்திருந்தால் ராஜபக்ஷாக்களுக்கு என்ன நடந்திருக்கும் என்பது தங்களுக்குத் தெரியும் என்று அவர் கூறியுள்ளார்.

அதற்கு ராஜபக்ஷ பதிலளித்தபோது; பின்வருமாறு தெரிவித்திருந்தார். 'அரசியல் பழிவாங்கலில் ஈடுபடும் நபர் நானல்ல. தேர்தல் மேடைகளில் பழிவாங்கும் முறையில் என்னதான் பேசப்பட்டாலும் அந்த முறையில் நான் ஒருபோதும் பேசியதில்லை. ராணுவத்தின் ஒழுக்கத்தை நிலைநாட்டுவதற்காக ராணுவத்தின் தலைவன் என்ற முறையில் நான் நடந்து கொண்டுள்ளேன். அவை அனைத்தும் சட்டப் பூர்வமான செயற்பாடுகள் என்றார். அவர் மேலும் கூறுகையில்; மன்னிப்புவழங்குவதற்குஅரசமைப்பு ரீதியில் ஒருமுறை இருக்கின்றது. மன்னிப்புக் கோரப்பட்டால் அது பற்றி ஆலோசிக்க நான் தயாராய் இருக்கிறேன்.

செப்ரெம்பர் 17 ஆம் திகதி மூன்று பேர் அடங்கிய பொது ராணுவ நீதிமன்றத்தின் ஆயம் மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் தலைமையில் பொன்சேகா குற்றவாளி என்ற தீர்ப்பை வழங்கியது. விசாரணையின் இறுதிக் கட்டத்தில் பொன்சேகா நீதிமன்றத்தின் சில விடயங்களைக் கூற விரும்புவதாக அது சட்டத்தரணி கூறியதையடுத்து அதற்கு அனுமதியளிக்கப்பட்டது. அப்போது பொன்சேகா கூறியதாவது.

கடந்த ராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பை நான் ஏற்கவில்லையென்று கூறினேன். நீதி வழங்கப்பட்டதாக நான் நினைக்கவில்லை. இங்கு ஒருபோதும் நீதி செய்யப்படவில்லை. அது வெறுப்பூட்டுவதாகவே இருந்தது. முழு செயற்பாடுகளும் நீதியாக இருக்கவில்லை.

முதலில் ஆங்கிலத்தில் சிலவற்றைக் கூறிவிட்டு அவர் சிங்களத்தில் நீண்ட உரை நிகழ்த்தினார். நியாயமாக எதுவும் நடக்க வில்லையென்று கூறிய அவர் சில

**தமிழில்: கோகுலன்**

அதிகாரிகளை கடுமையாகக் கண்டித்தார். எனது நடத்தை அவமானத்துக்குரியதாக இருந்தது என்று குற்றஞ்சாட்டப்பட்டது. அதே சமயம் சில சிரேஷ்ட அதிகாரிகள் அரசு நடத்தும் தொலைக்காட்சிகளில் தோன்றி ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் பகிரங்கமாக அரசியலில் ஈடுபட்டிருந்துள்ளார்கள். அவர்களின் நடத்தை அவமானத்துக்குரியதாகும் என்றார். நான்காவது ஈழப்போரின் போது 5200 ராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 27 ஆயிரம் பேர் காயமடைந்தனர் என்றார். 23 ஆயிரம் புலிகள் கொல்லப்பட்டனர். 11 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர் என்றார்.

முன்னர் பத்திரிகை பேட்டிகளில் ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் கொல்லப்பட்ட புலிகளின் எண்ணிக்கை பற்றி அவர் கூறியிருந்த எண்ணிக்கைக்கும் இப்போது தெரிவித்துள்ளதற்கும் நிறைய முரண்பாடு காணப்படுகின்றது. முன்னர் 4000 பேருக்குமேல் கொல்லப்படவில்லையென்று கூறியிருந்தார். ஆனால் இராணுவ நீதிமன்றில் அவர் கூறியதன்படி கொல்லப்பட்டவர்களும் காயமுற்றவர்களும் ஏறத் தாழ 34 ஆயிரம் ஆகின்றனர். போர் ஆரம்பித்த காலத்தில் இருந்த ராணுவத்தின் தொகையைவிட இது 5 மடங்கு அதிகமாகும்.

அவர் மேலும் கூறினார் தவறு இழைத்திருந்தால் சிறைக்குச் செல்ல நான் அஞ்சியிருப்பேன், தவறு செய்யாமல் சிறைக்குச் செல்வதில் நான் அஞ்சவில்லை. பயமில்லாமல் 100 சிறைகளுக்கும் நான் போவேன் என்பதை அனைவரும் அறிய வேண்டும். சிறையில் நீண்டகாலம்இருக்க நான் தயங்கவில்லை. பிரபாகரனைக் கொன்று விடுதலைப் புலிகள் அமைப்பையும் அழித்ததன் மூலம் எனக்கு இது கிடைத்திருக்கிறது. அதேபோல் நான் சிறையில் இருந்தாலும் அநீதியை எதிர்த்துப் போராடுவேன். போராடி நான் வெல்லுவேன்' என்று கூறினார்.

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 19 | 05.10.2010 செவ்வாய்க்கிழமை |
| திதி: | துவாதசி பி.ப 08.02 வரை |
| நட்சத்திரம் | மகம் மு.ப. 11.25 வரை |
| சுபநேரம் | 10.32-12.02 வரை |
| ராகுகாலம் | 03.02-04.32 வரை |




01.06.1994

★ 250 கோடி ரூபா செலவில் கொள்வனவு செய்ய அரசு திட்டமிட்டிருந்த இரு இராட்சத போக்குவரத்து விமானங்களை கொள்வனவு செய்வதில்லை என அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிப்பு.

★ எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் குமார் பொன்னம்பலம் போட்டியிட உள்ளதாக அவரது ஆதரவாளர்கள் தரப்பு தெரிவிப்பு.

02.06.1994

★ ஜனாதிபதி பிரேமதாஸ படுகொலை குறித்து புதிதாக விசாரணை நடத்த விசேட ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படுமானால் அப்படுகொலை குறித்து புதிய சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்பட வாய்ப்புள்ளதாக பிரேமதாஸ குடும்பத்தினர் தெரிவிப்பு.

★ இனப்பிரச்சினை தொடர்பாக சுதந்திரக்கட்சி தமிழர் அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தெரிவிப்பு.

03.06.1994

★ இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் அரசுக்குமிடையே மத்தியஸ்தம் செய்ய தாம் தயாராக இருப்பதாக வடமேல் மாகாண முதலமைச்சர் ஜி.எம். பிரேமச்சந்திரா தெரிவிப்பு.

★ கட்சியைப் பணயம் வைக்கவோ, கட்சித் தலைமைக்கு நிபந்தனை விதிக்கவோ நான் யாருக்கும் இடமளிக்கமாட்டேன் என ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க தெரிவிப்பு.

04.06.1994

★ பல்கலைக்கழகத்துக்கு புதிதாக அனுமதி பெறும் மாணவர்கள் மீது ''ராகிங்'' சேட்டை செய்யும் மாணவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க.குணரத்தினம் எச்சரிக்கை விடுப்பு.

★ விடுதலைப் புலிகளின் கொலைப் பட்டியலில் தமது பெயர் முன்னணியில் இருப்பதால் தமக்கான பாதுகாப்பு பெருமளவு அதிகரிக்கப்பட்டிருப்பதாக சந்திரிகா தெரிவிப்பு.

05.06.1994

★ வடக்கு - கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக விடுதலைப் புலிகளின் விசேட பிரதிநிதிகளுடன் தான் நடத்திய பேச்சுக்கள் சாதகமான நிலையை ஏற்படுத்தியிருப்பதாக வடமேல் மாகாண முதலமைச்சர் பிரேமச்சந்திர தெரிவிப்பு.

★ கட்சி ஆதரவாளர்கள் பலரின் விருப்புக்கு அமைய எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சி வேட்பாளராக சந்திரிகாவை நிறுத்தத் தாம் தயாராக இருப்பதாக சிறிமாவோ தெரிவிப்பு.

06.06.1994

★ விடுதலைப் புலிகள் அமைப்பு அரசுடன் பேச முன்வருமானால் எவ்வித நிபந்தனையுமின்றி அவர்களுடன் பேச ஜனாதிபதி தயாராக இருப்பதாக வடமேல் மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு.

★ ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும் என ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க தெரிவிப்பு.

07.06.1994

★ வடக்கு - கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கான இனப்பிரச்சினைத் தீர்வுத் திட்டமொன்றை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமானும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஸ்ரப்பும் சேர்ந்து தயாரித்துள்ளதாக சிங்கள நாளேடொன்று தகவல் தெரிவிப்பு.

★ ஈழ அகதிகளை திருப்பி அனுப்பும் திட்டத்தை உடனடியாகக் கைவிடக் கோரி இந்தியாவில் இயங்கும் உள்ளூர் வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்கள் மத்திய அரசையும் மாநில அரசையும் கோரவுள்ளதாகத் தெரிவிப்பு.

08.06.1994

★ எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தக் கட்சி வேட்பாளரை ஆதரிப்பது என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தனது வருடாந்த மகாநாட்டில் வைத்து வெளியிடப்போவதாகத் தெரிவிப்பு.

★ தமது தாயாரான ஹேமா பிரேமதாஸவுக்கு ஐ.தே.கட்சியில் பொருத்தமான பதவி வழங்கப்படும் வரை தாம் கட்சியின் எந்தவொரு பதவியையும் ஏற்க மாட்டேன் என முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் மகன் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு.

09.06.1994

★ சுதந்திரக் கட்சி சமர்ப்பித்து இருக்கும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான ஆலோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தேசப் பிரேமி பிக்குகள் முன்னணி அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாக அறிவிப்பு.

★ உலகில் கடும் யுத்தம் நடைபெறும் நாடுகளில் வாழும் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களைப் போன்றே வடக்கு - கிழக்கு மக்களும் கஷ்டம் அனுபவிக்கிறார்கள் என றேட்பானா அமைப்பின் தலைமையக அதிகாரிகளில் ஒருவர் தெரிவிப்பு.

10.06.1994

★ திருமலை, பொலனறுவை ஆகிய மாவட்டங்களில் விடுதலைப் புலிகள் நடத்திய இரு வேறு தாக்குதல்களில் 8 படையினர் பலியானதாகத் தெரிவிப்பு.

★ முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் மனைவியான ஹேமா பிரேமதாஸ ஐ.தே.கட்சி தேசியப் பட்டியல் எம்.பியாக நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிப்பு.

11.06.1994

★ தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் தொண்டமானும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஸ்ரப்பும் தயாரித்த இனப்பிரச்சினைத் தீர்வுத் திட்டத்தில் தன்னாட்சி அதிகாரமுடைய பிராந்திய சபைகளை உருவாக்க வேண்டும் என யோசனை கூறப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

★ ஜனாதிபதித் தேர்தலை சிக்கல்கள் எதுவுமின்றி நடத்தி முடிக்க சிரமப்படும் அரசு அதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பைக் கோரக் கூடும் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடுவதாகத் தெரிவிப்பு.

12.06.1994

★ யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் கல்விமானுமாகிய பேராசிரியர் அ.துரைராசா நேற்று கொழும்பில் காலமானதாகத் தெரிவிப்பு.

★ மண்டைதீவில் நிலைகொண்டிருக்கும் படையினர் நேற்று அதிகாலை யாழ்.நகர் குடியிருப்புகளை நோக்கி நடத்திய ஷெல் தாக்குதலில், வீடு ஒன்றில் உறங்கிக் கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

13.06.1994

★ மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் மகன் சஜித் பிரேமதாஸ ஐ.தே. கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பியாக நியமிக்கப்படலாம் எனத் தெரிவிப்பு.

★ மண்டைதீவில் இருந்து படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் சிக்கி குருநகர் மீன் சந்தையில் கூடியிருந்த பொது மக்களில் இருவர் உடல் சிதறிப் பலியானதாகத் தெரிவிப்பு.

14.06.2010

★ ஒரு வார கால இடைவெளிக்கு காரைநகரில் புலிகளின் கண்ணிவெடியில் மற்றொரு படைவாகனம் சிக்கியதால் நான்கு கடற்படையினர் பலியானதாகத் தெரிவிப்பு.

★ ஐரோப்பிய நாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்கள் தாயகம் திரும்பக் கூடிய பாதுகாப்பான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதா என அறியத் தருமாறு ஐரோப்பிய சமூக அமைப்பு நாடுகள் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்திடம் கோரிக்கை.

15.06.1994

★ எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் மேல்மாகாணத்தில் ஐ.தே.கட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருக்குமாறு ஜனாதிபதி விஜேதுங்க விடுத்த அழைப்பை அமைச்சர் சிறிசேன கூரே நிராகரித்து விட்டதாகத் தெரிவிப்பு.

★ யாழ்.மாவட்டத்தில் படையினர் பெரும் இராணுவ நடவடிக்கையொன்றை ஆரம்பிக்க இருப்பதாக வெளிவரும் செய்திகளால் யாழ். குடாநாட்டு மக்கள் அச்சமடைந்துள்ளதாக யாழ். அரச அதிபர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு எடுத்துரைப்பு.




*கோண்டாவில் பிரிவு லயன்ஸ் கழகத்தின் 2010/2011 ஆம் ஆண்டுக்கான பதவி ஏற்கும் நிகழ்வு அண்மையில் கோண்டாவில் கிழக்கு இராமகிருஷ்ணன் பாடசாலையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.*

*நிகழ்வில் 306 B1 மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.ஜெயவத்சலன் பயனாளி ஒருவருக்கு கூட்டுப் பசளை தயாரிக்கும் தொட்டியை அன்பளிப்புச் செய்வதைப் படத்தில் காணலாம்.*

# மட்டு.சிறையில் தமிழ்க் கைதிகளை சனியன்று சந்தித்தார் அரியநேத்திரன்

மட்டக்களப்பு, ஒக்.4

மட்டக்களப்பு சிறைச்சாலையில் எவ்வித விசாரணைகளும் இன்றி நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ப.அரியநேத்திரன் நேற்றுமுன்தினம் காலை சந்தித்தார்.

அரசியல் கைதிகள் தங்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அவரிடம் உருக்கமாகக் கோரிக்கை விடுத்தனர்.

அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளைச் சந்தித்து பேசிய அரியநேத்திரன், அவர்கள் முறையிட்டிருந்த குறைபாடுகள் குறித்து சிறைச்சாலை அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டியதாக தெரிவித்தார்.

அதேசமயம் நாடுமுழுவதிலும் உள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுப்பது தொடர்பில் தாம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் கூறினார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சட்டமா அதிபர் மற்றும் நீதி அமைச்சு என்பவற்றுக்கு இது குறித்து கடிதங்களை அனுப்பியுள்ளதாகவும் -

குறிப்பாக சிறைகளில் அரசியல் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள 40 இற்கும் அதிகமான பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஒ-ஐ)

# அஸ்வரின் நியமனம் செல்லாது; சட்டத்துக்கு முரணானது

## இப்படிக் கூறுகிறார் ரணில்

கொழும்பு, ஒக்.4

தேசிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வரை நாடாளுமன்ற ஆலோசனைச் சபைக்குப் பிரதமர் டி.எம்.ஜயரட்ண நியமித்தமை அரசமைப்பின் 18ஆவது திருத்தத்திற்கு முற்றிலும் முரணானதென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

திருத்தச் சட்டவாக்கத்தின் பிரகாரம் ஒரு வாரத்தினுள் இந்நியமனம் வழங்கப்பட்டிருந்தல் வேண்டும். ஆயினும் பிரதமர் இவ்வாறு செய்யத் தவறியமையினால் இதனை ஏற்றுக்கொள்ள முடியாதெனச் சபாநாயகருக்கு எழுதிய மடலில் இவர் குறிப்பிட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க ரணில் விக்கிரமசிங்க; ஐ.தே.க.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான டி.எம்.சுவாமிநாதனை நாடாளுமன்ற சபை உறுப்பினராகத் தெரிவு செய்வதாகவும் கடிதமொன்றில் குறிப்பிட்டிருந்தார். இந்நியமனத்தை ஏற்றுக்கொள்வதா? இல்லையா? என்பது பற்றி அபிப்பிராயம் தெரிவிக்க சுவாமிநாதன் விரும்பவில்லை.

அச்சபைக்கு தாம் நியமிக்கப்பட்டதாக உறுதிப்படுத்தல் கிடைத்தால் மாத்திரமே தாம் இதுபற்றி ஏதாவது கூறமுடியுமென அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார். (ரி)

# வாசகர் திருமுகம்

## கோயில்களில் கொட்டுவதை கல்விக்காகப் பயன்படுத்தினால் என்ன?

இன்று சில விடயங்களைப் பார்க்கும்போது எமது அறிவுக்கண் திறபடவும் மற்றவர்களின் துன்பத்தைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படவும் நீண்டகாலம் எடுக்கும் என்று எண்ணத் தோன்றுகிறது. கோயில்கள் கட்டும் விடயத்தை எடுத்துக் கொள்ளலாம். எமது உடன் பிறப்புக்கள் தமது இருப்பைத் தொடரவும் கல்வியை முன்னெடுக்கவும் இவ்வளவு சொல்லொணாத் துயரங்களை அனுபவிப்பதைக் கண்முன்னால் கண்டுகொண்டும் ஒரு சிலருடைய பெருமைக்காகவும் சிலருடைய பணத்திற்கு உருவம் கொடுக்கவும் கோயில்களுக்குக் கோடிக் கணக்கில் செலவிடுவது உண்மையில் நியாயமானதுதானா?

பல இடங்களுக்கும் சென்று வந்தவர்கள் பரந்த மனப்பான்மையுடன் அறிவைத் தேடியவர்களாகவும் இருப்பது இயல்பு. ஆனால் தம்மைப் பொறுத்த வரையில் வெளிநாடுகளில் உள்ளவர்கள் பணத்தை வாரி இறைத்து ஏற்கனவே உள்ள கோயில்களின் தொகையும் அளவும் போதாது என்று இன்னும் இவற்றை அதிகரிக்க வழி கோலுகிறார்கள். அவருடைய பணம்தானே என்று யாரும் கண்டுகொள்வதில்லை.

பெருந்தொகைப்பணம் செலவு செய்யப்படும். கோயில்களை இனிமேல் பராமரிப்பதற்கான ஏற்பாடு என்ன? இது நூற்றாண்டுகளுக்கு நிலைத்து எமக்குப் பெருமை சேர்க்குமா என்று கூடச் சிந்திக்காமல் விஷயங்கள் நடைபெறுகின்றன.

எமது சமூகத்தை இனிமேலும் வாழவைக்கப் போகின்ற கல்வியை மேம்படுத்த கோயில்களுக்குச் செலவிடப்படும் பணத்தின் ஒரு பகுதியை ஒதுக்கினாலே எவ்வளவு நன்றாக இருக்கும். ''அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தலின் ஆலயம் பதினாயிரம் நாட்டலின்... அன்ன யாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'' என்ற பாரதியின் கூற்றையாவது சிந்திப்பார்களா?

கொக்குவில். வை.சந்திரபாலன்.

# கிழக்கு, மலையகத்துக்கு பஸ் சேவை யாழ்ப்பாணத்தில் இருந்து விரைவில்

## பஸ்கள் இல்லாததே தாமதத்துக்குக் காரணம்

யாழ்ப்பாணம்,ஒக்.4

யாழ். மாவட்டத்திலிருந்து கிழக்கு மற்றும் மலையகப் பிராந்தியங்களுக்கான பஸ் சேவைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளன என இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய பொது முகாமையாளர் கே. கணேசபிள்ளை தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக 'உதயனுக்கு' அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்குப் பிராந்தியத்தில் உள்ளடங்கும் மட்டக்களப்பு, கல்முனை, அக்கரைப்பற்று உள்ளிட்ட பகுதிகளுக்கும் மலையக பிராந்தியத்தில் பதுளை, பண்டாவளை, மொனராகலை உள்ளிட்ட பகுதிகளுக்குமான சேவைகள் விரைவில் யாழ். பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பிக்கப்பட உள்ளன. இதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தப் பகுதிகளுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து பஸ் சேவை மேற்கொள்ள முடியாதிருந்தது. தற்போது நாட்டில் சுமுகமான நிலைமை ஏற்பட்டிருப்பதனால் மீளவும் எமது சேவைகளை விரிவுபடுத்த வேண்டியுள்ளது. அதற்கான முயற்சிகளை முழு மூச்சுடன் மேற்கொண்டு வருகிறோம். சேவை ஆரம்பிக்கப்பட்டதும் தினமும் யாழ்ப்பாணத்தில் இருந்து 3 சேவைகள் ஒவ்வொரு இடத்துக்கும் நடத்தப்படும்.

சேவைகளை மீளவும் ஆரம்பிப்பதற்குரிய திட்டங்கள் எல்லாமே தயார். எனினும் ஆளணிப் பற்றாக்குறை, பஸ்களின் பற்றாக்குறை காரணமாக சேவையை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்படுகிறது.

பஸ்களைக் கொள்வனவு செய்வதற்காக அமைச்சரவை அனுமதியை போக்குவரத்துச் சபை தலைமையகம் கேட்டுள்ளது. அனுமதி கிடைக்கப் பெற்றதும் சேவை விரைவில் இடம்பெறும் - என்றார். (உ-14)




யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து பெய்த கடும் மழையினால் தாழ்ந்த இடங்களில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. யாழ்ப்பாணம், றக்கா வீதியில் உள்ள மண் வீட்டைச் சுற்றி வெள்ளம் காணப்படுவதைப் படத்தில் பார்க்கலாம்.

தாழ்ந்த பகுதியில் உள்ள இந்த வீட்டைச் சுற்றி மதில்கள் மற்றும் காணிகள் உயர்த்தப்பட்டமையால் வெள்ளம் வழிந்தோட இடமில்லாது போய் வீட்டிலேயே வெள்ளம் ஏற்படக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டில் உள்ளவர்கள் தங்குவதற்கு வெள்ளத்தால் கஷ்டமான நிலைமையை எதிர்நோக்கியுள்ளனர்.

தொடர்ந்து மழை பெய்யுமாக இருந்தால் தாழ்ந்த நிலப் பகுதியில் உள்ள மக்கள் பெரும் இடம்பெயர வேண்டி ஏற்படும் என்று சுட்டிக் காட்டப்படுகிறது. *(படம்: நேசன்)*

## முச்சக்கர சைக்கிள்கள் பெற்றுக் கொள்ளலாம்

நவாலி,ஒக்.4

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் முச்சக்கர சைக்கிள்களைப் பெறுவதற்கு விண்ணப்பம் செய்த நான்கு பேருக்கு முச்சக்கர வண்டிகள் வந்து சேர்ந்துள்ளன.

முச்சக்கர வண்டிக்கு விண்ணப்பித்தோரை மேற்படி செயலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அப்பிரதேச சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுக்கொண்டுள்ளார்.

விண்ணப்பித்தோரின் விவரம் வருமாறு -

சி.தில்லைநடராசா(பட்டினசபை வீதி,மானிப்பாய் )சி.கிரிசாம்பாள் (தம்பன் வீதிமானிப்பாய்), சி.மருதலிங்கம் (காக்கைதீவு), வை.சின்னப்பிள்ளை(ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்). (201-100)

## முதியோர் குறித்து விழிப்புணர்வு நிகழ்வு

சண்டிலிப்பாய்,ஒக்.4

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவை, மாணவர்கள் மத்தியில் முதியோர்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இதற்கமைய பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நாளை செவ்வாய்க்கிழமை முதியோர் தினம் கொண்டாடப்படவிருக்கின்றது. இந்த நிகழ்வில் மேற்படி கல்லூரியில் கடமையாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டு பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

இதற்கான ஒழுங்குகளை யாழ். மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவைத்தலைவர் எஸ்.சிவகுமார் மேற்கொண்டுள்ளார். (ஐ-115)

# இராஜகாரிய வீதியை பாவனைக்கு திறந்து விடுமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.4

மானிப்பாய் சந்தியில் அமைந்துள்ள இராணுவ முகாமிற்கு அருகில் செல்லும் இராஜகாரிய வீதி மூடப்பட்டுள்ளமையால் அப்பகுதியில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகக் கூறுகின்றனர்.

இந்த வீதிக்கு அருகில் இராணுவ முகாம் அமைந்திருப்பதாலே பொதுமக்களுக்கு மேற்படி பாவனைக்குவிடப்படவில்லை. கட்டுடை, சங்குவேலி, உச்சியோடை ஆகிய பிரதேசங்களுக்குச் செல்லும் இலகுவான வீதி இதுவாகும்.

அதிகமாகத் தொழிலுக்குச் செல்வோர், பாடசாலைகளுக்குச் செல்வோர் எனப் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். சுற்றுப் பாதைகளைப் பயன்படுத்திப் போக்குவரத்துச் செய்வதால் அவசர தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது உள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் விரைவாக இவ்வீதியினை போக்குவரத்துக்குப் பயன்படுத்த அனுமதி பெற்றுத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (201-313)

# அமெரிக்க முதலீட்டாளர்கள் 70பேர் வார இறுதிக்குள் யாழ். வருகை

யாழ்ப்பாணம்,ஒக்.4

70பேர் கொண்ட அமெரிக்க முதலீட்டாளர் குழுவினர் வார இறுதியில் யாழ்ப்பாணம் வருகின்றனர்.

இந்தக் குழுவினர் அச்சுவேலி கைத்தொழிற் பேட்டைக்கு நேரில் சென்று பார்வையிடுவர். யாழ்ப்பாணத்தில் காணப்படும் முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பாகவும் இங்குள்ள வளங்கள் தொடர்பாகவும் அவர்கள் விரிவாக ஆராயவுள்ளனர்.

யாழ்.பொது நூலகத்தில் நடைபெறவுள்ள விசேட கலந்துரையாடலிலும் அவர்கள் பங்குபற்றுவார்கள்.

இதேவேளை அமெரிக்க நாட்டுக் குழுவினர் யாழ்ப்பாணம் வருகை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வடமாகாண ஆளுநர் பணிமனையில் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் எம். சந்திரகுமார் தலைமையில் இடம் பெற்றது.இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திர சிறி மற்றும் முக்கிய பிரமுகர் கள் கலந்து கொண்டனர். (ஒ-15)

# மயானத்தைப் பயன்படுத்த அனுமதி சிரமப்படும் பொதுமக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.4

மாதகல் போதித்துறை இந்து மயானம் பாழடைந்து பற்றைக் காடுகளாகக் காணப்படுகிறது. இம் மயானத்துக்கு அருகில் கடற்படைத்தளம் அமைந்து இருப்பதால் பொதுமக்கள் அதனை பயன்படுத்த அனுமதி வழங்கப்படவில்லை எனவும் கூறப்படுகிறது.

இப்பிரதேசத்தில் அதிகளவு மக்கள் நெருக்கடியான குடிமனைகளில் வசிக்கின்றனர். இறந்தவரின் உடலைத் தகனம் செய்வதற்கு பண்டத்தரிப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு நீண்ட தூரம் கடந்து வந்து உடலினை அடக்கம் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கிறோம்.

எனவே மாதகல் பிரதேசத்தில் அமைந்துள்ள போதித்துறை இந்து மயானத்தை பயன்படுத்த ஆவண செய்யுமாறு சம்பந்தப்பட்டவர்களை பொதுமக்கள் கோரியுள்ளனர். (201-313)



மகாத்மா காந்தியின் 141 ஆவது பிறந்த தினம் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தால் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நினைவு கூரப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள மகாத்மா காந்தியின் சிலைக்கு யாழ். மாநகர முதல்வரின் கணவரும், செயலாளருமாகிய எஸ். பற்குணராஜா மலர்மாலை அணிவிப்பதைப் படத்தில் காணலாம். *(படம்-தமிழினியன்)*

# அடி உரம் வழங்காததால் காலபோக விதைப்பு தாமதம்

சண்டிலிப்பாய்,ஒக்.4

யாழ்.மாவட்டத்தில் காலபோக நெற்செய்கைக்கான அடி உரம் இதுவரை வழங்கப்படாததினால் மழை பெய்தும் நெல் விதைப்பதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலையும் அதிருப்தியும் அடைந்துள்ளனர்.

ஒவ்வொரு பிரதேசத்திலுமுள்ள கமநல சேவை நிலையங்களூடாக காலபோக நெற்செய்கைக்கான உர வகைகள் மானிய அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

பருவ மழை பெய்ததைத் தொடர்ந்து சண்டிலிப்பாய் பிரதேசத்திலுள்ள விவசாயிகள் தங்கள் வயல் நிலங்களை உழுது பண்படுத்திவிட்டு நெல் விதைப்பதற்காகக் காத்திருக்கிறார்கள்.

சண்டிலிப்பாய் கமநல சேவை நிலையத்தினூடாக விவசாயிகளுக்கு வழங்கப்படும் அடி உரம் இதுவரை வழங்கப்படாததினால் நெல் விதைப்பதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது.

வயலை உழுது பண்படுத்திவிட்டு அடி உரத்திற்குக் காத்திருக்கும் விவசாயிகள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்தும் அதிருப்தி அடைந்துள்ளார்கள்.

விவசாயிகள் சம்மேளனங்கள் ஊடாகச் சேகரிக்கப்பட்ட உரத்திற்கான பட்டியல் ஏற்கனவே சண்டிலிப்பாய் பிரதேச கமநல சேவை நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. இதேநேரம் சில விவசாயிகள் தனியார் கடைகளில் அடி உரத்தை வாங்கி நெல் விதைப்பதில் ஈடுபட்டுள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ஐ-115)

# ஆக்கத்திறன் போட்டியில் விருது

யாழ்ப்பாணம்,ஒக்.4

கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட அகில இலங்கைப் போதைப் பொருள் தடுப்பு தொடர்பான போட்டியில் இணுவில் மத்திய கல்லூரியைச் சேர்ந்த மாணவன் முதலாம் இடத்தினையும், ஆசிரியை ஒருவர் சிறப்பு விருதினையும் பெற்றுள்ளனர்.

வடமாகாணத்தில் முதலாம் இடத்தினை இணுவில் மத்திய கல்லூரியின் சிரேஷ்ட பிரிவு மாணவன் தே.பபிராஜ் பெற்றுள்ளார். அந்தக் கல்லூரியின் ஆசிரியை செல்வி யோகேஸ்வரி சின்னத்தம்பி சிறப்பு விருதினையும் பெற்றுள்ளார்.

அத்துடன் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலை ஆசிரியர் சிற்றம்பலம் சிவஞானராசாவும் ஆக்கத்திறன் போட்டியில் விருது பெற்றுள்ளார்.

இவர்களுக்குரிய பரிசளிப்பு நிகழ்வுகள் எதிர்வரும் 8 ஆம் திகதி இசுறுபாயவில் உள்ள கல்வியமைச்சின் கேட்போர் கூடத்தில் கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் வைத்து வழங்கப்படவுள்ளது- என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9-100)

# பருத்தித்துறையில் சிறுவர் யாத்திரைப் பேரணி

சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற தொல்லை கொடுத்தல்களைத் தடுப்பதற்கான சிறுவர் சமாதான யாத்திரைப் பேரணி ஒன்று நேற்று முன்றதினம் மு.ப. 10.30 மணியளவில் பருத்தித்துறை பஸ் நிலையத்தில் இருந்து ஆரம்பமாகி பருத்தித்துறை ஓராங்கட்டைச் சந்தியில் உள்ள வடமராட்சிக் கல்வி வலய அலுவலகத்துடன் முடிவுற்றது.

பருத்தித்றைப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் உதவிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதனின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இச்சமாதான பாதயாத்திரைப் பேரணியில் பருத்தித்துறை நகர்ப் பாடசாலையைச் சேர்ந்த மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், அதிபர்கள், பருத்தித்துறைப் பிரதேச செயலக ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இப்பேரணியில் மாணவர்கள் பதாகைகளைத் தாங்கிச் சென்றனர். பதாகைகளில் காணப்பட்ட வாசகங்கள் வருமாறு:

''போதைப் பழக்கமற்ற தந்தையும் குழப்பமற்றதாயும் சிறந்த குழந்தைகளின் உருவாக்கத்திற்கு அடிப்படை'', ''பெற்றோர்களோ உங்கள் குழந்தைகளுக்கு தெரியும் வகையில் அன்பு செலுத்துங்கள்'', பெற்றோர்களே உலகிலுள்ள சகல பிள்ளைகளும் உங்கள் குழந்தைகளே! அவர்களை ஒன்று போல் பாதுகாத்திடுங்கள்,''தாய் பாசம் எமக்கு வேண்டும், தாயே வெளிநாடு செல்ல வேண்டாம்'', ''மணம் வீசும் மலர்களாம் பிள்ளைகளுக்கு என்றும் மனம் பரப்ப இடம் தாருங்கள்'', ''பாலர் எமக்கு முழுமையான பாதுகாப்பையும், அரவணைப்பையும் அன்பையும் பெற்றுத் தாருங்கள்'', ''அண்ணன்மார்களே, அக்காமார்களே, தங்கைமார்களே, தம்பிமார்களே நாம் பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் கண்ணியப்படுத்துவோம்'', ''வயது முதிர்ந்த பெற்றோர்களை நாம் அரவணைத்துப் பாதுகாப்போம்''.

''பிள்ளைகளான நாம் முதியவர்களின் வழி நடப்போம், குடும்பத்தில் எல்லோரும் ஒன்று சேர்ந்து உணவு உண்ணுங்கள் அப்போது இழந்துபோன பல விடயங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும்'', எம்மை வேலைக்கு அமர்த்த வேண்டாம், என்ற கோரிக்கைகளே அப்பதாகைகளில் குறிப்பிடப்பட்டிருந்தன. மேலும் பேரணி முடிவில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல் வராசா, பருத்தித்துறை உதவிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் ஆகியோர் உரையாற்றினர்கள். (ஒ-236)

# டெங்கு நோயின் தாக்கம் கட்டுப்பாட்டுக்குள், எனினும் விழிப்பு நிலை தொடர்கிறது

யாழ்ப்பாணம்,ஒக்.4

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டாலும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.

மழைகாலம் தொடங்கியுள்ளதால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்க வாய்ப்புக் காணப்படுகிறது. எனவே விழிப்பு நிலையை தொடர்வதற்கு நுளம்பின் பெருக்கத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஒவ்வொரு பிரதேச சபை ரீதியாகவும் சுகாதாரப் பகுதியினர் விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மக்கள் தமது குடியிருப்பைச் சுற்றிக் காணப்படும் பொலித்தீன்கள், சிரட்டைகள், தகரப் பேணிகள் போன்றவற்றை நிலத்தில் புதைத்து விடுவது பாதுகாப்பானது.

கழிவுப் பொருள்களுள் மழை நீர் தேங்குவதனாலேயே நுளம்புக் குடம்பிகளின் பெருக்கம் அதிகரிக்கின்றது என தெரிவிக்கப்படுகின்றது. (204-26)


bcs The Chartered Institute for IT

## கருத்தரங்கும் கலந்துரையாடலும்

விடயம் : தகவல் தொழில் நுட்பத்துறையிலே BCS கற்கை நெறியின் முக்கியத்துவமும், அதன் தகமைகளும் அங்கீகாரங்களும்.

இடம் : யாழ் பொதுசன நூலக கேட்போர் கூடம்

காலம் : 05.10.2010 செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணி

கருத்துரை வழங்குவோர் : Mrs.Sharon Hurd
The Head of Higher Education
BCS,UK
Mrs.Niranjala
The Regional Manager
BCS,Sri Lanka.

தலைவர் : K. Vignesh
CEO/Director
IIS CITY CAMPUS

குடாநாட்டிலே தகவல் தொழில் நுட்பத்துறையில் உயர்கல்வியினை பெற விரும்பும் மாணவர்கள், மற்றும் குடாநாட்டிலே BCS கற்கை நெறியினை பயின்று கொண்டிருக்கும் மாணவர்கள், பல்கலைக்கழக கணனிவிஞ்ஞான துறை மாணவர்கள் , உயர் தொழில்நுட்பக் கல்லூரி கணனிவிஞ்ஞான துறை மாணவர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் எதிர்பார்ப்பதுடன் இந்நிகழ்விலே பங்குபற்றி பயனடையுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

IIS CITY CAMPUS
200,Sivan Pannai Road, Jaffna
Tel:-021 222 8060 Fax:-021 222 6933
Web:- iis.edu.lk



உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான விசேடபிரிவு மற்றும் பள்ளிச்சிறார்களுக்கான

Diploma in ICT
Fundamentals of IT
Basic Applications
Multimedia
Computer Hardware and Networking
Web Design and Development
Programming Concepts
Object Oriented Programming
Personnel Skills Development



Computers 4 kids



ஆரம்பம்
06.10.2010 புதன்கிழமை பி.ப 03.30 மணி,
09.10.2010 சனிக்கிழமை 09.30 மணி

GATEWAY CENTRE FOR INFORMATION TECHNOLOGY
347, Kasthuriyar Road, Jaffna - Phone 021 567 5555 / 021 222 7967


# வேலணைப் பிரதேசத்தில் கட்டாக்காலிகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.4

கட்டாக்காலி மாடுகளால் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாக வேலணைப் பிரதேச விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வயல்களுக்குள் கட்டாக்காலி மாடுகள் உட்புகாதவாறு பாதுகாப்பு வேலிகளை அமைக்க அதிக செலவு செய்ய வேண்டியுள்ளதாகவும் ஒரு ஏக்கருக்கு சுற்றி வேலியிட சுமார் 25 ஆயிரம் பனை மட்டைகள் தேவைப்படும் எனவும் கூறுகின்றனர்.

மட்டை ஒன்று 4 ரூபாவுக்கு விற் பனை செய்யப்படுவதாக அவற்றைக் கொள்வனவு செய்து வேலி அமைப்பது விவசாயி ஒருவரால் முடியாத விடயமாகும்.

தற்போது பெரும்பாலான மாடுகளுக்கு உரிமையாளர்கள் இல்லாத நிலையில் காட்டாக் காலிகளின் தொகை அதிகமாக உள்ளன. எனவே சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகள் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (201-7)

## தொடரும் கன மழையால் நெல்விதைப்புப் பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.4

குடாநாட்டில் தற்போது பெய்து வரும் கடும் மழையினால் பெரும்போக நெற்செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது; நெல்விதைப்புக்குத் தயாராக விருந்த விவசாயிகள் தமது விதைப்புக்கு முன்னர் மழை முந்தியதால் தமது பயிர்ச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தாழ் நில வயல்களில் வெள்ளம் அளவுக்கு அதிகமாகத் தேங்கியிருப்பதாகவும் விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஜ-16-26)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.4

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் பொன்விழாவையொட்டி யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட கலைப்போட்டிகளின் பரிசளிப்பு விழா எதிர் வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது.

வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் பொன்விழா மாநாட்டில் வைத்து பரிசில்கள் வழங்கப் படும் என்று சங்கத்தின் செயலாளர் கந்த சத்தியதாசன் அறிவித்துள்ளார். (ஜ-9)

## வீதி விபத்துக்களில் மூவருக்குக் காயம்

தென்மராட்சி,ஒக்.4

வீதி விபத்துக்களில் சிக்கி மூவர் காயமடைந்த சம்பவங்கள் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றன.

மழை பெய்த போது வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிள்கள் வீதிகளில் சறுக்கி வீழ்ந்து காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மீசாலைப் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் தி.திருச்செல்வம் (வயது 66), வரணிப் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் ரி.சபிதாசன் (வயது 35) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை வேகமாக செலுத்திய சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று சொருகியதில் தூக்கி வீசப்பட்டு பாடசாலை மாணவன் காயமடைந்தார். பீடிலக்ஸன் (வயது 11) என்னும் மாணவன் பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஜ-207)


உத்தியோக பூர்வ முடிவுகள்
சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 569
திகதி 2010/10/02
சுப்பர் இலக்கம் 11
வெல்லப்பட்ட இலக்கங்கள் 07 14 30 50

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 31,257,869.60 விகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 விகிதம் | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 விகிதம் | 09 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 விகிதம் | 283 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 விகிதம் | 548 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 விகிதம் | 13,961 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 விகிதம் | 8,046 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 201,244 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 32,126 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 8,949,340.00
சுப்பர் பரிசு சொதுச ஜிப் வலொ்டியுடன் மிகுதி தொகை பணமாக

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ 31,667,117.60
தேசிய லொத்தர் சபை


## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



நடராசா உதயகுமார்
திதி: 04.11.2010
துவாதசி

தோற்றம் 04.03.1963 மறைவு 03.10.2002

எட்டாண்டுகள் ஓடி மறைந்ததையா
எம் நினைவில் என்றும் நீ
அழியா ஓவியமாய் நிலையாய் வாழ்கின்றாய்

பக்சஸ் லேன்,
மானிப்பாய். (104145) குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வி ஜனனி பஞ்சாட்சரம்

மண்ணில் 1988.08.27
விண்ணில் 2010.09.04

குல விளக்காய் ஒளி பரப்பி
குலமகளாய் எழில் பெருக்கி
புவனியிலே புலம்பி அழ
ஜனனியே எங்கு சென்றாய்?
உன் ஆத்மா சாந்திபெற அனுதினமும்
இறைஞ்சுகிறோம்.

எம் திருநிறைச் செல்வியின் 31 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், சபிண்டீகரணக் கிரியைகளிலும் இன்று (04.10.2010) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர், அயலவர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

''ஜனனி மகால்'',
கச்சாய் வீதி, கொடிகாமம். குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



அமரர் சண்முகம் முத்துலிங்கம் (J.P)
(முன்னாள் தலைவர்,
சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம், J.P)
02.10.2010 சனிக்கிழமை
காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ப.நோ.கூ.சங்கம்,
சுன்னாகம்.
பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.


## தேவை

Isuzu வாகனங்கள் உதிரிப்பாகங்களை விற்பனை செய்வதற்கு அனுபவம் வாய்ந்த விற்பனையாளர் தேவை.

T.P. No: 0777 863024

வீட்டுக்கும் ஹோட்டலுக்கும் கத்திகள்



ரைபிரஸ் ஸ்ரோஸ்
புறக்கோட்டை 2439422 லிபர்டி ப்ளாஸா


## கண்ணீர் அஞ்சலி



அமரர் சண்முகம் முத்துலிங்கம்
[முன்னாள் உடுவில் கிராமசபைத் தலைவரும், சமாதான நீதிவானும், முன்னாள் சுன்னாகம் ப.நோ.கூ. சங்கத் தலைவரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் [T.U.L.F] சிரேஷ்ட தலைவரும்]
02.10.2010 சனிக்கிழமை
காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இணுவில். இணுவில் இந்து இளைஞர் கழகம்.

# வீதிகளை மூடிய பற்றைக் காடுகளால் குறுக்கு வீதிகளில் பயணிக்கும் பிரதேச மக்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.4

கிளிநொச்சி பன்னங்கண்டி, மருதநகர், பெரிய பரந்தன் 3,4,5 ஆம் வாய்க்கால் பிரதேசங்களின் வீதியோரங்கள் பற்றைக் காடுக ளாகக் காணப்படுவதால் இவ்வீதி களில் பயணம் செய்வதில் பல சிரமங்களை எதிர்கொண்டு வரு வதாக இப்பிரதேச வாசிகள் விச னம் தெரிவிக்கின்றார்கள்.

இப்பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு பல மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால் குடிமனைகள் தள்ளித் தள்ளிக் காணப்படுவதால் தனித்தனிக் குடும்பங்களே ஒவ்வொரு காணி யிலும் குடியமர்ந்துள்ளார்கள். இப் பிரதேசத்தில் வயல்வெளிகள் அதிகம் காணப்படுவதால் குடி மனைகள் குறைவு.

மருதநகர், பெரிய பரந்தனைச் சேர்ந்த மக்கள் பன்னங்கண்டியி லுள்ள தமது உறவினர் வீடுக ளுக்கோ அல்லது வேறு தேவை களுக்குச் செல்லவோ இப்பிர தேசத்திலுள்ள குறுக்கு வீதிக ளையே பயன்படுத்துகிறார்கள்.

வீதியோரங்கள் பெரும் பற் றைக் காடுகளாக வளர்ந்து வீதியை மூடி உள்ளதால் தனியாக இவ் வீதிகளில் பயணம் செய்ய முடி யாது உள்ளதாகவும் திருடர்கள் தொல்லைகளுக்கும் விஷ ஜந்துக் களுக்கும் அச்சப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இப் பிரதேசவாசிகள் கவலை தெரி விக்கின்றார்கள். (க-313)

# மக்களை ஆற்றுப்படுத்தவே இலக்கிய விழா கிளிநொச்சி விழாவில் பணிப்பாளர் சிறீதேவி

கிளிநொச்சி,ஒக்.4

கிளிநொச்சியில் இதுபோன்று பல நிகழ்வுகள் நடத்தப்பட வேண் டும் என வடமாகாண பண்பாட் டலுவல்கள் பணிப்பாளர் சிறீதேவி தெரிவித்துள்ளார்.

வடமாகாண பண்பாட்டலு வல்கள் திணைக்களம் மற்றும் கல்வியமைச்சின் ஏற்பாட்டில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற வடமாகாண இலக் கியப் பெருவிழாவில் கலந்து கொண்டு தலைமையுரை ஆற் றும்போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நான் என் தமிழையும் கலை ஞர்களையும் என் உயிரையும் விட அதிகமாக நேசிக்கிறேன். எல் லோரும் கலைஞர்களாக வாழுங் கள் அல்லது வாழப்பழகிக் கொள் ளுங்கள். கலைஞனுக்கு முதுமை என்றுமே இல்லை. அவனுக்கு முதிர்ச்சிதான் உருவாகின்றது.

எனக்கு ரசிக்க தெரியும். அத னால் தான் கலைகள் மீது எனக்கு அதிக ஈடுபாடு உண்டு. இன்றைய மக்களுக்கு ஆற்றுப்படுத்தல் என்பது மிகமிக அவசியமானது. அந்த ஆற்றுப்படுத்தலை இலக் கியமூலம் செய்யலாம். எனவே தான் இந்த விழாவை நடத்துவதற் குக் கிளிநொச்சியை தேர்ந்தெடுத் தோம். இன்றைய சூழ்நிலையில் கிளிநொச்சியில் ஒன்று அல்ல பல இலக்கிய விழாக்கள் நடத்த வேண்டும், அதன்மூலம் இந்த மக் களை ஆற்றுப்படுத்த கிளிநொச்சி யில் இலக்கிய விழாவை நடத்து கிறோம் என்றார் அவர். (க-319)

# பொது நூலகத்தை மீள ஆரம்பிக்க வட்டக்கச்சி மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி,ஒக்.4

கிளிநொச்சி வட்டக்கச்சியில் இடப்பெயர்வுக்கு முன்னர் இயங் கிய கரைச்சிப் பிரதேச சபையின் பொது நூலகத்தை மீள ஆரம்பிக்கு மாறு மக்கள் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளில் கடந்த ஏப்ரல் மாதம் மீளக்குடியேற்றம் இடம்பெற்றது. மீளக்குடியேற்றம் இடம்பெற்று ஆறு மாதங்களாகியும் இதுவரை இப்பொது நூலகம் மீள ஆரம்பிக் கப்படாமையால் இப்பகுதி மாண வர்களும், வாசகர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளில் எட்டுப் பாடசாலை கள் மீள ஆரம்பிக்கப்பட்டபோதும் அங்கு நூலகவசதிகள் ஏற்படுத் தப்பட வில்லை. மாணவர்களி டம் சொந்தமாகவும் நூல்கள் இல்லை. இந்நிலையால் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தயா ராகுவதற்கு மாணவர்களுக்கான நூல்களை பெறுவதில் பெரும் சிரமங்கள் உள்ளன. மீளக்குடியே றிய மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு விரைந்து இப் பொது நூலகத்தை மீள ஆரம்பிப்பதற் குச் சம்பந்தப்பட்ட தரப்பினர் முன் வர வேண்டும் என மாணவர்களும், பிரதேச மக்களும் கோரியுள்ளனர்.

இந்நூலகத்திற்கென ஒதுக் கப்பட்ட ஒரு தொகுதி நூல்கள் கரைச்சிப் பிரதேச சபையால் பயன் பாடின்றி நீண்டகாலம் வைக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. இந்நூல்களை வாச கர்களுக்குப் பயன்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமெனவும் அவர்கள் வேண்டுகோள் விடுக் கின்றனர். (க-405)

# கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் ஆங்கில தினப்போட்டி முடிவுகள்

கிளிநொச்சி,ஒக்.3

கிளிநொச்சி மாவட்டப் பாட சாலைகளுக்கிடையே வலய மட்டத்தில் நடத்தப்பட்ட இந்த ஆண்டுக்கான ஆங்கில தினப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவியரின் விவரங் கள்.

**உரத்து வாசித்தல்**

**தரம் - 3**

ஜி.கவினா (புனித பற்றிமா கிறிஸ்தவ தமிழ் கலவன் பாட சாலை), என்.கவிஞ்சனா (வட்டக் கச்சி மகாவித்தியாலயம்), ரி. கௌசல்யா (யோகபுரம் மகா வித் தியாலயம்).

**தரம் - 4**

பி.சாருஜா (கிளிநொச்சி மத் திய கல்லூரி), எஸ்.நகுலேஸ்வரி (கிளிநொச்சி மகாவித்தியாலயம்), எஸ்.திவ்வியா (முழங்காவில் மகா வித்தியாலயம்).

**தரம் -5**

எம்.ரம்ஜா (புனித திரேசா பெண்கள் கல்லூரி), எஸ்.ரேனுஜா (கிளிநொச்சி மத்திய கல்லூரி), எஸ்.டிலோஜா (இராமநாதபுரம் கிழக்கு தமிழ் கலவன் பாடசாலை).

**உரையாற்றுதல்**

**தரம் - 12**

பி.மாதங்கி (கிளிநொச்சி இந் துக் கல்லூரி), எஸ்.லசுவனா (கிளி நொச்சி இந்துக் கல்லூரி), ம. அகிலா (பிரமந்தனாறு மகாவித்தியாலயம்).

**தரம் - 13**

ஏ.தயானந்தினி (கனகபுரம் மகா வித்தியாலயம்), ஆர்.கீர்த் தனா (கிளிநொச்சி இந்துக் கல் லூரி), ஏ.றாகினி (முருகானந்தா மகா வித்தியாலயம்). (க-405)

# நகைக் கடையில் விநோதத் திருட்டு திருடனைத் தேடும் மன்னார் பொலிஸார்

மன்னார்,ஒக்.4

மன்னார் நகரில் நகைக்கடை யொன்றில் நடைபெற்ற திருட் டுச் சம்பவமொன்று பலரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்துள்ளதா கத் தெரியவருகின்றது.

நேற்றுமுன்தினம் மாலை வேளையில் கணவன், மனைவி, கைக்குழந்தையென ஒரு குடும் பம் நகைக் கடைக்குள் நுழைந் தது. இவர்கள் கடை உரிமையா ளராலும், ஊழியர்களாலும் இன் முகத்துடன் வரவேற்கப்பட்ட னர். மனைவிக்குப் பிடித்த மூன்று பவுண் நிறையுள்ள நகையொன் றைத் தெரிவு செய்த கணவன் அத னைத் தனது கழுத்தில் அணிந்து அழகு பார்த்தார். அந்த வேளை யில் தனக்கு வயிற்றை வலிப் பதாகவும் கழிவறைக்குச் செல்ல வேண்டுமெனவும் அவர் கூறி னார். ஆனால் நகைக் கடையில் கழிவறை வசதிகள் இல்லை. அவர் உடனே வெளியில் சென் றார். அவரது கழுத்தில் மாட்டப் பட்ட நகை அப்படியே இருந் தது. இவரது நடத்தையில் சந்தே கம் கொண்ட கடை உரிமையா ளர் கடை ஊழியர் ஒருவரை அவ ரைப் பின் தொடருமாறு அனுப்பி வைத்தார். ஆனால் அந்த நபர் எப்படியோ மறைந்துவிட்டார்.

வெளியே சென்றவர் திரும் பாமையால் கவலையடைந்த கடை உரிமையாளர் இவருடன் வந்த பெண்ணிடம் எங்கே உன் கணவன் என்று கேட்டார். அவர் என் கணவன் அல்ல. அவர் வேறு, நான் வேறு என்று பதில ளித்தாள் அந்தப் பெண். அவர் இப்போது பொலிஸில் ஒப்படைக் கப்பட்டுள்ளார் எனத் தெரிகின் றது. நகைத் திருடனைப் பொலி ஸார் தேடி வருகின்றனர். (க-80)

# கிளிநொச்சியில் 9 பாடசாலைகளில் வங்கிக் கிளைகள்

கிளிநொச்சி,ஒக்.4

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஒன்பது பாடசாலைகளில் ஹற்றன் நஷனல் வங்கிக் கிளை கள் திறந்து வைக்கப்படவுள்ள தாகத் தெரிகின்றது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி இந்துக் கல்லூரி, பளை மத்திய கல்லூரி, புனித திரேசா பெண்கள் கல்லூரி, கிளி நொச்சி மகா வித்தியாலயம், முரு கானந்தா மகா வித்தியாலயம், முழங்காவில் மகா வித்தியாலயம், கனகபுரம் மகா வித்தியாலயம், பாரதி வித்தியாலயம் ஆகிய ஒன் பது பாடசாலைகளிலேயே ஹற் றன் நஷனல் வங்கிக் கிளைக ளைத் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வரு கின்றன. (க-405)

# இராணுவத்தின் 61ஆவது ஆண்டு விழா மன்னாரில் கரப்பந்தாட்டப் போட்டிகள்

மன்னார், ஒக்.4

இலங்கை இராணுவத்தின் 61 ஆவது நிறைவு தினத்தை முன் னிட்டு மன்னார் 542 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் கரப் பந்தாட்டப் போட்டிகள் நடைபெற் றுள்ளன.

அடம்பன் மத்திய மகாவித்தி யாலய மைதானத்தில் மன்னார் சர் வோதய மாவட்ட நிலையத்தின் அனுசரணையுடன் இந்தப் போட் டிகள் நடந்தன. பெண்களுக்கான இறுதிப் போட்டியில் அடம்பன் மகாவித்தியாலயப் பெண்கள் அணியுடன் நெடுங்கண்டல் புனித அந்தனீஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் 25:23 என்ற புள்ளிகளின் அடிப் படையில் அடம்பன் மகா வித்தியா லய பெண்கள் அணியினர் வெற்றி பெற்று கேடயத்தைப் பெற்றுக் கொண்டனர்.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் அடம்பன் பிரதேச இராணுவ அணியினரும், அடம் பன் புனித சூசையப்பர் விளை யாட்டுக்கழக அணியினரும் மோதி னர். இதில் புனித சூசையப்பர் விளையாட்டுக்கழக அணி 24:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

இந்த நிகழ்வில் மன்னார் சர் வோதய இணைப்பாளர் யுகேந் திரன் 542 ஆவது படைப்பிரி வின் கட்டளை அதிகாரி விக்கும். லியனகோ, அதன் சிவில் நிர்வாக அதிகாரி நளிந்த மகாவித்தாரண ஆகியோர் உட்படப் பெருமள விலான பொதுமக்களும் கலந்து கொண்டனர். (க-80)




# சேற்றிலும் சகதியிலும் பொதுச்சந்தை; ஸ்கந்தபுரம் வியாபாரிகள், பொதுமக்கள் அவதி

யாழ்ப்பாணம்,ஒக்.4

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பொதுச் சந்தை நேற்றுப் பெய்த மழை வெள்ளத்தால் சேறும் சகதியு மாகக் காணப்படுவதால் இடர்க ளைச் சந்தித்து வருவதாக வியா பாரிகளும் பொதுமக்களும் விச னம் தெரிவிக்கிறார்கள்.

இப்பிரதேச மண்வளம் கிர வல் வகை என்பதால் வெள்ளம் பாய்ந்து ஓடாமல் சந்தையின் உள் வீதிகள் மற்றும் சந்தையின் உட்புறங்களிலும் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இதனால் பொருள்களை விற்பனை செய்ய முடியாமல் உள்ளது. அதிகளவு மக்கள் மீளவும் குடியேறியுள்ள நிலையில் அத்தியாவசியப் பொருள் கள் மற்றும் உணவுப் பொருள் களை மக்கள் இந்தச்சந்தையிலே கொள்வனவு செய்வார்கள்.

வியாபாரம் செய்வதற்கு போது மான தகுந்த இடவசதியில்லாத தால் வியாபாரிகள் வியாபாரம் செய்வதில் ஆர்வம் காட்டவில்லை. இதனால் அப்பகுதி மக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு நீண்டதூரம் செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர்.

எனவே பிரதேச மக்களின் நலன்கருதி மழைகாலத்திற்கு ஏற்றவாறு இப்பொதுச்சந்தை யைப் புனரமைப்புச்செய்து தரு மாறு வியாபாரிகளும், பொதுமக் களும் உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-313)

# இறைச்சிக் கடைகள் குத்தகைக்கு

கிளிநொச்சி,ஒக்.4

கிளிநொச்சி மாவட்ட கரைச் சிப் பிரதேச சபையின் எல்லைக் குட்பட்ட பதினெட்டு பொதுச் சந் தைகளில் உள்ள இறைச்சிக் கடை களைக் குத்தகைக்கு வழங்குவதற் கான கேள்விப்பத்திரங்கள் கோரப் பட்டுள்ளன.

பரந்தன், முரசுமோட்டை, கண் டாவளை, தருமபுரம், கல்லாறு, புன்னைநீராவி, இராமநாதபுரம், வட்டக்கச்சி, இரணைமடுச்சந்தி, உருத்திரபுரம் டி-8, உருத்திரபுரம் டி-10, ஜெயந்திநகர், ஸ்கந்தபுரம், அம்பலப்பெருமாள் சந்தி, வன் னேரி, கிளிநொச்சி இல.1, இல.2, கோணாவில் ஆகிய சந்தைகளில் உள்ள மாட்டிறைச்சிக்கடை, ஆட் டிறைச்சிக்கடை, கோழிஇறைச்சிக் கடை ஆகியவற்றிற்கே கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

மேலதிக விவரங்களைக் கரைச் சிப் பிரதேசசபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியுமென சபை யின் செயலாளர் பொன். நித்தியானந்தன் அறிவித்துள்ளார். (க-405)




அழிவடைந்த நிலையில் காணப்படும் வட்டக்கச்சிப் பொது நூலகத்தைப் படத்தில் காணலாம்.

(படம்: கிளிநொச்சிச் செய்தியாளர்)

# மன்னாரில் கடும் மழை நெல் வயல்கள் நீரில் மூழ்கின

மன்னார்,ஒக்.04

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச் சியாகப் பெய்துவரும் பெருமழை காரணமாக சிறுபோக நெல் வேளாண்மை பாதிப்படைந்துள்ள தாகத் தெரியவருகின்றது.

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகக் கடும்மழை பெய்து வருகின்றது. இதனால் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் மாந்தை, முசலிப் பிரிவுகளில் மீள் குடியேற்றப்பட்ட மக்களால் மேற் கொள்ளப்பட்ட சிறுபோக நெல் வேளாண்மை பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளது. வயல்களில் நெல் அறுவடைக்குத் தயாரான நிலை யில் மன்னார் மாவட் டம் முழுவ தும் கடும் மழை பெய்து வருவ தால் நெல் வயல்கள் நீரில் மூழ்கி யுள்ளன. இதனால் விளைந்த நெற் பயிர்கள் சேதமடையும்போகும் அபாயநிலை தோன்றியுள்ளது.

இதனால் மீள்குடியேறி விவ சாயம் செய்த மக்கள் செய்வதறி யாது கவலையில் மூழ்கியுள்ள னர். (க-80)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

தென்மராட்சி,ஒக்.4

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் கணித, விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான கணித,விஞ்ஞான செயற்பாடுகள் தயாரித்தல் தொடர்பான செயலமர்வு நாளை செவ்வாய்க்கிழமை வலயக் கல்வி அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது என வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தெரிவித்துள்ளார். (ற-207)

## வட. இலங்கை சங்கீத சபைப் பரீட்சைகள் - 2011

வட.இ.ச.சபையின் 2011 ஆம் ஆண்டு பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் 04.10.2010 முதல் விற்பனைக்கு வரும். விண்ணப்ப முடிவுத் திகதி 13.12.2010 ஆகும். விண்ணப்பப் படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தல் பிரதியுடன் ரூபா (நாற்பது) 40/- மட்டும்.

விண்ணப்பப் படிவத்தைத் தபால் மூலம் பெற விரும்புவோர் ரூபா 55/- பெறுமதியான காசுக்கட்டளையை (மணி ஒடர்) உடன் சொந்த முகவரி எழுதப்பட்ட நீள் கடித உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைக் கட்டணத்தைச் சபையினால் வழங்கப்படும் 3 படிவங்களையும் பூரணப்படுத்தி இலங்கை வங்கியில் பணத்தைச் செலுத்தி அவர்களால் வழங்கப்படும் படிவத்தில் ஒன்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பவும்.

*யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தேர்வுநாடிகள்*
*வட இலங்கைச் சங்கீத சபை,*
*யாழ்.வலயக் கல்வி அலுவலகம்,*
*செம்மணி வீதி, யாழ்ப்பாணம்.*

எனும் இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(சி/571508)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 21 . 12 . 1949 | 14 . 10 . 2009 |

**அமரர் சுப்பிரமணியம் இரத்தினகோபால்**
(ஓய்வுபெற்ற கிராமசேவை உத்தியோகத்தர், பொலிஸ்உத்தியோகத்தர்)
திதி: ஏகாதசி (04.10.2010)

அன்பின் தெய்வமே! ஆசை அப்பா
ஆண்டொன்று சென்றாலும்- பெத்தவள்
என்று அழைக்கும் குரல் என் காதில்
ஒலித்துக் கொண்டே இருக்கிறது

குடும்பத்தின் குலவிளக்காய் என்றும்
அன்புடன் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும்
ஒளியூட்டிய அன்புத் தெய்வமே!
நீங்கா நினைவுடன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

தம்பலத்தனை,
துன்னாலை வடக்கு. (103960)

**மனைவி, மகள்.**


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1230 சிகப்பு

வெற்றி இலக்கங்கள்

மேடம் 01 17 31 55 01-10-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 3,965,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 226,749 | 20/- | 4,534,980/- |
| 2 இலக்கங்கள் | 20,868 | 40/- | 834,720/- |
| 1 இல. + லக்கினம் | 20,578 | 60/- | 1,234,680/- |
| 2 இல. + லக்கினம் | 1,897 | 200/- | 379,400/- |
| 3 இலக்கங்கள் | 554 | 1000/- | 554,000/- |
| 3 இல. + லக்கினம் | 51 | 10,000/- | 510,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,965,000/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 8,647,780/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 612 | | 604,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 271,312 | | 9,252,280/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகைரூபா 4,978,050/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

கன்னி 03 19 36 38

ஜக்பொட் பரிசு ரூபா. 900,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 609 | 500/- | 304,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 900,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 612 | | 604,500/- |

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா.1,000,000/-


# யோகாசன தியான வகுப்புகள்

யாழ்ப்பாணம்,ஒக்.4

கந்தர்மடம் சிவானந்த மகரிஷி யோக நிலையத்தால் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்ட யோகாசன தியான வகுப்புகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

எனவே, இப்பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள விரும்புவோர் ஆண், பெண், இளைஞர், சிறுவர், பெரியோர் என்ற வயது வேறுபாடின்றிக் கலந்துகொள்ளமுடியும்.

மேற்படி பயிற்சி வகுப்புகள் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 6 மணி தொடக்கம் 7 மணிவரை நடைபெறுகின்றன. நோயாளிகளுக்கு விசேட கவனமெடுக்கப்பட்டு அவர்களின் நோய்களுக்கு ஏற்றவாறு பயிற்சிகள் வழங்கப் பட்டு நோய்கள் குணப்படுத்தப்படும் என மேற்படி யோக நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

எனவே, பயிற்சிபெற விரும்புவோர் கந்தர்மடம் குமாரசாமி வீதியில் அமைந் துள்ள வேதாந்த மடத்துக்கு வருகை தந்து பயிற்சிகளில் ஈடுபடமுடியும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (201)

# தென்மராட்சிக் வலயத்தின் ஆசிரியர் தின விழா

தென்மராட்சி,ஒக்.4

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் ஆசிரியர் தின விழா நாளை செவ்வாய்க்கிழமை பி.ப ஒரு மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஆங்கில கற்பித்தல் துறைத் தலைவர் சு.சுந்தரேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

2009 ஆம் ஆண்டு ஒக்ரோபர் ஆறாம் திகதி தொடக்கம் 2010 ஒக்ரோபர் ஐந்தாம் திகதிவரை ஓய்வுபெற்ற கல்விசார் அலுவலர்கள் இந்நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-207)

# அல்லாரை மாதா ஆலய உற்சவம் ஆரம்பம்

சாவகச்சேரி,ஒக்.4

கொடிகாமம் அல்லாரை செபமாலை மாதா ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கொடியேற்றம் கடந்த முதலாம் திகதி ஆரம்பமானது. தொடர்ந்து 7ஆம் திகதிவரை உற்சவம் இடம்பெறவுள்ளது. உற்சவம் பங்குத்தந்தை எஸ்.பத்திநாதர் அடிகளார் தலைமையில் நடைபெற்று வருகிறது.

விழாவில் எதிர்வரும் 6ஆம் திகதி பிற்பகல் நற் கருணை பூசை வழிபாடுகளும் மறுநாள் காலை 7 மணிக்கு திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளன. (ஐ-131)

# விவசாயிகளுக்கு விதை நெல் வழங்கல்

கொழும்புத்துறை,ஒக்.4

அரியாலை மற்றும் கிழக்கு அரியாலை விவசாயிகளுக்குப் பெரும்போக நெற்செய் கைக்கான விதைநெல் அரியாலை கமநல சேவை நிலையத்தில் வழங்கப்படுகின்றது.

விஷயத் திணைக்களத்தினால் வழங்கப்படும் விதை நெல்லை விண்ணப்பித்த விவசாயிகள் விரைவாக பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அரியாலைப் பிரதேசத்தில் இம்முறை பெரும்போக நெற்செய்கை விடுவிக்கப்பட்ட 400 இற்கும் அதிகமான ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (204-135)

# வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.4

நீண்ட காலமாகத் திருத்த வேலைகள் இடம்பெறாமல் இருந்த மணல்பிட்டி வீதியின் முதல் நான்கு ஒழுங்கைகளும் யாழ். மார்ட்டின் வீதியும் யாழ்.மாநகர உதவி மேயர் எஸ்.இளங்கோவின் நேரடிப் பார்வையின் கீழ் புனரமைக்கப்பட்டுள்ளன. (த-204-07)

## 4ஆம் ஆண்டு நினைவு நாள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 02 . 02 . 1953 | 04 . 10 . 2006 |

**அமரர் சின்னத்தம்பி செல்வசீலன்**
(பாலா- அலோமாஸ் பான்சி உரிமையாளர், சுன்னாகம்)


'கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார்
கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்'
ஒளி விளக்காய் திகழ்ந்து
நினைவாகி எம்மோடு வாழும் -எம்
குலவிளக்கின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்
**குடும்பத்தினர்.**

இராமலிங்கம் வீதி,
உடுவில், சுன்னாகம்.

(104061)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26 . 02 . 1924 | 15 : 10 . 2009 |

**அமரர் கந்தையா தம்பையா**
(மந்துவில் மேற்கு, கொடிகாமம்)
திதி: துவாதசி (04.10.2010) திங்கட்கிழமை

அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல நின்று அனைவரையும் காத்து
இகழ்வாரைக் கூட மண்ணில் எழுந்து நிற்க இனிய பல பணிகள் செய்து
புகழ் பரவி உழவு செய்து பூமிதனில் உயர்ந்த உத்தமரே!
நிகழ் விகிர்தி ஆண்டதனில் எமைப் பிரிந்தீர் ஐயா!-
என்றும் நாம் உமை மறவோம்.

மந்துவில் மேற்கு,
கொடிகாமம்.

**குடும்பத்தினர்.**

(104076)

## நீங்காத நினைவலைகளில் பத்து ஆண்டுகள்

திருமதி
**புஸ்பராணி சிவப்பிரகாசம்**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 18.04.1949 | 24.09.2000 |

திதி: அபரபக்க துவாதசி (04.10.2010)



அம்மா எங்கள் இதயக் கோயிலில் வாழும்
அன்புத் தெய்வமே!
பத்து ஆண்டுகள் பறந்தோடிவிட்டன
பரிதவிக்குது இன்னும் எம் உள்ளம்
உம்மைக் காண ஏங்குது எம் இதயம்
எம்மைக் காண எப்போது வருவீர்கள்
இம் மண்ணில்
தெய்வமாகிவிட்ட எங்கள் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்திபெறப்
பிரார்த்திக்கின்றோம்.

பொ.சிவப்பிரகாசம்,
பொற்பதி வீதி,
கொக்குவில்
(104130)

**கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# இரணைமடு குடிதண்ணீர் திட்ட வேலை 2000 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு!

## நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,ஒக்.4

வடக்கின் பாரிய அபிவிருத்தித் திட்டமான கிளிநொச்சி- இரணைமடு குடிதண்ணீர் திட்டத்துக்கான (யாழ்- கிளிநொச்சி நீர் விநியோ கத்திட்டம்) புனரமைப்புப் பணிகள் 2 ஆயிரம் கோடி ரூபா செலவில் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப் படவுள்ளதாகத் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி வரை ஆசிய அபிவிருத்தி வங்கி- தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச சபை - மாவட்ட அரசாங்க அதிபர்கள் - மாவட்ட விவசாய அமைப்புக்களின் அபிவிருத்திக் கூட்டங்களின் சாதகமான பிரதிபலிப்பே இத்திட்டம் முழுமை பெறக்காரணமாக அமைந்துள்ளது.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

அரசின் தேசிய கொள்கை பிரகாரம் 2015 இல் 85%மான மக்களுக்கு அசாதாரண முறையில் குடிதண்ணீர் வழங்க வேண்டும்.

அத்துடன் 2025 இல் 100 வீதமான குடிதண்ணீர் தேவை பூர்த்தி செய்யப்படவேண்டும்.

ஆனால் தற்போது பிரதேச சபை- நீர்வழங்கல் வடிகால் சபை மூலம் யாழ்ப்பாணம் 3.2 வீதமும், கிளிநொச்சி 1.1 வீதமும், மன்னார் 20.3 வீதமும், முல்லைத்தீவு பூச்சிய வீதமும், வவுனியா 4.5 வீதம் மட்டுமே வழங்கப்படுகிறது.

தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கியானது பாரிய முதலீட்டுத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி- மன்னார்- யாழ்ப்பாணம்- வவுனியா ஆகிய மாவட்டங்களில் நீர் விநியோகத்திற்காகப் பெரும் நிதியை செலவு செய்கின்றது.

இதில் கிளிநொச்சி - யாழ். நீர் விநியோகத்திட்டத்தின் கீழ் (இரணைமடு) ஒரு நாளைக்கு 27 ஆயிரத்து 500 மீற்றர் கனஅடி குடிதண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் 88 ஆயிரத்து 500 மீற்றர் கனஅடி குடிதண்ணீர் ஒரு நாளைக்கு யாழ்- கிளிநொச்சி நீர் விநியோகத்திற்கு முழுமையாகத் தேவைப்படுகின்றது.

மிகுதியான 61 ஆயிரம் மீற்றர் கனஅடி குடிதண்ணீரை நிலத்தடி நீரைப் பாதுகாத்து வழங்க உத்தேசித்துள்ளோம். இதற்காக குறைந்தது 40 வருட காலப் பகுதி தேவைப்படுகிறது.

இதேவேளை இரணைமடு அணைக்கட்டை 2 அடி உயரம் அதிகரித்து தேவையான நீரைத் தேக்கி, வான் பாயும் வாய்க்கால் தொகுதி, பாரிய கடவைப்பாலம், திருவையாறு 'லிப்ற்'விவசாய நீர்ப்பாசனத் திட்டம் என்பற்றை விரைவில் புனரமைத்துக் கொடுக்கவுள்ளோம்.

யாழ்.குடாவிற்கு தற்போது வருகை தரும் தென்னிலங்கை மக்கள் சுத்தமான குடிதண்ணீரை கொழும்பில் இருந்து கொண்டு வந்தே பருகுகின்றனர்.

அத்துடன் குடாநாட்டில் 15 பிரதேசசெயலர்பிரிவுகளில் அமைக்கப்பட்டுவரும் சிறிய, நடுத்தர மற்றும் பாரிய கைத்தொழில் நிறுவனங்கள் ஒரு நாளைக்கு 10 ஆயிரம் மீற்றர் கனஅடி குடிதண்ணீரை வழங்குமாறு கேட்டுள்ளனர்.

எனவே இத்தேவைகளை உடனுக்குடன் நிறைவு செய்ய யாழ்- கிளிநொச்சி குடிதண்ணீர் (இரணைமடு) திட்டம் நிறைவு பெறும் போது சாத்தியமாகும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை-

கிளிநொச்சி- யாழ் நீர் விநியோகத் திட்டம் பூர்த்தி அடைவதற்கு முன்னாள் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புசபை அமைச்சர் ஏ.எல்.எம். அத வுல்லாத, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வடக்கு மாகாண சபை பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, வடக்கு மாகாண ஆளுநர், யாழ்.- கிளி அரச அதிபர்கள் மற்றும் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் பூரண பங்களிப்பை வழங்கியுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (201-302)

# கச்சாய் மாணவர்கள் தேசிய மட்டத்தில் வெற்றி


ம.தருகமன்


ம.மகிந்தன்

தென்மராட்சி,ஒக்.4

கச்சாய் அரச தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் இருவர் அகில இலங்கை ரீதியில் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போதைப் பொருள் தடுப்புத் தொடர்பான ஓவியப்போட்டியில் வடக்கு மாகாண மட்டத்தில் முதல் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளனர்.

கல்வி அமைச்சால் நடத்தப்பட்ட போட்டியில் மேற்படி பாடசாலையைச் சேர்ந்த ம.மகிந்தன் முதல் இடத்தையும் த.தருசுமன் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

இசுறுபாயவில் அமைந்துள்ள கல்வி அமைச்சின் கேட்போர்கூடத்தில் எதிர்வரும் எட்டாம் திகதி போட்டியில் வெற்றியீட்டியோருக் குக்கான பரிசில் வ்ழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மேற்படி மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படுமென பாட இணை வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக் கல்விப் பணிப்பாளர் பீ.பீ. நந்தசிறி அறிவித்துள்ளார் எனப் பாடசாலை அதிபர் க.மங்களேஸ்வரன் தெரிவித்தார். (201-207)




# மானிப்பாய் ப.நோ.கூ.ச. கிளைகளின் நிவாரண விநியோகம் 'கோப் சிற்றியில்'

யாழ்ப்பாணம்,ஒக்.4

மானிப்பாய் ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் அனைத்து கிளைகளின் நிவாரண விநியோகங்கள் தலைமைக்காரியாலயத்தில் உள்ள 'கோப் சிற்றி' யின் ஊடாக வைத்து இடம்பெறுகின்றன.

கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்களின் நேரடிக் கண்காணிப்பில் நிவாரணங்கள் வழங்கப்படுவதாகக் கூட்டுறவு ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மானிப்பாய் ப.நோ.கூட்டுறவுச் சங்கம் நஷ்டத்தில் இயங்குவதால் இத்தகைய பரீட்சார்த்த நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தகைய நடவடிக்கையால் குறிப்பாகக் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் நேரடிக் கண்காணிப்புடன் நிவாரணம் வழங்கப்படுவதால் அங்கு இடம் பெறக்கூடிய மோசடிகள் தவிர்க்கப்படுகின்றன.

அதனால் நஷ்டத்தில் இயங்குகின்ற மேற்படி இச் சங்கத்தைச் சீரமைக்க முடியும் என்று எதிர்பார்க்கின்றோம். அத்துடன் நிவாரணத்தைப் பெறுகின்ற மக்கள் திருப்திகரமாகப் பெற்றுச் செல்வார்கள் என்றும் நம்பப்படுகிறது.

இத்தகைய பரீட்சார்த்த நடவடிக்கைகளுக்குப் பொதுமக்கள் தம்மாலான ஒத்துழைப்பினை வழங்க வேண்டும்- என அவர் மேலும் கூறினார். (201-9)



'கிலாஸோ சிமித்கிளின் கொன்ஸியூமர் கெல்த் கெயர்' நிறுவனத்தால் "ஆரோக்கிய அறிவு" தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்திலுள்ள மருந்தகங்களுடன் அண்மையில் நடத்தப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.

நிகழ்வில் கலந்துகொண்ட விற்பனைப் பயிற்சி முகாமையாளர் அகமட் நீமிகாசிம் மருந்தக உரிமையாளருக்கு சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்: லக்ஸ்மன்)

# சுயதொழில் இழந்தோருக்கு இலங்கை வங்கி கடனுதவி

யாழ்ப்பாணம்,ஒக்.4

போர்ச்சூழலின் போது சுயதொழில்களை இழந்த சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 20 குடும்பங்களுக்கு இலங்கை வங்கி 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியை கடனுதவித் தொகையாக வழங்கவுள்ளது. வழங்கப்படும் இக்கடன் உதவிகள் 10 வருட காலத்தில் தீர்க்கப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்கள் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது எனவும் முன்னுரிமை அடிப்படையில் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும் எனவும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த-201-315)

# மாதகல் பிரதான வீதியை பாவனைக்கு விடக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.4

மாதகல் கடற்கரைக்குச் செல்லும் பிரதான வீதி பாவனைக்கு விடப்படாததால் கடற்றொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகக் கூறுகின்றனர்.

தற்போது சேந்தாங்குள வீதி கடற்கரைக்குச் செல்ல பயன்படுத்துவதால் மீன்களை விரைவாகக் கொண்டு வந்து சந்தையில் விற்பனை செய்ய முடியாது உள்ளதாகவும் இவ்வீதி மிகவும் சேதமடைந்து இருப்பதால் விபத்துக்கள் ஏற்படுவதாகவும் கூறப்படுகின்றது.

மாதகல் பிரதான வீதியூடாகக் கடற்கரைக்குச் செல்வதற்கு அனுமதி பெற்றுத் தருமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். (201-313)

# பிரதேச செயலக மத்தியஸ்த சபைக்கு கூடுதல் அதிகாரம்

யாழ்ப்பாணம்,ஒக்.4

பிரதேச செயலர் மட்டத்தில் இயங்கும் மத்தியஸ்த சபைகளுக்குக் கூடுதல் அதிகாரங்களை மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு வழங்கியுள்ளது.

இம்மாதம் முதலாம் திகதியில் நடைமுறைக்கு வரும் வகையில் கூடுதல் அதிகாரங்களை வழங்கியுள்ளதுடன்-

இதுவரைகாலமும் 25 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட பிணக்குகளே தீர்வுகளுக்காக (மத்திய சபை தீர்வுக்கு) எடுக்கப்பட்டது.

தற்போது 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட பிணக்குகள் வரை ஆராய்ந்து தீர்ப்பதற்கு மத்தியஸ்த சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை- மத்தியஸ்த சபைகளின் ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கும் பிரதேச செயலர்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் முல்லைத்தீவு- கிளிநொச்சி மாவட்டங்களில் மத்தியஸ்த சபைகளை அமைப்பதற்கு நீதியமைச்சுச் செயலாளர் மாவட்ட அரசாங்க அதிபரிடம் அறிக்கைகளைக் கோரியுள்ளார்.(201-302)

# வாதரவத்தையில் இலவச மருத்துவ முகாம் பிரதேச மக்களுக்குச் சிறப்பு சிகிச்சை



கோப்பாய்,ஒக்.4

ஆயுள்வேத பாதுகாப்பு சபையின் ஏற்பாட்டில் வலி.கிழக்கு பிரதேச சபையின் அனுசரணையுடன் முதலாவது நடமாடும் இலவச மருத்துவ முகாம் நேற்று வாதரவத்தையில் நடைபெற்றது.

இந்த மருத்துவ முகாமில் இப்பிரதேசத்தைச் சேர்ந்த பலரும் பல்வேறு நோய்களுக்குச் சிகிச்சை பெற்றனர்.

சித்த ஆயுள்வேத யுனானி, அக்குப்பங்சர் முறைப்படி நாள்பட்ட வாதநோய்கள், குடற்புழுக்கள், சொறி சிரங்கு, உடற்பலவீனம், ஆஸ்துமா போன்ற நோய்களுக்குச் சிறப்புச் சிகிச்சை வழங்கப்பட்டது.

இந்தச் சிறப்பு சிகிச்சை முகாமில் சுமார் 250 பேர் கலந்து பயன் பெற்றதுடன் கலந்து கொண்ட அனைவருக்கும் சிறப்பு சத்துணவுக் கஞ்சியும் வழங்கப்பட்டது. (ஒ-72)

# பாடசாலை மாணவர்களிடம் ஆங்கிலத்திறனை சிறு பராயத்திலேயே வளர்த்துக்கொள்ள வேண்டும்

## உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் உரை

வலி.வடக்கு,ஒக்.4

ஆங்கிலத் திறனை சிறு பராயத்திலேயே பாடசாலைகள், மாணவர்களிடையே வளர்த்துக் கொள்ள வேண்டும். இந்த வகையில் மேலைத்தேய இசையுடன் ஆங்கிலத்தை வளர்க்க எடுத்த முயற்சி பூரண வெற்றியைத் தந்துள்ளது.

மேற்கண்டவாறு தெரிவித்தார் உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஷிராணிமில்ஸ்.

உடுவில் மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற ரலன்ட் சேச் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோது தெரிவித்தவை வருமாறு:

மேலைத்தேய இசையையும், ஆங்கிலத் துறையையும் வளர்க்க எடுத்த முயற்சி மாணவர்களிடையே வெற்றி பெற்றுள்ளது.

இதற்கு ஆதரவாக வை.எம் . சி.ஏ நிறுவனமும் உதவிகளைச் செய்துள்ளன. ஆங்கிலம் இன்று சர்வதேச நாடுகளின் பொது மொழியாகக் காணப்படுகின்றது.

இதனைக் கற்றுக் கொள்ளவும் வளர்த்துக் கொள்ளவும் நாம் முயற்சி எடுக்க வேண்டும்.

தற்போது இடம்பெற்ற போட்டிகள் கூட மாணவர்களிடையே ஆங்கிலக் கல்வியை வளர்க்கவும் மாணவர்களுடைய ஆற்றல் திறனை வளர்க்கும் முகமாக இப் போட்டிகள் இடம்பெற்றுள்ளன.

இவற்றுடன் நின்று விடாது மேலைத்தேய இசையையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். இதன் மூலம் ஆரோக்கியமான சூழலையும் உளநலமிக்க அபிவிருத்தி அடைந்த சமூகத்தையும் உருவாக்கிக் கொள்ளமுடியும்.

மாணவர்கள் மத்தியில் கல்வியை மட்டும் வளர்த்துக் கொள்ளாது ஒவ்வொரு மாணவனையும் பல் தேர்ச்சி கொண்ட மாணவர்களாக உருவாக்க வேண்டும்.

கல்வியுடன் மொழி, கலை, விளையாட்டு என்பவற்றையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். இத்ன் மூலம் திடகாத்திரமான அமைதியான சிறந்த சமூகத்தை உருவாக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். (201-86)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**
புதிய விடயங்களை அறிந்து கொள்வதில் நாட்டம் செல்லும். கடன் மிகுதிகள் வசூலாகும். குடும்ப உறுப்பினர்கள் சிலரின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். சில வேலைகள் எளிதில் முடிவடையாமல் இழுத்தடிக்கலாம். நன்றி மறந்த ஒருவரை நினைத்து மனவருத்தம் அடைவீர்கள். வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும்.

**இடபம்:**
எதிலும் தனித்தன்மையுடன் செயற்பட நினைப்பீர்கள். சில காரியங்களை அவசரப்பட்டு செய்து விட்டு, பின்னர் மனவருத்தம் அடைவீர்கள். கனிவான பேச்சுக்களால் சிக்கலான ஒருவரிடம் காரியம் சாதிப்பீர்கள். அடுக்கடுக்காக பல வேலைகளைத் திட்டமிட்டு செய்வீர்கள். உங்களுக்கு பிடித்த பொருள் ஒன்றை வாங்கலாம். அனுகூலமான நாள்.

**மிதுனம்:**
குடும்ப உறுப்பினர்களின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். செய்ய மறந்த காரியம் ஒன்றால் தண்டச் செலவுகளை, பிரச்சினைகளைச் சந்திக்கலாம். அயலாருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். சிலரை சந்திக்க முற்பட்டு அது நடக்காமல் போகலாம். பிள்ளைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். வெளியூர் பயணம் செல்லலாம்.

**கடகம்:**
ஆதாயம் தரும் சில விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். கடும் வேலை நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். வெளியூர்களில் இருக்கும் உறவினர்கள் சிலர் உங்களை தொடர்பு கொண்டு உதவி கேட்கலாம். சுப காரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு. மற்றவர்களைப் பார்த்து பொறாமைப்படுவீர்கள். உதிரி வரவுகள் கிட்டும்.

**சிங்கம்:**
ஆரவாரம் இல்லாமல் அமைதியாக செயற்பட வேண்டிய நாள். உறவினர்கள் வழியில் செலவுகளைச் சந்திக்கலாம். எந்த விடயத்திலும் பிடிவாதம் இல்லாமல் பொறுமையாக செயல்பட வேண்டும். நண்பர்கள் சிலர் உங்களை விமர்சிக்கலாம். எதிர்பாராத வகை யில் சந்தோஷம் தரும் அல்லது சங்கடம் தரும் செய்தியைக் கேட்கலாம்.

**கன்னி:**
எந்த விடயத்திலும் மற்றவர்களிடம் இருந்து உங்களை வேறுபடுத்திக் காட்ட முற்படுவீர்கள். அலைச்சல் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே சில வேலைகளை முடிப்பீர்கள். சிக்கலில் இருக்கும் நண்பருக்கு உதவி செய்வீர்கள். உங்களின் அனுபவம் ஒன்றை மற்றவர்களிடம் சொல்வீர்கள். விருந்து, விசேடங்களால் சந்தோஷம் உண்டு.

**துலாம்:**
வெறுப்பு, விரக்தி விலகி உற்சாகம், தெம்பு குடிகொள்ளும் நாள். பல நாட்களாக முயற்சித்தும் நடக்காத காரியம் ஒன்று இன்று நடக்கலாம். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் நபர்களை அடையாளம் கண்டு கொள்வீர்கள். நாடி வந்த சிலருக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். குடும்ப பாசம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:**
அவசரச் செலவுகளுக்காக நண்பர்கள் சிலரிடம் கைமாத்தாக பணம் வாங்கலாம். சிக்கலில் இருக்கும் சிலருக்கு நல்ல ஆலோசனை சொல்வீர்கள். சில வேலைகளுக்காக நீங்கள் மட்டுமின்றி, மற்றொருவரையும் கூட்டிக் கொண்டு அலையலாம். மனதிற்கு பிடித்த வகையில் சில விடயங்கள் நடக்காமல் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம்.

**தனுசு:**
உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர் கடைசி நேரத்தில் அதைக் காப்பாற்றாமல் கையை விரிக்கலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். சுபமாக முடியும் என நினைத்த வேலை ஒன்றுக்கு கடுமையாக அலையலாம். குடும்பத்தினரின் விமர்சனங்களைச் சந்திக்கலாம். சில பொருள்களை எங்காவது வைத்து விட்டு தேடலாம்.

**மகரம்:**
பிரியமான உறவினர்கள், நண்பர்களின் சந்திப்பு நிகழும். பிள்ளைகளின் செயற்பாடுகளைப் பற்றி மற்றவர்களிடம் சொல்லிப் பெருமைப்படுவீர்கள். ஓய்வாக இருக்க நினைத்தாலும், அது முடியாத வகையில் ஏதாவது வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். மற்றவர்கள் செலவில் உங்களின் சில தேவைகள் பூர்த்தியாகலாம்.

**கும்பம்:**
உடன் பிறப்புக்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். கடனாகக் கொடுத்த பணம் ஒன்று திரும்ப வரலாம். முன்யோசனையுடன் செயற்படுவதன் மூலம் சில விடயங்களில் ஆதாயம் பெறுவீர்கள். இதோ அதோ எனப் பல நாள்களாக இழுத்துக் கொண்டிருந்த காரியங்கள் நடக்கலாம். மதிப்பு, கௌரவம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள்.

**மீனம்:**
மற்றவர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். குடும்ப உறுப்பினர்கள் உங்களின் யோசனைகளைக் கேட்காமல் ஏட்டிக்குப் போட்டியாக செயற்படலாம். சில உணவுகளை அதிகமாக சாப்பிட்டு விட்டு வயிறு உபாதைகளுக்கு ஆள்படலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். நாவன்மை கூடும்.

# யாழ். பாடசாலைகளின் புலமைப் பரிசில் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.4

2010ஆம் ஆண்டு, தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறுகள் அண்மையில் வெளிவந்துள்ளன. எனவே சித்தியடைந்த மாணவர்களின் விவரங்களை உதயன் தொடர்ச்சியாக வெளியிடவுள்ளது. ஒரு தொகுதி மாணவர் விவரம் வருமாறு:

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

ர.அகிலா-157, சி.பாணுஜா-155, க.சர்மினி- 154, வ.டிலானி-153, இ.வதுசனா- 149, த.சங்கவி-148, சி.சுயூரன்-147, கு.துவாரகன்- 147, அ.நவோமியா-145, ப.ஜெரோன்- 143.

**கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தி.**

இ.ஷிந்துயன்- 181, ச.தனுஷிகா- 154, க.யதுகுலன்-150, யு.அஜந்தன்- 149, சி.விதுஷன்-146, ஜெ. பிரதீபன்-143.

**சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை**

ர.யதுஷன்-184, ச.சங்கவி-181, சி.டனுஜன்-173, ம.கங்காதீபன்- 171, சி.கம்சிகா- 169, க.தேனுஷன்-167, ர.கனிஸ்கர்- 167, ரா.பவிராம்-166, ஏ.துவாரகி-162, கு.ரிஷிகேசவன்-162, ஜெ.பானுஜா-160, ந.பிரியங்கன்- 158, ச.சஞ்சீவன்- 158, சே.நிருசா-156, மெ.சானுகா- 155, த.தரணிகா-153.

கி.சாருஜா-152, கி.ஜகிர்த்தன்-151, க.அனோஜா-149, மு.ஆகாஷ்- 148, தே.பவித்திரன்- 148, மு.கம்சிகா- 146, ரா.சாளினி- 145, ம.மோகனன்- 144, சி.சிந்துஜன்- 143, இ.நிதுர்ஷன்- 143, சி.பவித்திரா- 142, சி.சிவரஞ்சினி- 142, சி.நிவேதனன்-142.

(முடிவுகள் தொடர்ந்து வெளிவரும்). (201-09)

குறிப்பு: 02.10.2010 உதயனில் பிரசுரமான புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளில் மூன்றாவது பத்தியில் ஆரம்பமாகும் மாணவர்களின் பெயர் விவரம் அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களென தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. ஆனால் அவை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# முகாம்களில் கைதான 87 புலி சந்தேக நபர்களை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்க உத்தரவு

கொழும்பு, ஒக்.4

முகாம்களில் தங்கியிருந்தபோது கைது செய்யப்பட்ட 87 புலிச் சந்தேக நபர்களை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

வவுனியா இடம்பெயர் முகாம்களில் தங்கியிருந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் எனவும், இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதல்களின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் குறித்த சந்தேக நபர்கள் பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

சந்தேக நபர்கள் சிரேஷ்ட விடுதலைப் புலி உறுப்பினர்கள் என விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது என பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 87 பேரையும் எதிர்வரும் 13 ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (சி)

# உக்காத கழிவுகளை அகற்ற நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.4

உக்காத கழிவுகளை அகற்றுவதற்கு நல்லூர் பிரதேசசபை நடவடிக்கை எடுத்துள்ளதாக நல்லூர்ப் பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

நல்லூர்ப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நுளம்புகள் பரவக்கூடிய வகையில் காணப்படும் உக்காத கொள்கலன்களை இம்மாதத்தில் ஒவ்வொரு திங்கள், செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும் ஒவ்வொரு கிராமஅலுவலர் பிரிவுகளாகச் சென்று பிரதேச சபையால் சேகரிக்கப்பட்டு அப்புறப்படுத்தப்படவுள்ளன.

அதன்பின்னர் வீதியோரங்களில் கழிவுப்பொருள்களைப் போடுவோர் மீது கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

கழிவுகள் அகற்றப்படும் தினங்கள் வருமாறு:

இன்று திங்கட்கிழமை ஜே/94, J/96 கிராமசேவகர் பிரிவிலும் நாளை செவ்வாய்க்கிழமை J/110, J/111 பிரிவுகளிலும்-

8ஆம் திகதி வெள்ளிக்கிழமை J/112, J/113, J/114 பிரிவுகளிலும்-

11ஆம் திகதி திங்கட்கிழமை J/115, J/116 பிரிவுகளிலும்-

12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை J/117, J/118 பிரிவுகளிலும்-

15ஆம் திகதி வெள்ளிக்கிழமை J/119, J/120 பிரிவுகளிலும்-

18ஆம் திகதி திங்கட்கிழமை J/122, J/126 பிரிவுகளிலும்-

19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை J/121, J/123 பிரிவுகளிலும்-

22ஆம் திகதி வெள்ளிக்கிழமை J/ 99, J/124, J/125 பிரிவுகளிலும்-

25ஆம் திகதி திங்கட்கிழமை J/127, J/128 ஆகிய கிராமசேவகர் பிரிவுகளிலும் கழிவுகள் அகற்றப்படவுள்ளன. (ஒ-16)

# கடைசிக் கட்டம்



"தருமர் ஏன் காட்டுக்குப் போனார்?"

சூதாட்டத்தில் தோற்றுப் போனார். அதனால் அவர் காட்டுக்குப் போனார்.

தருமர் முதல் தடவை தோற்றுப்போய் திரௌபதியும் அவமானப்பட்ட பின்பு திருதராஷ்டினன் என்ன செய்தான் தெரியுமா?

அவர் இழந்த எல்லாப் பொருள்களையும் தர்மரிடம் திருப்பிக் கொடுத்தான்.

ஆனால், தருமர் மறுபடியும் சூதாடினார். சகலத்தையும் இழந்து விட்டார். அதன் விளைவு...

12 வருடம் வனவாசம் அஞ்ஞாதவாசம் செல்லத் தயாராக இருக்கிறார்.

அந்த நேரத்தில் ஒரு நிகழ்ச்சி நடக்குது. அந்த நிகழ்ச்சியை வியாசர் சொல்லவில்லையாம். ஆன்மிகப் பேச்சாளர் ஒருவர் இதை எடுத்துச் சொன்னார். "காட்டுக்குப் போவதற்கு முன்னர் நீங்கள் மறுபடியும் ஒரு தடவை சூதாட வேண்டும். அப்படி ஒரு குரல் கேட்குது."

"யார் அப்படி சொல்வது என்றால் திரும்பிப்பார்த்தார் அது திரௌபதி!"

எதுக்காக அப்படி சொல்கிறீர்கள்? என்று கேட்டார் தர்மர்.

நாங்கள் இப்பொழுது அடிமைத் தழையில் இருக்கிறோம். நீங்கள் வெற்றிபெற்றால் அது போய் விடும் என்றாள். அம்மா பணயம் வைப்பதற்கு ஒன்றும் இல்லை என்றார் தருமர். உங்களிடம் புண்ணியம் இருக்கிறதே என்றாள்.

முதலாம் ஆட்டத்தில் தோல்வி அடைந்தார்.

இரண்டாம் ஆட்டத்திற்கு காயினைக் கையில் எடுக்கும்போது திரௌபதி தடுத்தாள்.

"பகவானுடைய 12 நாமங்களினையும் சொல்லிவிட்டு ஆடுங்கள் என்றாள்" அதே மாதிரி ஆடியதில் வெற்றிபெற்றார். அடிமைத்தழை நீங்கியது.

கோ.சுவாமிநாதன்.

# கடவுளையே பதறவைத்த கண்ணப்பன்

காட்டில் பிறந்து, இரக்கமற்ற வேடுவர்களோடு வளர்ந்து, வேடர் தலைவனாகி வேட்டைக்குப் போனான் திண்ணன்.

காட்டுப்பன்றி ஒன்றைக் காடன், நாணன் என்ற நண்பர்களுடன் சேர்ந்து கொலை செய்தான்.

காடன் தீ மூட்டிப் பன்றிக்கறி சமைத்தான். தண்ணீர்த் தாகத்தால் அருகில் உள்ள பொன்முகளி ஆற்றுக்குச் சென்றான் திண்ணன்.

முகத்தைக் கழுவி நிமிர்ந்து பார்த்தான். எதிரில் காளத்திமலை. மலைக்குமேல் என்ன இருக்கும் என ஆர்வத்துடன் நாணனைக் கேட்டான் திண்ணன். "மேலே சிவபெருமான் குடுமித் தேவர் இருக்கிறார்" என்று கூறினார் நாணன்.

திண்ணன் மலையில் ஏறிச்சென்று சிவலிங்க மூர்த்தியைக் கட்டிப்பிடித்து அழுதான்.

பசியுடன் இருப்பாரே என்று நினைத்து மறுபடியும் கீழே சென்று பன்றிக்கறியையும், தண்ணீரையும் வாயில் விட்டுக் கொண்டுவந்து இறைவனுக்கு அபிஷேகம் செய்தான்.



சிவலிங்கத்தின் கண்ணில் இருந்து இரத்தக் கண்ணீ வடிந்தது.

மறுபடியும் கீழே சென்று பச்சிலைகளைப் பிழிந்து கொண்டு வந்து கண்களில் திண்ணன் வைத்தான். இரத்தம் வடிவது நிற்கவில்லை.தனது கண்ணை அம்பால் பெயர்த்து அந்தக் கண்ணில் அப்பினான். உடனே ரத்தம் வடிவது நின்றது. அவன் ஆனந்தக் கூத்தாடினான்.

அடுத்த வினாடி அடுத்த கண்ணிலும இருந்து இரத்தம் வடிந்தது. அடுத்த கண்ணையும் எடுப்பதற்கு அம்பை எடுக்கும்போது இறைவன் தடுத்தார்.

சிவஞான போதமும் சிவஞான சித்தியும் படிக்காமல் சிவஞானம் பெற்றான் கண்ணப்பன்.

சு.கி.சிவம்.



விசுவமடு – 02

# நிலமெங்கும் கைவிடப்பட்டிருந்த பொருள்கள்

[நேற்றைய தொடர்ச்சி]

விசுவமடு போரால் சிதைந்தகதைகளை மக்கள் சொல்லத் தொடங்கினார்கள்.

தைப்பொங்கல் அன்று (14.04.2009) எதிர்பாராத தருணத்தில் எறிகணைகள் வந்து விழும் பொழுது எல்லாவற்றையும் கைவிட்டு நாங்கள் ஓடினோம் என்று குணசிங்கம் செல்வநாயகி என்னிடம் குறிப்பிட்டார். பேரழிவுகளின் எச்சங்கள் காணி முழுவதும் நிறைந்து கிடக்கின்றன. எல்லோருமே எல்லாவற்றையும் விட்டு விட்டு ஓடியிருக்கிறார்கள் என்பதைக் காட்டும் அடையாளமாக கைவிடப்பட்ட பொருள்களின் எச்சங்கள் கிடக்கின்றன. நிலத்தின் மேலாக பலகைகளை அடுக்கி மண்போடப்பட்ட பதுங்குகுழிகள் சில அமைக்கப்பட்டிருந்தன. எறிகணைத் தாக்குதல்களில் இருந்து தப்பிக் கொள்ளுவதற்காய் தன் காணியில் தஞ்சமடைந் திருந்த மக்கள் உடனே அவற்றை தயாரித்து பதுங்கியிருந்ததாகக் குறிப்பிட்டார் செல்வநாயகி. வீட்டின் சுவர்க்கரையாக சுற்றிவர மண் மூட்டைகளை அடுக்கி அதிலும் தாம் ஒளிந்திருந்ததாகச் சொன்னார். "சுவர்க்கரையாக இருந்து இருந்து பார்த்தோம் முடியாத கட்டம் வந்த நிலையில் ஓடி விட்டோம்" என்று பெரிய மூச்சுடன் சொல்கிறார் அவர்.

குணசிங்கம் இப்பொழுது நோய்வாய்ப்பட்டவரைப்போல இருக்கிறார். அவரது மகன் காணியைத் துப்புரவாக்கிக் கொண்டிருக்கிறார். செல்வநாயகி வாழைத்தோட்டமாக இருந்த காணியை பெரும் ஏமாற்றத்துடன் காண்பித்தார். இந்தக் காணியில் எத்தனை குடும்பங்கள் இருந்தன? எவ்வளவு பொருள்களை விட்டுச் சென்றன? அவர்களுக்கு நான் என்ன சொல்லப் போகிறேன்? என்று செல்வநாயகி தலையில் அடித்துக் கொண்டு பேசினார். காணி முழுவதும் வாழைத் தோட்டம் இருந்ததைச் சாட்சியாக சொல்லுவதற்கு உக்கிப் போன கிழங்குகள் தெரிந்தன.

'நாங்கள் விவசாயத்திற்கு அடுத்தபா 5 ஐஸ்பழ வியாபாரம் செய்தோம். அந்தத் தொழிலும் எங்கள் வருமானத்தில் முக்கிய ஆதாரமாக இருந்தது. 1995இல் ஒரு சொப்பிங் பையுடன் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்துதான் எங்கள் வாழ்க்கையை விசுவமடுவில் தொடங்கினோம்' என்றார் செல்வநாயகி. இந்தக் காணியில் எட்டுக் குடும்பங்கள் எங்களுடன் இருந்தார்கள். நாங்கள் எல்லோருமே தைப்பொங்கல் அன்று எதிர்பாராத தருணத்தில் எல்லாவற்றையும் விட்டு ஓட நேர்ந்தது. பக்கத்தில் விழுந்த எறிகணைத்தாக்குதலில் பொன்னுச்சாமி இறந்துபோனார் என்று இரத்தம் வழியும் ஞாபகங்களை நினைவூட்டிச் சொல்கிறார் அவர். காணியில் இறந்த மாடுகளின் எலும்புக்கூடுகளும் கைவிட்டுச் சென்ற பொருள்களும் நிறைந்து கிடக்கின்றன.

புத்தடிச் சந்தியில் நிறைய ஆவணங்கள் கைவிடப்பட்டுச் சென்ற நிலையில் அழிந்து போயுள்ளன. பாடசாலை மாணவர் வரவு இடாப்பு, பரீட்சைத் தாள்கள், படிவங்கள் போன்ற ஆவணங்கள் கைவிட்டுச் சென்ற நிலையில் மழை வெயில் எல்லாவற்றிலும் நனைந்து உக்குகிற நிலையில் இருக்கிறது. பக்கத்தில் புத்தடி விநாயகர் ஆலயம் பாழடைந்த நிலையில் இருக்கிறது. பக்கத்தில் ஒரு சில மளிகைக்கடைகளும் தேநீர்க்கடையும் இயங்கியிருந்திருக்கின்றன. இப்பொழுது பாழடைந்த நிலையில் அவை இருக்கின்றது. அந்தச் சந்தியில் வைத்து விசுவமடு கிழக்கை சேர்ந்த சசி என்பவரைச் சந்தித்தேன். கடந்த காலத்தில் கலகலப்பாக அந்த சந்தி இருந்ததாக என்னிடம் குறிப்பிட்டார். முன்னால் உள்ள ஆழமான பெரும் வாய்க்காலால் வருடம் முழுவதும் குளத்து நீர் பாய்ந்து குளிர்ச்சியாக இருந்தது என்றும் சொன்னார். விசுவமடு கிழக்கில் மக்கள் இன்னும் மீளக்குடியேற்றப்படாத நிலையில் தனது காணியை வந்து பார்த்துச் செல்லுவதாக சசி குறிப்பிட்டார். 1978 இல் தன் தந்தை யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் இருந்து விசுவமடுவுக்கு விவசாயம் செய்ய வந்ததாகவும் சொன்னார். அந்த சந்திவரை சனங்களின் உணவுத்தட்டுக்கள் முதல் பாய் போன்ற பொருள்கள் வரை சீரழிந்திருக்கின்றன. குழந்தைகளது பொம்மைகள் உடைந்த நிலையிலும் புகைப்படங்களும் தெருக்களிலும் சிதைவுகளிலும் கிடந்தன.

அதே சந்தியில் சந்தித்த உமாரமணன் என்பவர் அந்த இடத்தை விட்டு இடம்பெயர்தோடிய திகிலான அனுபவத்தை மட்டுமே சொல்லிக் கொண்டிருந்தார். பிரமந்தனாறு, சுண்டிக்குளம் ஊடாகவும் கல்மடு தர்மபுரம் ஊடாகவும் இராணுவம் சுற்றிய வளைத்த நிலையில் விசுவமடுவைக் கைப்பற்றிய வேளை பேரதிர்ச்சியுடன் றெட்பானா நோக்கி இடம்பெயர்ந்து சென்றதாக சொன்னார். விசுவமடுக் குளத்தில் இருந்து வரும் இந்த வாய்க்கால்தான் எங்களை உயிர் வாழ வைத்தது என்று லோகநாதன் மதுரேஸ்வரி தெரிவித்தார். கோகிலதாசன் விஜிதா என்கிற தன் மகளைக் காட்டி அவரது கணவர் இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்டதாக குறிப்பிட்டார். வாய்க்காலில் தண்ணி பாயும் பொழுதுதான் கிணறுகளில் தண்ணீர் நிரம்பியிருக்கும். அதனால்தான் எங்கள் காணி செழித்திருக்கும். நல்ல வருமானம் கிடைக்கும் என மதுரேஸ்வரி தெரிவித்தார். விசுவமடுவில் உள்ள எல்லா கிணறுகளும் அடியுடன் வற்றி விட்டன. கிணற்றின் உள்ளே நிலம் காய்ந்து போய்க்கிடக்கிறது. வாய்க்கால்களிலும் தண்ணீர் இல்லை. யுத்த நாள்களில் இந்தக் விசுவமடுக்குளத்தை படைத்தரப்பு உடைத்ததாகக் சொல்லப்படுகிறது. கடந்த வருடம் பெருமழை நாள்களிலும் தண்ணீர் மறித்து கட்டாததினால் குளத்தில் நீர் வற்றி அடிமட்டத்துடன் நிற்கிறது.

விசுவமடுக்குளத்திற்குச் செல்லும் வழியில் காசித்தம்பி கனகலிங்கம் என்பவரைக் கண்டேன். மிக வேகமாக குளத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். ஒன்றரை வருடத்தின் பின்னர் இன்றுதான் குளத்தைப் பார்க்கச் செல்லுவதாக சொன்னபடி சென்று கொண்டிருந்தார். இன்றுதான் மீளக்குடியேறியிருக்கிற தான் தண்ணீருக்கு என்ன செய்வது என்று தெரியாமல் அல்லாடுவதாக சொன்னார். விசுவமடுக்குளத்தில் தண்ணீர் வற்றி அடியுடன் நின்று கொண்டிருந்தது. சில பெண்களும் சிறுமிகளும் குளத்தில் குளித்துக் கொண்டிருந்தார்கள். மற்றொரு பக்கமாக இராணுவத்தினரும் சிங்களத்தில் ஏதோ சத்தமிட்டபடி குளித்துக் கொண்டிருந்தார்கள். குளத்தடியில் கைவிடப்பட்ட நிலையில் உக்கிப் போயிருந்த சைக்கிள் எனது பார்வையை இழுத்தது. யுத்த நாட்களில் குளித்துக் கொண்டிருந்த யாரோ விட்டுச் சென்றதைப்போல அது கிடக்கிறது. இந்தக் குளத்தில் நீர் நிரம்பி வழிந்து செல்லும் நீரினால் பிரமந்தனாற்றுக் குளமும் நிறைந்திருக்கும் என தன் ஞாபகத்தை மீட்டுச் சொன்னார் கனகலிங்கம். விவசாயம் செய்வதற்காகவே தான் படிப்பையும் கைவிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து விசுவமடுவுக்கு வந்ததாக அவர் குறிப்பிட்டார். விசுவமடு மேற்கில் உள்ள அட்டைக்குளமும் வற்றிச் காய்ந்து போயிருக்கிறது. அந்தக் குளத்தின் ஊடாக பாசனம் எதுவும் மேற்கொள்வதில்லை. ஆனால் கால்நடைகள் அதில் சென்று நீர் அருந்தும் இப்பொழுது கால்நடைகள் குடி தண்ணீரில்லாமல் அலைந்து கொண்டிருப்பதை பார்க்க முடிகிறது.

குளத்தின் கீழ்ப்பக்கமாக ஒரு சிறிய கோயில் இருந்தது. சுற்றிவர மரங்கள். நீண்டகாலப் புளியமரம் ஒன்று வளர்ந்து நிற்கிறது. இராணுவத்தினர் விளையாடும் பொழுது போடும் சத்தங்கள் பின்பக்கத்தில் கேட்கின்றன. மிக அமைதியாகக் கந்தசாமி பிரார்த்தனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அன்றுதான் மீளக் குடியேறிய அவர் 'உன்னிடம் வந்து விட்டேன் அம்மா' என்று சொல்கிற வார்த்தைகள் மட்டும் தெளிவாகக் கேட்டன. வைரவர் கோயிலின் சிறிய கூரை கவிழ்ந்து கிடக்கிறது. கிட்டத்தட்ட இருபது நிமிடங்கள் அவர் பிரார்த்தனையில் ஈடுபட்டுக் கலைந்து வந்தார். கந்தசாமி 1961 பங்குனி 07ஆம் திகதி விசுவமடுவிற்கு நீர்பானத் திணைக்களத்தில் வேலை காரணமாக வந்திருக்கிறார். 1961 சித்திரை 12ஆம் திகதி விசுவமடுக்குளம் கட்டத் தொடங்கப்பட்டதாக தன் நினைவை மீட்டிக் குறிப்பிடும் கந்தசாமி பண்டாரவன்னியன் காலத்திற்கு முற்பட்ட விசுவமடுக்குளம் முன்பு விசுவநாதர் குளம் என்று அழைக்கப்பட்டதாக சொல்கிறார். விசுவநாதர் என்ற பெரியார் அல்லது மன்னன் அந்தக் குளத்தை சிறியளவில் அமைத்திருக்கிறார் என்றும் அதனால்தான் அந்தக் கிராமம் விசுவமடு என்ற பெயரைப் பெற்றது என்ற ஆவணத் தகவலையும் என்னிடம் குறிப்பிட்டார்.

தான் இந்தக் குளத்திற்கு வேலை கிடைத்து வரும் பொழுது பெருங்காடாக அந்தப் பகுதி இருந்தது என்றும் அதன் பிறகு 1967 முதல் அந்தப் பகுதியில் மக்கள் காடுகளை வெட்டிக் குடியேறியதாகவும் சொன்னார். டட்லியின் காலத்தில் சிவசுந்தரம் நீர்ப்பாசன இயக்குனராக இருந்த காலத்தில் சிறிகாந்தா அரச அதிபராக இருந்த காலத்தில் இந்தக் கிராமம் அமைக்கப்படதாக குறிப்பிட்டார். அப்பொழுது யாழ் மாவட்டத்திற்குள்தான் விசுவமடு அடங்கியதாகவும் தெரிவித்தார். தான் பிரார்த்தனையில் ஈடுபட்ட கோயிலில் கடந்த ஒன்றரை வருடங்களின் பின்னர் இன்றுதான் வந்திருப்பதாகச் சொன்னார். மாணிக்கம் என்பவர் வெங்காயத் தோட்டத்திற்கு தண்ணீர் கட்டிக் கொண்டிருந்த பொழுது நாகபாம்பு ஒன்று பாத்தி கட்ட விடாமல் மறித்தது. அதன் பின்னர் இந்த மரத்தின் கீழ் அவர் கல்லை வைத்து கோயிலில் பிரார்த்தனை செய்துவிட்டு தன் வேலையைச் செய்தார். அவர் வைத்த கல்லுத்தான் எங்கள் கடவுளாகியது என்று கந்தசாமி சொல்கிறார்.

எனது வீடு பலாலி இராணு வலயத்தில் இருக்கிறது. எனது மகன் சமாதான காலத்தில் அங்கு போய் முந்திரியப் பழம் பிடுங்கி வந்து தந்தான். அந்த மகனுடன் எனது மற்றைய மகனும் யுத்தத்தில் இறந்து விட்டான் என்று துயரத்துடன் குறிப்பிடும் கந்தசாமி நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பணியாற்றுகிற காலத்தில்தான் இந்தக் குளம் விசுவமடுத் தொட்டியாடி என்பன கட்டப்பட்டது. தொட்டியாடி என்று கேள்விப் பட்டிருக்கிறேன். அன்றுதான் நான் தொட்டியாடியைப் பார்த்தேன். குளத்திலிருந்து சுமார் 40 அடி உயரத்தில் அந்த தொட்டி அமைக்கப்பட்டு ஏற்று நீர்ப்பாசனம் செய்யப்படுகிறது. அதன் மூலமாகவே 210 விவசாயிகள் விவசாயத்தில் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். தொட்டியடிக்கு இயந்திரப்பகுதியில் இருந்து வந்த தண்ணீர் குழாய்களில் சிலது உடைந்து போயிருக்கின்றன. தொட்டியில் இருந்து பல வாய்க்கால்கள் பிரிந்து மேட்டு நிலத்திற்கு செல்கின்றன. தொட்டி இப்பொழுது காய்ந்து சருகுகள் நிறைந்து கிடக்கிறது.

**தீபச்செல்வன்**

பக்கத்தில் சிலர் தண்ணீர் எடுப்பதற்காக கைகளில் வெற்றுப் பாத்திரங்களுடன் செல்கிறார்கள். அங்குள்ள சில பம்பிகளைத்தவிர தண்ணீர் எடுக்க வேறு எந்த வழியும் இல்லை என்று அங்கு நின்ற இளைஞர் ஒருவர் குறிப்பிட்டார். தொட்டிக்கு தண்ணீர் நிறைக்கும் இயந்திரம் தொட்டியாடியில் இருந்து இருபது அடி உயரத்தில் இருக்கிறது. தொட்டியாடியில் இருந்து மூன்று வாய்க்கால்கள் செல்லும் வழிகள் அந்தப் பகுதியின் முக்கிய தெருக்களாக உள்ளன.

இயந்திரப் பகுதிக்கு சென்ற பொழுது எல்லாம் பழுதடைந்த நிலையில் கைவிடப்பட்டிருக்கிறது. பதினொரு இயந்திரங்கள் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அந்த இயந்திரங்களைப் பார்த்து இதுதான் விசுவமடுவின் வீழ்ச்சி என்று கந்தசாமி குறிப்பிட்டார். இந்த இயந்திரமும் குளமும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுக் கிடக்கின்றன. இவை இயங்கவில்லை என்றால் விசுவமடு ஒன்றுமற்றுக் கிடக்கிறது. இதுதான் எங்களின் நிலைமை என்பதை சுருக்கமாக அவர் சொன்னார். விசுவமடுக் குளத்தை நம்பிய பரவல் பாசனத்தையும் தொட்டியை நம்பிய ஏற்றுப் பாசனத்தையும் முக்கிய பிரிவுகளாகக் கொண்ட விவசாயக்கிராமம். இந்த இரண்டு நடவடிக்கைகளும் கடந்த யுத்தத்தினால் பாதிப்படைந்து இருக்கிற நிலையில் இன்று மக்கள் மீளக்குடியேறியிருக்கிறார்கள். அந்த மக்கள் மீண்டும் தங்கள் வாழ்க்கையைப் புதுபித்து பழைய நிலையை எட்டுவதற்கு குளத்தை மீளக்கட்டி இயந்திரங்களை திருத்திக் கொடுக்க வேண்டும். ஏதுமற்று வந்த மக்களின் இன்றைய அவசியத் தேவையாக இதைச் செய்ய வேண்டியிருக்கிறது.

விசுவமடு என்கிற பிரமாண்டமான விவசாயக்கிராமம் நமது நிலத்தின் முக்கியமான வளமாயிருக்கிறது. யுத்தம் மிகவும் கோரத்தாண்டவம் ஆடத் தொடங்கிய இந்த முதல் நிலம் அழிவுகளுக்குள்ளும் சோகக் கதைகளுக்குள்ளும் திரும்பி வந்திருக்கிற மக்கள் வாழும் நம்பிக்கையுடன் வந்திருக்கிறார்கள். கைவிடப்பட்ட பொருட்கள் நிறைந்த, பேயாடித்து விரட்டப்பட்ட கிராமத்தில் நிற்கும் தென்னைகள் நமது முழு நிலத்திற்குமான ஆதாரமாக நம்பிக்கையாக நிற்கின்றன. மீண்டும் நீர்க்கிராமமாக விசுவமடு மாறி அந்த மக்களின் வாழ்வு செழிக்கும் என்று நம்புவோம்.

★★★★★★

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க. வித்தியாலய மாணவி செல்வி

**குகதாஸ் கஜனி**

2010ஆம் ஆண்டு ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 166 புள்ளிகள் பெற்று வித்தியாலயத்திற்கு பெருமை தேடித்தந்த இவரை கல்வியில் மேன்மேலும் சிறப்புறப் பாராட்டி வாழ்த்துவதுடன், வெட்டுப் புள்ளிக்கு அண்மித்த புள்ளிகளைப்பெற்ற ம.கஜானன் (141), உ.கவின்ஸ் (138) ஆகியோரையும் 100 புள்ளிக்கு மேல் பெற்ற 8 மாணவர்களையும் 70 புள்ளிக்கு மேல்பெற்ற 8 மாணவர்களையும் கல்வியில் சிறப்புறப் பாராட்டி வாழ்த்தும் அதேவேளை இவர்களைக் கற்பித்து நெறிப்படுத்திய அதிபர், வகுப்பாசிரியர், ஏனைய ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை சமூகம்

**யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க.வித்தி.**

(சி/571566)

## மின்தடை வேளையில் திருடர்கள் தொல்லை

மானிப்பாய், உடுவில், ஆலடி ஆகிய பகுதிகளில் அடிக்கடி ஏற்படும் மின்சாரத் தடையினால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகக் கூறுகின்றனர்.

ஒரு வாரத்துக்கு மேலாகத் தொடர்ச்சியாக பகல், இரவு வேளைகளில் மணித்தியாலக் கணக்கில் மின்சாரத் தடை ஏற்படுகின்றது. எனவே இந்த மின்சாரத் தடையைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி இரவு நேரங்களில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருவதாகப் பொது மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (201-313)

## விருதுபெற்ற விக்கி அண்ணை

(இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளை)



சிறந்த சேவையான வங்கிச் சேவையில் 28 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றியமைக்காக பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (B.M.I.C.H)இல் 21.08.2010இல் விருது வழங்கும் வைபவத்தில் இலங்கை வங்கியின் பிரதிப் பொதுமுகாமையாளர்

**திரு.டபிள்யூ.டீ.எப்.விமலரெட்ணாவிடமிருந்து**

விருது பெற்றமையையிட்டு மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அம்பாள் மரக்காலை, நல்லூர். (104094)

திரு.செ.ரஜனிகாந்
திரு.செ.ரஜனிதரன்
(வைகுட்டி).


**CSC® இன்**
COMPUTER EDUCATION



# விஜயதசமி

கல்வித்திருவிழா

**Vijayathasamy Offer**
**60%-75% Discount**
**விஜயதசமி சிறப்புச்சலுகை**

ISO 9001 : 2000 சர்வதேசதர அங்கீகாரம்

விஜயதசமி நன்நாளில் உங்களின் கொம்ப்யூட்டர் கல்வியை சிஎஸ்சி. உடன் ஆரம்பியுங்கள். முன்கூட்டியே எமது கிளைகளில் பதிவுகளை மேற்கொண்டு விஜயதசமி அன்று நடை பெறும் விசேட வகுப்புக்களில் கலந்து கொள்ளுங்கள்.

**CSC-ASIAN**
**COMPUTER EDUCATION**

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677

கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-2262399

230, 1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி. T.P : 021-2270267


## මහජන සම්පත / மஹஜன சம்பத / Mahajana Sampatha

**01.10.2010**

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2299

வெற்றி எழுத்து: **G** வெற்றி எண்கள்: **0 3 6 2 6 9**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து/எண்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | G 0 3 6 2 6 9 | ரூபா.14,519,856/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 0 3 6 2 6 9 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | 3 6 2 6 9 | ரூபா. 100,000/= | பரிசுகள் 14 |
| 3 பரிசுகள் | 6 2 6 9 | ரூபா. 10,000/= | பரிசுகள் 141 |
| 4 பரிசுகள் | 2 6 9 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1292 |
| 5 பரிசுகள் | 6 9 | ரூபா. 100/= | பரிசுகள் 13132 |
| 6 பரிசுகள் | 9 | ரூபா. 20/= | பரிசுகள் 129769 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து/எண்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 0 3 6 2 6 | ரூபா. 10,000/= | பரிசுகள் 12 |
| 8 பரிசுகள் | 0 3 6 2 | ரூபா. 1,000/= | பரிசுகள் 134 |
| 9 பரிசுகள் | 0 3 6 | ரூபா. 100/= | பரிசுகள் 1319 |
| 10 பரிசுகள் | 0 3 | ரூபா. 50/= | பரிசுகள் 12912 |
| 11 பரிசுகள் | G | ரூபா. 20/= | பரிசுகள் 51773 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை **Rs. 14,077,540.00**

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஆல்போல் படரும் எமது உடுவில் மகளிர் கல்லூரியின் விழுதுகள் பெற்ற, பெறுகின்ற விருதுகள் பல,
ஆங்கிலமும் செந்தமிழும் அருகருகே வீற்றிருக்க இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலான நிறைபணி ஆற்றிவரும் எமது கல்லூரியின் மாணவர்கள் காலத்திற்குக் காலம் சாதித்தவை பல.
அந்தத் தொடர்ச்சியும் வளர்ச்சியும் இன்று அதிபர் திருமதி சிராணி மில்ஸ் காலத்தில் வரலாற்றுப் பதிவாகத் தொடர்வதை இந்த ஆண்டு ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் தேர்வு முடிவுகள் நிரூபித்துள்ளன.
யாழ்.மாவட்டத்திலேயே முதலாம் இடத்தைப்பெற்ற மாணவி செல்வி தாரணியையும் அவரோடு இணைந்து வெற்றிபெற்ற 40 மாணவர்களையும் வாழ்த்துவதோடு அவர்களை வழிநடத்தி வந்த அதிபர், ஆசிரியர்கள் குழாமினையும் வாழ்த்தி அவர்கள் இன்னும் இன்னும் கல்வியுலகிலே பெருமைமிகு சாதனை படைக்க வேண்டும் என இறையாசியை வேண்டுகின்றோம்.

**பெற்றோர், பழைய மாணவர்**
**உடுவில் மகளிர் கல்லூரி.**

(சி/571540)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மேல் வரிசையில் நிற்போர் (இடமிருந்து வலமாக)
(1) சி.சர்மிலன்
(2) க.கேதுஷன்
(3) ச.சுவேதாசர்மா
(4) சு.திலக்சன்
(5) க.சுஜித்
(6) தி.மணிமோகன்
(7) வை.இசைப்பிரியன்
(8) வி.மேனகன்
(9) சி.மதுர்சன்
(10) த.ரேஜயன்
(11) து.லக்சன்

கீழ் வரிசையில் நிற்போர் (இடமிருந்து வலமாக)
(1) தே.கர்சிகா
(2) ம.துஷரா
(3) வ.கம்சிகா
(4) த.பவீனா
(5) உ.மேவிதா
(6) ஸ்ரீ.திலக்ஷி
(7) லோ.துளசிகா
(8) பா.சாஜு
(9) வே.லதீபா

★ படத்தில் இல்லாதோர் - த.ரேஜயா, செ.நிருபா.

நூற்றாண்டு விழாக் காணும் யா/மகாஜனக் கல்லூரியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 22 மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 52 மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் இம் மாணவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களையும் தரம் 3 இருந்து நிறைவு வரை கற்பித்த ஆசிரியர்களான திரு.க.தேவகுமாரன், திருமதி சி.கிரிதரன், திருமதி அ.சிவகரன், திருமதி வ.சிவானந்தன் ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.**

[சி/571527]

# இசையில் மலையக மாணவர்கள் எவருக்கும் சளைத்தவர்கள் அல்லர்!

## மத்திய மாகாண தமிழ்க் கல்வியமைச்சர் உரை



இசைவிழாவில் மாணவர்கள் இசைப்பதையும், அவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியை பொன்னாடை போர்த்து கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

கண்டி, ஒக்.4

தொன்மையான கர்நாடக இசை மங்கி மறைந்து விடுமோ என்ற சந்தேகத்துடன் இருந்த எனக்கு இன்றைய இசை ஆராதனா நிகழ்ச்சி மூலம் மலையகத்தில் கர்நாடக இசை வளர்ந்து கொண்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன் - என மத்திய மாகாண கைத்தொழில், இந்துகலாசார, தமிழ்க்கல்வி அமைச்சர் அனுஷியா சிவராஜா தெரிவித்தார்.




ஆலாபனா இசை மன்றம் கலைவாணி ஜெயதீஸ்வரனின் மாணவர்களால் கண்டி இந்து கலாசார மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை நடத்திய இசை நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கண்டி இந்திய உதவித் தூதுவர் ராகேஸ் குமார் மிஸ்ரா, மத்திய மாகாண சபை முன்னாள் தலைவர் துரை மதியுகராஜா மற்றும் கல்விப் பணிப்பாளர்கள் கலந்து கொண்டு பரிசில்கள் வழங்கினர். வட இலங்கை சங்கீத சபை பரீட்சையில் முதல் தரத்தில் சித்தியடைந்த கண்டி மாணவர்களுக்கு பதக்கங்களும் வழங்கப்பட்டன.

மாகாண அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இங்கு பங்குபற்றிய மாணவர்கள் ராகம், சுருதி, தாளம் விலகாமல் பாடுகின்றனர். இம்மாணவர்கள் தென்னிந்திய, யாழ், கொழும்பு மாணவர்களுக்கு எந்த விதத்திலும் குறைந்தவர்களல்லர் என்பதை நிரூபித்து விட்டனர். மலையக மாணவர்களுக்கு வசதி வாய்ப்பு கிடைக்குமாயின் அவர்கள் யாருக்கும் சளைத்தவர்களல்லர். கர்நாடக இசை புனிதமானது. கர்நாடக இசைமூலம் தமிழ் வளர்ந்தது - தமிழ்மூலம் கர்நாடக இசை வளர்ந்தது. இத்தகைய இசையினை பொறுமையுடனும், திறமையுடன் மாணவர்களுக்குப் பயிற்றுவித்து அரங்கேற்றிய கலைவாணி ஜெயதீஸ்வரனை மனதாரப் பாராட்டுகிறேன். அவர்பணி மலையகத்திற்கு தொடர்ந்து கிடைக்க வேண்டும் - இப்படி அனுஷியா தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய துரை மதியுகராஜா உரையாற்றுகையில்,

யாழ்ப்பாணத்தில் வட மாகாண சங்கீத சபை போன்று, மட்டக்களப்பில் விபுலானந்தர் இசை நடனக் கல்லூரி போன்று மலையகத்திலும் இசை,நடனக் கல்லூரி ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் இதற்கான ஆரம்பகட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன - எனத் தெரிவித்தார். (ளி)

## பதுளையில் தேர்தல் போஸ்டர் அச்சடிப்பு

# நிலுவைப் பணத்தைச் செலுத்தாத அரசியல்வாதிகளுக்கு எதிராக வழக்கு

பதுளை, ஒக்.4

நடத்து முடிந்த தேர்தல்களின் போது அச்சடித்த சுவரொட்டிகள், துண்டுப் பிர சுரங்களுக்கான செலவில் சுமார் 12 லட்சம் ரூபாவைச் செலுத்தாமல் இழுத்தடிக்கும் சில அரசியல்வாதிகளுக்கு எதிராக வழக்கு தொடரவுள்ளதாக பதுளையில் இயங்கி வரும் அச்சக நிறுவனமொன்று தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட அச்சகத்தின் உரிமையாளர் கூறியவை வருமாறு:-

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தல்களின் போது பணம் செலுத்துவார்கள் என்ற நம்பிக்கையின் பேரில் பல அரசியல்வாதிகளுக்கு சுமார் 12 லட்சம் ரூபா பெறுமதியான வேலைகள் செய்து கொடுக்கப்பட்டன.

எனினும், தேர்தல்கள் முடிந்து பல மாதங்களாகியும் அவர்களிடமிருந்து பணம் வரவில்லை.

கேட்கும்போதெல்லாம் ''இன்று தருகிறோம் நாளை தருகிறோம்'' என இழுத்தடித்து வருகிறார்கள். நான் அவர்களுக்கு இறுதி எச்சரிக்கை கொடுத்துவிட்டேன். எதுவுமே நடக்கவில்லை. எனவே, வேறு வழியின்றி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்குத் தீர்மானித்துள்ளேன் - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ளி)

# உட்கட்டமைப்பு வசதிகளின்றி தெனியாய நகரவாசிகள் சிரமம்

## கவனிக்குமா கொட்டப்பொல பிரதேசசபை?

தெனியாய, ஒக். 4

கொட்டப்பொல பிரதேச சபைக்கு உட்பட்ட தெனியாய நகரில் நீண்ட காலமாக உட்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தி செய்யப்படாததால் நகரவாசிகளும், நகருக்கு வந்து செல்லும் பொதுமக்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என விசனிக்கின்றனர்.

தெனியாய நகர வர்த்தகர்களிடமிருந்து கொட்டப்பொல பிரதேச சபை பல்வேறு வரிகளை அறவிடு கின்றது. எனினும், அது திருப்திகரமான சேவையை வழங்குவதில்லை என வர்த்தகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

தெனியாய நகரில் வடிகால் கட்டமைப்பு சீரற்ற நிலையில் உள்ளது. மழைகாலங்களில் நகரம் வெள்ளத்தில் மூழ்கிவிடுகிறது. நகரில் பொது மலசலகூடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. நகருக்கு வரும் பொது மக்களுக்கு குடிதண்ணீரைப் பெறும் வசதியும் இல்லை.

நகரிலிருந்து தெனியாய மாவட்ட வைத்தியசாலைக்குச் செல்லும் வீதி மற்றும் தெனியாய பௌத்த விகாரைக்குச் செல்லும் வீதி என்பன நீண்ட காலமாக செப்பனிடப்படவில்லை.

பஸ் நிலையம் அண்மித்த பகுதியில் வடிகால் இல்லாமையால் கழிவுநீர் தேங்கி விடுகின்றது. இதனால் அப்பகுதி துர்நாற்றம் வீசுகிறது.

அரசியல்வாதிகள் தேர்தல் காலங்களில் தரும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதில்லை. எனவே கொட்டப்புலா பிரதேச சபை இது குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் - இப்படி வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. (ளி)

# முதியோரின் நலன்களைக் கவனிக்க விசேட அதிகாரிகளை நியமிக்கக் கோரிக்கை

சம்மாந்துறை, ஒக்.4

அம்பாறை மாவட்டத்திலுள்ள முதியோரின் நலன்களைக் கவனிக்க பிரதேச ரீதியாக விசேட அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும். அத்துடன் ஓய்வு மண்டபங்களும் நிர்மாணிக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்தின் சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் முதியோர் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஆண்கள் பெண்கள் என ஆயி ரத்துக்கும் மேற்பட்டவர்கள் அங்கத்துவம் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கு முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இது தவிர வேறெந்த நலன்புரிச் சேவைகளும் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இம் முதியோர்களில் பெரும்பாலானோர் பார்வைக் குறைவு, நடமாட முடியாத நிலை, போஷாக்கின்மை, நீரிழிவு, இரத்த அழுத்தம் உள்ளிட்ட பல நோய்களுக்கு ஆளாகியுள்ளனர்.

இவர்களின் பிரச்சினைகளையும், குறைபாடுகளையும் கேட்டறிந்து தீர்வு காண்பதற்கும், ஆலோசனைகள் வழங்குவதற்கும் அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

இம் முதியோர்கள் வீட்டில் முடங்கிக் கிடக்கின்றனர். இதனால் மன உளைச்சல் உள்ளிட்ட தாக்கங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். இவற்றிலிருந்து நிவாரணம் பெறுவதற்காகத் தினமும் சில மணித்தியாலமாவது ஏனைய மக்களுடன் கலந்துபேசி மகிழ்வதற்கும், பத்திரிகை வாசித்தறிவதற்கும் ஏற்ற வகையில் முதியோர் ஓய்வு மண்டபங்கள் நிர்மாணிக்கப்படவேண்டும் (ளி)

## லொறியை வழிமறித்து காட்டுயானைகள் தாக்குதல்

திருகோணமலை, ஒக்.4

திருமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேசத்தில் காட்டு யானைகள் ஒன்று கூடி வீதியில் சென்று கொண்டிருந்த லொறியொன்றை மறித்து தாக்குதல் நடத்தியுள்ளன.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு 10மணியளவில் கந்தளாய் சீனி ஆலை 12ஆம் கட்ட வீதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் லொறிச் சாரதியும் உதவியாளரும் ஓடி உயிர்தப்பியுள்ளனர். லொறி முற்றாகச் சேதமடைந்துள்ளது. கந்தளாயில் தமது தேவைகளை முடித்துக் கொண்டு இவர்கள் திரும்பிக் கொண்டிருந்த போதே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. கந்தளாய் சீனி ஆலை பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (ளி)

# இலுக்குச்சேனை விபத்தில் முன்னாள் அதிகாரி பலி!

இறக்காமம், ஒக்.04

இலுக்குச் சேனையில் வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் மோட்டார் சைக்கிளும், ஹன்ரர் ரக வாகனமும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஓய்வு பெற்ற கிராமசேவை அதிகாரி உயிரிழந்துள்ளார்.

இறக்காமம் இலுக்குச்சேனை வித்தியாலயத்திற்கு முன்னாலுள்ள வீதியின் வளைவில் இவ் விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் மரணித்த ஓய்வு பெற்ற கிராம சேவை அதிகாரி கே.கலந்தர் லெப்பை (வயது - 61) இறக்காமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அக்கரைப்பற்றில் திருமணம் முடித்து வசித்து வந்தவர்.

இவர் சம்பவ தினம் வாங்காமத்திலுள்ள தமது உறவினர் வீட்டுக்குச் சென்றுவிட்டு திரும்பிக்கொண்டிருந்தபோது விபத்தில் சிக்கியுள்ளார்.

படுகாயங்களுடன் அம்பாறை பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட இவர் அங்கு உயிரிழந்துள்ளார். அக்கரைப்பற்று சிரேஷ்ட ஆசிரியை லைலாவின் கணவரான இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

இச்சம்பவம் தொடர்பாகதமணைப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ளி)

# பெரும்போக வேளாண்மைச் செய்கையில் திருமலை விவசாயிகள் மும்முரமாக ஈடுபாடு

திருகோணமலை மாவட்டத்தில் பெரும்போக வேளாண்மைச் செய்கைக்கான நடவடிக்கையில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

ஏற்கனவே கைவிடப்பட்ட பல ஏக்கர் விவசாய நிலங்களிலும் இம்முறை பெரும்போகப் பயிர்ச்செய்கை மேற் கொள்ளப்படவுள்ளது. இதற்கான முயற்சியில் பகுதி விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

இம்மாவட்டத்தில் கிண்ணியா, மூதூர், தோப்பூர், தம்பலகாமம், குச்சவெளி,முள்ளிப்பொத்தானை ஆகிய பகுதிகள் உட்படப் பல இடங்களில் இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிண்ணியா பிரதேசத்தில் சுமார் 5ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் வேளாண்மை செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது என விவசாய உத்தியோகத்தர் தெரிவித்தார். (ளி)

# தேக்கஞ்சோலைப் பகுதியில் புதிய பொலிஸ் நிலையம்

சேருவில, ஒக்.04

தோப்பூர் பள்ளிக்குடியிருப்பிலுள்ள தேக்கஞ்சோலைப் பகுதியில் அண்மையில் புதிய பொலிஸ் நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டது.

தோப்பூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மஹிந்த சேனாரத்ன திறப்பு விழாவுக்குத் தலைமை வகித்தார். திருகோணமலை மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரத்மலவின்ன பண்டார சம்பிரதாய பூர்வமாகப் புதிய நிலையத்தைத் திறந்து வைத்தார்.

ஆரம்பத்தில் பொலிஸ் கொடியை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரத்மலவின்னவும், தேசியக் கொடியை மூதூர் பிரதேச செயலாளர் என். செல்வநாயகமும் ஏற்றி வைத்தனர்.

தோப்பூர் பாத்திமா முஸ்லிம் வித்தியாலய மாணவிகள் தேசிய கீதம் இசைத்தனர்.

இத்திறப்பு விழாவில் மூதூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அபேரத்ன பண்டார, திருகோணமலை மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரத்மலவின்ன பண்டார, மூதூர் பிரதேச செயலாளர் என்.செல்வநாயகம், தோப்பூர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எம்.எச்.காஜா முகைதீன் ஆகியோர் உரையாற்றினர்.

அரச ஊழியர்கள் உட்படப் பெருந்திரளானோர் இதில் கலந்துகொண்டனர். பொலிஸ் நிலைய முன்றிலில் இன்னிசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது.(ளி)




# திருமலை மாவட்டத்துக்கு 6 தங்கத் தாரகை விருதுகள்

திருகோணமலை, ஒக்.4

திருகோணமலை மாவட்ட குருளைச் சாரணர்கள் ஆறு பேருக்கு மேலும் தங்கத் தாரகை விருதுகள் கிடைத்துள்ளன. இரண்டாவது திருமலை சாரணர் குழுவைச் சேர்ந்த (ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி) குருளைச் சாரணர்களே இவ்விருதுகளைப் பெற்றுள்ளனர்.

ஜீவகன் அபினேஷ், ரவீந்திரன் சாரங்கன், நவதனன் அரோன், சிவநந்தன் பிரதீப் மதுசாந், அன்பழகன் மதுசுதன், தேவேந்தரன் கவி பிரசாத் ஆகிய குருளைச் சாரணர்களே இவ்விருதுகளை ஈட்டியுள்ளார்கள்.

சாரணிய இயக்கத்தில் குருளைச் சாரணர் ஒருவர் பெற்றுக்கொள்ளும் அதிகூடிய விருது இது வாகும். கடந்த வருடமும் இச் சாரணர் குழுவைச் சேர்ந்த ஆறுபேர் இவ் விருதுகளைப் பெற்றுள்ளனர். இது வரை திருகோணமலை மாவட்ட குருளைச் சாரணர்கள் 12 பேர் இவ் விருதுகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ளி)

## திருமலையில் மூலிகைத் தோட்டம்

மூதூர், ஒக்.04

திருகோணமலை வன பரிபாலனத் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட 10ஏக்கர் காணியில் மூலிகைத் தோட்டம் அமைக்கப்படவுள்ளது என கிழக்கு மாகாண சுதேச வைத்தியத்துறை ஆணையாளர் இந்துராணி தர்மராஜா தெரிவித்தார்.

ஆயுர்வேத திணைக்களத்தால் பராமரிக்கப்படவுள்ள இத் தோட்டத்தில் ஆயுர்வேத தேவைகளுக்கான அனைத்து விதமான மூலிகைகளும் செய்கை பண்ணப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ளி)

# உள்ளூராட்சிச் சபை உதவியாளர்களுக்கு 4 நாள் பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.4

ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டமிடல் (ILDP) நிகழ்ச்சிகளில் ஈடுபடும் உள்ளூராட்சிசபை ஊழியர்களுக்கு நாளை செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நான்கு நாள் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி வகுப்புக்கள் உள்ளூராட்சி உதவியாளர்களுக்கும், பொதுசன தொடர்பு அலுவலர்களுக்கும் வழங்கப்படவுள்ளதாக சபைகளின் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கான தகவல் அளிக்கும் பயிற்சிநெறி (PIDT) என்னும் தலைப்பில் வேலணை, சுழிபுரம், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் உள்ள உள்ளூராட்சி சபை உதவியாளர்களுக்கே நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (ற-302)


## ஹாட்லிக் கல்லூரி தரம் 6 அனுமதி (2011)

எமது கல்லூரியில் தரம் 6 (2011) இற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பப் படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் பெற்றுப் பூரணப்படுத்தி 21.10.2010 இற்கு முன்னர் அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

அதிபர்.

(சி/571545)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2161 திகதி 02-10-2010

ஆங்கில எழுத்திற்கும் Q

வெற்றி எண்கள் 04 22 44 55

போனஸ் இல: 68

ஜக்பொட் பரிசு ரூ. 15,875,200/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 180878 | 20/- | 3,617,560/- |
| 2 இல | 12925 | 100/- | 1,292,500/- |
| 3 இல | 277 | 1,000/- | 277,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7290 | 40/- | 291,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 506 | 1,000/- | 506,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 08 | 10,000/- | 80,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 15,875,200/- | - |
| 1 இல + போனஸ் இல | 8660 | 100/- | 866,000/- |
| 2 இல + போனஸ் இல | 408 | 500/- | 204,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 306 | 200/- | 61,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 06 | 1,500/- | 9,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,704,860/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 211280 | | 9,304,860/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கேகாலை | 302383019-9-00 |
| கொழும்பு | 302382006-3-36 |
| அம்பாந்தோட்டை | 302379245-7-11 |
| களுத்துறை | 302382082-3-23 |
| கம்பஹா | 302382454-4-12 |
| காலி | 302386505-3-47 |
| பதுளை | 302381690-7-32 |
| நுவரேலியா | 302380360-5-28 |
| அநுராதபுரம் | 302385571-6-02 |
| புத்தளம் | 302378149-9-48 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 16,368,425/-

வெற்றி பெறாத டிக்கட்டுகள் 2010 ஒக்டோபர் 06 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
35n, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

# உடுவில் பிரதேச செயலக முதியோர் தின நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஒக்.4

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் சர்வதேச சிறுவர், முதியோர், மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வுகள் எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு உதவிப் பிரதேச செயலாளர் திருமதி உதயகுமார் யசோதரா தலைமையில் சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சுன்னாகம் வாழ்வக இயக்குநர் ஏ.ரவீந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ. மோகனேஸ்வரன், உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன், சிறுவர் நன்னடத்தை திணைக்கள யாழ். மாவட்ட அலுவலர் எஸ். சிவகரன், யாழ்.மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் எ.ஞானவேல், இலங்கை சுவிஷேச ஐக்கியத்துவ அபிவிருத்தி சேவை மாவட்ட அலுவலர் கே.துஷ்யந்தன், போரூட் திட்ட அலுவலர் திருமதி சுகந்தினி சிவா, சாந்திகம் நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ். வி.சங்கரப்பிள்ளை ஆகியோர் கலந்துகொள்வர்.

வாழ்வகம், ஆர்க் நிறுவனங்களின் மாணவர்களின் குழு நடனம் இடம்பெறுவதுடன் அ.சர்மியாவின் கவிதை நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

மாற்றுவலுவுள்ளவர்கள் மற்றும் முதியோர் 30 பேர் என தலா அறுபது பேர் இந் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (201-86)

# மாவட்ட ரீதியாக டி.ஐ.ஜிக்கள் நியமனம்

கொழும்பு, ஒக்.4

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒருவர் என்ற ரீதியில் பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் (டி.ஐ.ஜி) நியமிக்கப்படவுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

தற்போது ஒரு சில பிரதிப் பொலிஸ் மா அதிபர்களின் நிர்வாகத்தின்கீழ் இருமாவட்டங்கள் உள்ளடங்குகின்றன. அதன் காரணமாக நிர்வாகச் செயற்பாடுகளை இலகுபடுத்திவிடுவது தொடர்பாக இவ்விதம் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒருவர் என்ற ரீதியில் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் நியமிக்கப்படுவர் என்றும் பொலிஸ் தலைமையகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்கும் ஒரு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் என்ற ரீதியில் நியமனங்களை வழங்குவது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாகவும் அந்த அதிகாரி கூறினார். (ஒ-22)

# 'ஓகன்' இசைப்பயிற்சி

மானிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டை ஆகிய பிரதேச மாணவர்களின் நலன்கருதி 'ஓகன்' இசைப்பயிற்சி வழங்கப்படவுள்ளது. வாரத்தில் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய மூன்று நாள்கள் மாலை 3 மணி தொடக்கம் 4.30 மணிவரை நவாலி ஹேமலதா சிறுவர் நிதியத்தில் இடம்பெறவுள்ளது. தரம் 7முதல் ஜி.சீ.ஈ.சாதாரண தரம் வரை கற்கும் மாணவர்கள் நாளை செவ்வாய்கிழமைக்குள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (201-302)


## பாராட்டி வாழ்த்துகிறோம்



2010 தரம் 5 புலமைபரிசில் பரீட்சையில் 164 புள்ளிகள் பெற்று சித்தியடைந்த உடுவில் மகளிர் கல்லூரி மாணவி

**செல்வி ஆரணி குணதீசன்**

அவர்களைப் பாரட்டி வாழ்த்துவதுடன் இவர் கல்வி கற்ற கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், அன்பொளி கல்வி நிறுவனத்தினர் மற்றும் ஆசிரியை சரோமினி ஆகியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துத்துக் கொள்கிறோம்.

வாழ்த்துவோர்
அப்பா, அம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார்.

கட்டுடை,
மானிப்பாய். (104147)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பருத்தித்துறை சித்தி விநாயகர் கோயிலடியைச் சேர்ந்த சுரேஸ்-பவசர்மிலி தம்பதிகளின் செல்வப் புதல்வி

**சு.சுவர்ணா**

(யா/பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்)

2010ஆம் ஆண்டு ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 158 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளார். இவர் கல்வியில் மேன்மேலும் சிறப்புற வாழ்த்திப் பாராட்டுவதோடு, மேலும் பல திறமைச் சித்திகளைப் பெற வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்
அம்மம்மா,பெரியப்பா,பெரியம்மா,
அண்ணாமார்: சி.மதுஷன், சி.விபுஷன்.
தம்பி: சி.மிதுஷன்.

மோகன் கூல்பார்,
கண்டி வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (104092)


## ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 61
திகதி - 02.10.2010

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து X அதிர்ஷ்ட இலக்கம் 09 வெற்றி இலக்கம் 2 9 2 7 7

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | தொகை | பரிசு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | X | 09 | 2 | 9 | 2 | 7 | 7 | ரூ. 18,508,345.00 | - |
| 1 பரிசு | | 09 | 2 | 9 | 2 | 7 | 7 | ரூ. 2,000,000.00 | 01 |
| 2 பரிசு | | | 2 | 9 | 2 | 7 | 7 | ரூ. 100,000.00 | 02 |
| 3 பரிசு | | | | 9 | 2 | 7 | 7 | ரூ. 10,000.00 | 22 |
| 4 பரிசு | | | | | 2 | 7 | 7 | ரூ. 1,000.00 | 245 |
| 5 பரிசு | | | | | | 7 | 7 | ரூ. 50.00 | 2465 |
| 6 பரிசு | | | | | | | 7 | ரூ. 20.00 | 23683 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | தொகை | பரிசு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 2 | 9 | 2 | 7 | | ரூ. 1,000.00 | 25 |
| 8 பரிசு | | | 2 | 9 | 2 | | | ரூ. 100.00 | 251 |
| 9 பரிசு | | | 2 | 9 | | | | ரூ. 50.00 | 2482 |
| 10 பரிசு | X | | | | | | | ரூ. 20.00 | 9797 |
| 11 பரிசு | X | 09 | | | | | | ரூ. 100.00 | 1083 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,740,350.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு ரூ. 18,508,345.00


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.திருமதி அறிவழகன்-வனிதா தம்பதிகளின் செல்வப் புதல்வன்

**அ.அஜீவன்**

(யா/இணுவில் மத்திய கல்லூரி)

2010ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 171 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தை அடைந்தமையையிட்டுப் பெரும் மகிழ்வடைகின்றோம். அத்தோடு இப்பாடசாலை அதிபர் உயர்திரு.அ.சதானந்தன் அவர்களின் நல்வழி காட்டலுக்கும் ஊக்கத்துக்கும் எவருமே இணையாக முடியாது. அவருக்கு எங்களது நன்றிகள். மற்றும் தரம் 1,2 இல் கல்வி கற்பித்த ஆசிரியை மாலினி சிவசுதன் அவர்கள் இவரில் வைத்த நம்பிக்கைதான் இன்று இவர் உயர்வடையக் காரணம். அவருக்கும் எங்கள் நன்றிகள். மற்றும் தரம் 3, 4 கல்வி கற்பித்த ஆசிரியர் சி.சிவநேசன், திருமதி சு.நாகபூஷணன் ஆகியோருக்கும் எங்கள் நன்றிகள். மற்றும் புலமைப் பரீட்சைப் பாடத்தைத் திறம்படக் கற்பித்த திரு.கு.குகதாசன் ஆசிரியர் மற்றும் திரு.த.செல்வக்குமார் ஆசிரியர், திருமதி சோ.செல்வராணி ஆசிரியை, செல்வி கி.வதனா ஆசிரியைக்கும் எங்கள் மனமுவந்த நன்றிகளும் பாராட்டுக்களும். மற்றும் அஜீவன் தரம் 1 தொடக்கம் 5 வரை கற்றுவந்த உரும்பிராய் சண் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும் எங்கள் நன்றிகள் உரித்தாகட்டும்.

திரு.திருமதி அறிவழகன்-வனிதா
அக்கா-அஜீவா.

கொக்கன் வளவு,
இணுவில் கிழக்கு. (104066)

## சேவை நலன் பாராட்டும் புதிய அதிபர் வரவேற்பும்
## யா/நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை



**திரு. செல்லையா குணபாலசிங்கம் அவர்கள்**

எமது பாடசாலை அதிபராக 28.04.1999 முதல் 04.10.2010வரையான பதினொரு ஆண்டுகள் கடமையாற்றி ஓய்வுபெறுகின்றார். அவரைப் பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.



**திருமதி அம்பிகை சிவஞானம்**

எமது பாடசாலையின் புதிய அதிபராக நியமனம் பெற்றுள்ளார். அவரை வருக வருகவென வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

பாடசாலைச் சமூகம். (104106)

# இராம பக்தர்களின் வருகை அதிகரிப்பு அயோத்தியில் படைகள் வெளியேற்றம்

## மாயாவதியின் கோரிக்கை மத்திய அரசால் நிராகரிப்பு

லக்னோ, ஒக். 04

**சர்ச்சைக்குரிய நிலம் தொடர்பான தீர்ப்பு வெளியான பின்னர் அயோத்தியில் உள்ள இராமர் கோவிலுக்கு சுவாமி தரிசனம் செய்ய வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.**

**இதேவேளை, உத்தரப் பிரதேச மாநிலம், லக்னோ மற்றும் அயோத்தி உள்ளிட்ட முக்கிய நகரங்களில் இருந்த துணை இராணுவத்தினர் தங்களது முகாமுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர்.**



மாநிலத்தில் மேலும் சிறிது காலத்துக்கு இராணுவத்தினர் இருக்க வேண்டும் என்று முதல்வர் மாயாவதி விடுத்த கோரிக்கையை மத்திய அரசுஏற்கவில்லை.

இதனால் துணை இராணுவத்தினர் கடந்த சனிக்கிழமை காலையிலிருந்து தங்கள் முகாமுக் குத் திரும்பத் தொடங்கியுள்ளனர்.

உத்தரப் பிரதேச மாநிலத்தில் துணை இராணுவத்தினர் மேலும் 2 மாதங்களுக்கு இருக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு மாயாவதி கோரிக்கை விடுத்து கடந்த வெள்ளிக்கிழமை கடிதம் எழுதினார். ஆனால் இதற்கு மத்திய அரசிடமிருந்து எவ்வித பதிலும் வரவில்லை. இந்நிலையில் துணை இராணுவத்தினர் தங்களது முகாமுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர்.

இருப்பினும் அதிரடிப்படையைச் சேர்ந்த (ஆர்.ஏ.எவ்.) ஆயிரம் பேர் மாநிலத்தில் இருக்கின்றனர் என இராணுவத்தினர் தெரிவித்தனர்.

மாநிலத்தில் அயோத்தி நிலம் தொடர்பான உயர்நீதிமன்றத் தீர்ப்பை முன்னிட்டு ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிக்க போதுமான அளவுக்கு மத்திய துணை இராணுவப் படையை அனுப்பவில்லை என்று மாயாவதி குற்றம் சாட்டியிருந்தார்.

ஆனால் தீர்ப்பை முன்னிட்டு 60 ஆயிரம் படையினர் குவிக்கப்பட்டிருந்தனர். இதில் ஒக்ரோபர் 2 ஆம் திகதிவரை 5 ஆயிரம் பேர் இருப்பர் என மத்திய அரசு தெரிவித்திருந்தது.

# பாம்பன் படகு மீது இலங்கை மீனவர்கள் பெற்றோல் குண்டுவீச்சு

இராமேஸ்வரம், ஒக். 04

நடுக்கடலில் மீன்பிடித்த பாம்பன் மீனவர்களின் விசைப்படகு மீது இலங்கை மீனவர்கள் பெற்றோல் குண்டு வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பாம்பனில் இருந்து கடந்த முதலாம் திகதி சுமார் 150 விசைப் படகுகள், தெற்கு ஆழ்கடல் பகுதியில் மீன்பிடிக்கச் சென்றன. அப்போது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர், மீனவர்களின் படகுகளை விரட்டியடித்தனர்.

அப்போது இலங்கை தலைமன்னார் கடற்கரையைச் சேர்ந்த மீனவர்கள், நாரிழைப் படகில் விரைந்து வந்து, பாம்பன் மீனவரின் விசைப்படகு மீது பெற்றோல் குண்டு வீசினர். இது வெடித்துச் சிதறியதில் படகு தீப்பிடித்தது.

உடனே மீனவர்கள் தீயை அணைத்தனர். பின்னர் மீனவர்கள் பெரும் நஷ்டத்துடன் பாம்பன் கரை திரும்பினர்.

படகு மீது பெற்றோல் குண்டு வீசப்பட்ட சம்பவம், பாம்பன் மீனவர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# அயோத்தித் தீர்ப்புக் குறித்த சிதம்பரத்தின் கருத்துக்கு பா.ஜ.கட்சி கடும் கண்டனம்

அயோத்தித் தீர்ப்பு, பாபர் மசூதி இடிப்பை நியாயப் படுத்தவில்லை என்று கூறிய மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்துக்கு பாரதிய ஜனதாக் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் பிரகாஷ் ஜவடேகர் டில்லியில் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

1992 இல் நடைபெற்ற சம்பவம் குறித்து ப.சிதம்பரம் தீர்மானித்து தீர்ப்பு கூற வேண்டிய அவசியமில்லை. இந்த விவகாரம் நீதிமன்றத்தில் உள்ளது. இது குறித்து நீதிமன்றம்தான் தீர்ப்பு அளிக்க வேண்டும்.

அயோத்தித் தீர்ப்பு குறித்து சமாஜ்வாதிக் கட்சித் தலைவர் முலாயம் சிங்கும், ராஷ்ட்ரீய ஜனதா தளத் தலைவர் லாலு பிரசாத்தும் வெளியிட்ட கருத்துகள் துரதிருஷ்டமானவை. அனைத்துச் சமுதாய மக்களும் அமைதியாக இருக்கும் சூழ்நிலையில் அவர்களின் கருத்துகள் வகுப்புக் கலவரத்தை உருவாக்கும் வகையில் அமைந்துள்ளன.

- இப்படி அவர் கூறினார்.

காந்தி ஜயந்தியை முன்னிட்டு அவர் பிறந்த போர்பந்தரில் நடைபெற்ற பிரார்த்தனையில் குஜராத் முதல்வர் நரேந்திர மோடி பங்கேற்றார். அதன் பின்னர் அங்குள்ள பார்வையாளர்கள் புத் தகத்தில் தனது கருத்தைப் பதிவு செய்த மோடி, காந்தியடிகளின் ஆசியின் படி அயோத்தித் தீர்ப்பு அமைந்துள்ளது. இராம ராஜ்ஜியத்தை உருவாக்க வேண்டும் என்ற அவரின் விருப்பம் நிறைவேற வழி பிறந்துள்ளது - என்று எழுதினார்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய நரேந்திர மோடி, தனது சிறுவயது முதல் இந்த உலகத்தை விட்டுப் பிரியும் வரை இராமருக்காகவே காந்தியடிகள் வாழ்ந்தார் - என்று கூறினார்.

இதேவேளை, அயோத்தித் தீர்ப்பு மதநல்லிணக்கத்தையும், மனிதாபிமானத்தையும் வலியுறுத்தும் வகையில் அமைந்திருக்கிறது என உத்தரப் பிரதேசக் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

மாநிலக் காங்கிரஸ் கமிட்டியின் சமுதாய கலவர எதிர்ப்புக் குழுவின் தலைவர் அம்ரேஷ் மிஸ்ரா, அலிகாரில் செய்தியாளர்களிடம் கூறும்போது, அவாத், பைசாபாத் உள்ளிட்ட நகரங்களில் ஒரு பக்கம் தொழுகையும், மறுபக்கம் பூஜையும் நடைபெறுகின்றன.

# வீரப்பனைக் கொன்ற விஜயக்குமார் சி.ஆர்.பி.எவ்.தலைவராக நியமனம்

புதுடில்லி, ஒக்.04

மத்திய ரிசர்வ் பொலிஸ் படையின் புதிய டி.ஜி.பியாக தமிழகத்தைச் சேர்ந்த மூத்த ஐ.பி.எஸ். அதிகாரியான கே.விஜயக்குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

சந்தனக் கடத்தல் வீரப்பனை வேட்டையாடி பெரும் பரபரப்பை ஏற்படுத்திய தமிழக அதிரடிப் படைக்கு விஜயக்குமார் தலைவராக இருந்தவர். தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின்னர் மத்தியப் பணிக்கு மாறுதல் பெற்றுச் சென்று ஐதராபாத் பொலிஸ் அக்கடமியின் தலைவராக இருந்து வந்தார்.

இந்த நிலையில் தற்போது விஜயக்குமாரை சி.ஆர்.பி.எவ். தலைவராக மத்திய அரசு நியமித்துள்ளது.

மாவோயிஸ்ட் வேட்டையைச் சரிவரக் கையாளத் தெரியவில்லை என்று தற்போது சி.ஆர்.பி.எவ். தலைவராக இருக்கும் விக்ரம் ஸ்ரீவத்சவா, பெரும் விமர்சனத்துக்குள்ளாகியிருந்தார். இதையடுத்து நேற்றுமுன்தினம் அவரை அதிரடியாக மாற்றிய மத்திய அரசு அந்த இடத்திற்கு விஜயக்குமாரை நியமித்துள்ளது.

இந்த மாற்றம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. வனப் போர் முறைகளில் மிகுந்த அனுபவம் கொண்டவர் விஜயக்குமார். இவரது வனப் போர் உத்திகள் தான் வீரப்பனின் கொட்டத்தை அடக்க உதவியாக இருந்தன.

மாவோயிஸ்ட்டுகளும் தற்போது வனப் போர் முறைகளைப் பயன்படுத்தி, படையினருக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்து வருகின்றனர். எனவே விஜயக்குமார் சி.ஆர்.பி.எவ். தலைவராகியுள்ளதன் மூலம் மாவோயிஸ்ட்டுகளின் வன்முறைக்கு எதிரான உத்திகளில் பெரும் மாற்றம் ஏற்படலாம் எனக் கருதப்படுகிறது.

மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம்தான், விஜயக்குமாரை தனிப்பட்ட முறையில் சி.ஆர்.பி.எவ். தலைவர் பதவிக்குத் தேர்வு செய்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

## இந்தியச் செய்திகள்

# பிரி. இளவரசர் சார்ள்ஸ் தம்பதிக்கு ஜனாதிபதி பிரதீபாபட்டீல் விருந்து



புதுடில்லி, ஒக். 04

டில்லியில் பிரிட்டன் இளவரசர் சார்ள்ஸ் தம்பதியினருக்கு ஜனாதிபதி பிரதீபா பட்டீல் விருந்தளித்தார்.

டில்லியில் நடைபெறும் கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டியைத் தொடக்கி வைப்பதற்காக பிரிட்டன் இளவரசர் சார்ள்ஸ் நேற்றுமுன்தினம் டில்லி வந்திருந்தார். அவரது மனைவி கேமில்லா, சில நாள்களுக்கு முன்னர் இந்தியா வந்துவிட்டார். அவர் பெங்களூரில் 4 நாள்கள் தங்கி, இந்திய முறையில் வைத்தியசிகிச்சை மேற்கொண்டார்.

சார்லஸ் நேற்றுமுன்தினம் டில்லி வந்ததும் கேமில்லாவும் பெங்களூரில் இருந்து டில்லிக்கு வந்து சேர்ந்தார். பின்னர் இருவரும் ஜனாதிபதி மாளிகைக்குச் சென்றனர்.

அங்கு இருவரும், ஜனாதிபதி பிரதீபா பட்டீலைச் சந்தித்துப் பேசினார்கள். அப்போது சார்ள்ஸ் தம்பதியினருக்கு ஜனாதிபதி விருந்தளித்தார். இந்திய முறைப்படி சைவ உணவு பரிமாறப்பட்டது.

பின்னர் ஜனாதிபதி மாளிகையில் உள்ள மூலிகைப் பண்ணை மற்றும் மலர்ச் செடிகளைப் பார்க்க, சார்ள்ஸ் தம்பதியினரை ஜனாதிபதி அழைத்துச் சென்றார்.

மூலிகைச் செடிகளை காட்டி, 'இவை இந்தியாவில் கிடைக்கும் அரிய சக்தி கொண்ட செடிகள். இவை பல நோய்களை குணப்படுத்தும்' என்று பிரதீபா பட்டீல் எடுத்துக் கூறினார்.

இதைக் கேட்ட சார்ள்ஸ் தம்பதியினர் ஆச்சரியப்பட்டனர். அப்போது கேமில்லா, பெங்களூர் சிகிச்சையின் போது தனக்கு கிடைத்திருக்கும் உடல் நல முன்னேற்றம் பற்றி ஜனாதிபதியுடன் பகிர்ந்து கொண்டார்.

# மீன்பிடிக்கும் உரிமை கோரி 11ஆம் திகதி கச்சதீவு செல்ல தமிழக மீனவர்கள் முடிவு

இராமேஸ்வரம், ஒக். 04

மீன்பிடிக்கும் உரிமையை மத்திய, மாநில அரசுகள் பெற்றுத் தரக் கோரி, வரும் 11 ஆம் திகதி இலங்கை அரசிடம் தஞ்சம் கேட்டு கச்சதீவு நோக்கிப் பயணம் மேற்கொள்ள இராமேஸ்வரம் தீவு மீனவர்கள் முடிவு செய்துள்ளனர்.

இதுகுறித்து இராமேஸ்வரத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மீனவர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு -

இராமேஸ்வரம் மீனவர்கள் பிடிக்கும் மீன்கள், வலைகளை உலர்த்தவும், மீனவர்கள் ஓய்வு எடுக்கவும் கடற்கரையில் குடிசை வீடுகள் பல உள்ளன.

இந்த இடம் மத்திய அரசின் கடல்சார் அலுவலகத்தின் கீழ் உள்ளதால், நில வரியை அதிகமாக நிர்ணயித்து வசூலிக்கின்றனர். தற்போது வறுமையில் வாடும் மீனவர்கள் நில வரியைச் செலுத்த முடியாமல் உள்ளதால் மத்திய, மாநில அரசுகள் நில வரியை ரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கைக் கடற்படையினரின் தொடர் தாக்குதலால் இராமேஸ்வரம் தீவு, மண்டபம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல முடியாமல் வறுமையில் வாடுகின்றனர். பாரம்பரியமாக மீன்பிடித்து வந்த மீனவர்களின் உரிமையை மத்திய, மாநில அரசுகள் பெற்றுத்தர வேண்டும் எனக் கோரி எதிர் வரும் 11 ஆம் திகதி இலங்கை அரசிடம் தஞ்சம் கேட்டு கச்சதீவு நோக்கி விசைப்படகில் மீனவர்கள் பயணம் செய்வது.

45 நாள்கள் தடைக் காலத்தில் விசைப்படகு மீனவர்களுக்கு மட்டும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மற்ற மீனவர்கள் மீன்பிடிப்பதால் கடல் வளம் பாதிக்கப்படுகிறது. எனவே, அனைத்துத் தரப்பு மீனவர்களுக்கும் தடை விதிக்க வேண்டும்.

மண்டபம் தெற்குக் கடலில் மீன்பிடிக்கச் செல்ல ஏதுவாக பாறைகளை அகற்றி ஆழப்படுத்த மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்திய மீனவர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு மத்திய அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் விரைவில் இந்தியா முழுவதும் மீனவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது.

இப்படிப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# மாவோ, நக்ஸலைட்டுகளுக்குப் பயந்து பணிக்குச் செல்ல மறுக்கும் பொலிஸார்

சத்திஸ்கரில் மாவோ நக்ஸலைட்டுகள் அதிகம் உள்ள பகுதிகளில் பணிக்குச் செல்ல மறுத்த பொலிஸாருக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

அங்குள்ள ராஜ்நந்த்கான், சுர்குஜா, பஸ்தர், பீஜாப்பூர், நாராயண்பூர், கான்கேர் மற்றும் தண்டேவாடா ஆகிய மாவட்டங்களில் 40 ஆயிரம் சதுர கிலோ மீற்றருக்கு கனிம வளம் நிறைந்து கிடக்கிறது.

அதேவேளை அப்பகுதிகள் மாவோயிஸ்ட்டுகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. எனவே இப்பகுதிகளில் மாவோயிஸ்ட்டுகளை ஒடுக்க, மத்திய, மாநில அரசுகள் 40 ஆயிரம் பொலிஸாரைப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தியுள்ளது. இதில் அரைவாசிக்கும் மேற்பட்டோர், மத்திய ரிசர்வ் பொலிஸ் படையைச் சேர்ந்தவர்கள்.

சமீப காலமாகத் தேடுதல் வேட்டையில் ஈடுபடும் பொலிஸாரை மாவோயிஸ்ட்டுகள் கடத்திச் சென்று கொலை செய்து விடுவது தொடர்கதையாகியுள்ளது.

இதனால் மாவோயிஸ்ட்டுகளின் ஆதிக்கம் நிறைந்த ஏழு மாவட்டங்களில் பணிக்குச் செல்ல பொலிஸார் பலர் தயக்கம் காட்டுகின்றனர்.

# கல்விச்சுடர்
## O/L மாவட்ட வலம் - 2010
கல்விப் பொதுத்தராதர மாதிரிவினாத்தாள் -2010



ஆக்கம்: நன்றிக்கும் பாராட்டுக்கும் உரிய ஆசிரியர்

திரு. கே. கே. மோகன்
B.A (PGDE, Dip.in.Edu, SLTS
ஸ்டார் கல்வி நிலையம்-
காரைதீவு, T.P: 077 9356859

G.C.E.(O/L)

அம்பாறை வலம்

பரீட்சையில் வெற்றிபெற என்றும் இணைந்திருங்கள் உதயனுடன்...

## தமிழ் - 01
நேரம் 1 மணித்தியாலம்

* பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்கு பொருத்தமான விடையை தெரிவுசெய்க.

01. ''வம்பொன்று குழலாளை மணம் பேசி வரவிடுத்தார்''. இங்கு குழல் என்பதன் ஒத்த கருத்துச் சொல்.
1) தலை. 2) புல்லாங்குழல். 3) அளகம். 4) ஊதல்.

02. ''கோகனக நகை முல்லை முகை நகைக்கும் காலம்''. இங்கு முகை என்பதன் ஒத்த கருத்துச் சொல்.
1) பூ. 2) காய். 3) கனி. 4) அரும்பு.

03. ''ஈன்றாளோடு எண்ணக் கடவுளுமில்''. இங்கு ஈன்றாள் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.
1) தாய். 2) தந்தை. 3) கடவுள். 4) அன்னை.

04. ''இகல் வெல்லல் யார்க்கும் அரிது''. இங்கு இகல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.
1) பகை. 2) உறவு. 3) மாறுபாடு. 4) தெவ்வர்.

05. ''ஊழி திரண்டதோ கங்குல்''. இங்கு கங்குல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.
1) இரவு. 2) காலை. 3) பகல். 4) மாலை.

* பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

06. சபையில் சொல்லத்தகாத சொல்லை மறைத்து வேறு வகையில் சொல்லுதல்.
1) மரூஉ. 2) இடக்கரடக்கல்.
3) குழூஉக்குறி. 4) இலக்கணப்போலி.

07. கடலும் கடல் சார்ந்த நிலமும்.
1) குறிஞ்சி. 2) முல்லை. 3) மருதம். 4) நெய்தல்.

08. பின்வருவனவற்றுள் ஒல்லாந்து மொழிச்சொல்லாக அமைவது,
1) கம்பனி. 2) காபன். 3) கோப்பு. 4) கோப்பி.

09. TELNET (ரெல்நெற்) என்ற சொல்லின் தமிழ்ச்சொல்.
1) தொலைபேசி. 2) தொலைக்காட்சி.
3) தொலைவழி அணுகல். 4) வலைப்பின்னல்.

10. பனையின் இளமைப்பெயர்.
1) குட்டி. 2) வடலி. 3) நாற்று. 4) பிள்ளை.

11. பன்றி உறுமும்; கரடி
1) சீறும். 2) அலறும். 3) கத்தும். 4) கதறும்.

12. இரவும், பகலுமாக அரும்பாடுபடுதல் என்பதை உணர்த்தும் அருஞ்சொற்றொடர்.
1) உணர்வொழிகாலம். 2) ஊணுறக்கம் இல்லாமல்.
2) நுண்மாண் நுழைபுலம். 4) வழிமேல் விழிவைத்து.

13. மஞ்சு, பஞ்சு, அஞ்சு - இங்கு இடம்பெறும் ''ஞ்''
1) சிலேடை. 2) எதுகை. 3) மோனை. 4) ஓசை.

14. ஒலி, ஒழி, ஒளி என்பன முறையே தரும் பொருள்.
1) முடித்துவிடு, சத்தம், மறை. 2) மறை, முடித்துவிடு, சத்தம்.
3) சத்தம், முடித்துவிடு, மறை. 4) சத்தம், மறை, முடித்துவிடு.

15. முண்டகம், கமலம், தாமரை என்னும் ஒரு பொருளை உணர்த்தும் சொல்.
1) மல்லிகை. 2) தாமம். 3) அம்புயம். 4) தடாகம்.

01

* பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

16. ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே என்பதில் புறந்தருதல் என்றால்,
1) தோற்றோடுதல். 2) பாதுகாத்தல்.
3) கேடுசெய்தல். 4) ஏமாற்றுதல்.

17. துறைபோகக் கற்றவர்களுள் சுவாமி விபுலானந்தரும் ஒருவர். துறைபோதல் என்றால்.
1) கடற்பிரயாணஞ் செய்தல். 2) ஐயந்திரிபறக் கற்றல்.
3) வெளிப்படையாகக் கேட்டல். 4) அவமானமடைதல்.

18. ஆய்ந்தோய்ந்து பார்த்தே நட்புச்செய்தல் வேண்டும் என்பதில் ''ஆய்ந்தோய்ந்து'' என்னும் இணைமொழி குறிக்கும் சொல்.
1) நன்றாகச் சிந்தித்து. 2) காலம் தாழ்த்தி.
3) காலநேரம் பார்த்து. 4) நல்லது கெட்டது.

19. அபூர்வமாக நடைபெறும் சம்பவத்தை விளக்கப் பொருத்தமான உமவைத்தொடர்.
1) யானை முன் பூனைபோல்.
2) உலக்கை தேய்ந்து உளிப்பிடியானது போல.
3) கலியாணச் சந்தடியில் தாலி கட்ட மறந்ததுபோல.
4) அத்தி பூத்தாற்போல.

20. சந்தர்ப்பம் கிடைக்கும்போது அதைத்தக்கபடி பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற பொருளைத் தரும் பழமொழி.
1) சுவர் இருந்தால்தானே சித்திரம் வரையலாம்.
2) மனமுண்டானால் இடமுண்டு.
3) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
4) சிறுதுரும்பும் பல்லுக்குத்த உதவும்.

* பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

21. சிலவற்றை என்ற பகுபதத்தை பிரித்தால்வரும் அற்று என்பது,
1) பகுதி. 2) இடைநிலை. 3) விகுதி. 4) சாரியை.

22. பெயரெச்சமாகவும் வினைமுற்றாகவும் வழங்கும் ஒரு சொல்.
1) ஓடி. 2) ஓடும். 3) ஓடுதல். 4) ஓடினான்.

23. மலையில் வீழ் அருவி என்னும் தொடரில் வரும் ''இல்'' உருபு உணர்த்தும் பொருள்.
1) நீங்கல். 2) ஒப்பு. 3) எல்லை. 4) ஏது.

24. சிறுவர்கட்கு இனிப்புக்காட்டலாகாது என்னும் வாக்கியத்தில் வரும் இனிப்பு என்பது,
1) தொழிலாகு பெயர். 2) பண்பாகு பெயர்.
3) காலவாகு பெயர். 4) பொருளாகு பெயர்.

25. மேகம் கறுத்தது; மழை கொட்டியது; வெள்ளம் பாய்ந்தது. இது
1) தனிவாக்கியம். 2) தொடர் வாக்கியம்.
3) கூட்டு வாக்கியம். 4) கலப்பு வாக்கியம்.

26. ''பொற்றாலியோடு எவையும் போம்'' என்னும் கூற்றில் வரும் பொற்றாலி என்பது,
1) உவமைத்தொகை. 2) 3 ஆம் வேற்றுமைத்தொகை.
3) அன்மொழித்தொகை. 4) உம்மைத்தொகை.

27. ஆசிரியரினால் நூல் எழுதப்பட்டது என்ற வாக்கியத்தில் எழுதப்பட்டது என்பது,
1) எதிர்மறை வினை. 2) பிறவினை.
3) செய்வினை. 4) செயற்பாட்டுவினை.

28. பின்வரும் எழுத்துக்களுள் மொழிவழக்கிலே பயன்படாத எழுத்து.
1) ழே. 2) டே. 3) ஙே. 4) ணே.

02

29. பின்வருவனவற்றுள் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாக வழங்கும் ஒரு சொல்.
1) பிணை. 2) கன்னி. 3) விதவை. 4) விவேகி.

30. சொற்புணர்ச்சியில் வல்லினம் மிகுதலுக்கு ஓர் உதாரணம்.
1) கடற்கரை. 2) மாங்கனி. 3) தமிழ்ச்சங்கம். 4) அருட்செல்வம்.

* பின்வரும் வினாக்களிலுள்ள வாக்கியத்தின் முற்பகுதிக்கு மிகப்பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.

31. அவர் திருப்பித்தருவதாகக் கூறியா, ..........................
1) பணத்தை வாங்கினாரா.
2) பணத்தை வாங்கினார்?
3) பணத்தையா வாங்கினார்.
4) பணத்தை வாங்கினாரோ?

32. நீர் எந்த வகுப்பில் ..............
1) படிக்கிறனீ? 2) படிக்கிறீர்? 3) படிக்கிறாய். 4) படிக்கிறது?

33. கண்ணன் வைத்திருந்த புத்தகங்கள் ..........
1) புத்தம் புதியதாய் இருந்தன. 2) புத்தம் புதியதாய் இருந்தது.
3) புத்தம் புதியனவாய் இருந்தன. 4) புத்தம் புதியனவாய் இருந்தது.

34. அவர்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் ........
1) காணாமற்போன வளையலைக் கண்டுபிடிக்கவில்லை.
2) காணாமற்போன வளையலைக் கண்டுபிடித்தனர்.
3) காணாமற்போன வளையலைக் கண்டுபிடிப்பார்கள்.
4) காணாமற்போன வளையலைக் கண்டுபிடிக்கக்கலாம்.

35. மிகுந்த மகிழ்ச்சியால் அவளது மனம்..............
1) கணகணத்தது. 2) விறுவிறுத்தது. 3) தடதடத்தது. 4) கிளுகிளுத்தது.

36. பின்வருவனவற்றுள் சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொற்களின் வரிசை எது?
1) நளவென்பா, வலையாபதி, குண்டலகேசி.
2) வெற்றி, வெற்றிடம், வெத்திலை.
3) தன்மை, வெம்மை, மென்மை.
4) அங்கதம், அரங்கேற்றம், அணிந்துரை.

* பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.

37. அரசாங்க சேவை நியமனங்கள் பற்றிய பொதுவிதிகள் ........................ பிரசுரிக்கப்படும்.
1) சுற்றுநிருபத்தில். 2) கையேட்டில்.
3) வர்த்தமானியில். 4) விண்ணப்பத்தில்.

38. கட்டுக்கடங்காத இளைஞன் ............................... எனப்படுவான்.
1) சிறுபட்டி. 2) சகபாடி. 3) தொழும்பன். 4) கயம்பு.

39. நேற்று இரவு முழுவதும் ....................... காற்று வீசியது.
1) சுழல். 2) சுலல். 3) சுளல். 4) சுலள்.

* கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப்பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.

40. அ) ஆனால் பூனையோ தான் வசித்துப் பழகிய வீட்டிலேயே தங்கியிருந்து விடும்.
ஆ) எனவே நாய் தன் எசமானிடம் காட்டுவது போன்ற ஒரு நேயத்தை வளர்த்துக்கொள்ளும் ஆற்றல் பூனைக்கு இல்லையென்றே கூறலாம்.
இ) ''நாய் ஆளோடே, பூனை வீட்டோட'' என்ற பழமொழியில் ஓரளவு உண்மை உண்டு.
ஈ) அந்த வீடு கைமாறிப் போனாலும், புதிதாகக் குடிவருவோர் தன்னை அன்பாகப் பேணிவரும் வரையும் பூனை அங்கேயே தங்கிவிடும்.
உ) ஏனெனில், நாய் தன்னை வளர்க்கும் எசமான் எங்கே சென்றாலும் அவனைப் பின் தொடர்ந்து செல்லும்.
1) இ, உ, அ, ஈ, ஆ 2) அ, இ, ஆ, உ, ஈ.
3) ஈ, ஆ, உ, அ, இ. 4) இ, ஆ, அ, ஈ, உ.

03

## தமிழ் - 02
நேரம்: 3 மணித்தியாலங்கள்

01. சுருக்கமான விடைதருக.
1) பின்வரும் தொடரைப் பிரித்தெழுதுக.
'உடுக்கை யிழந்தவன் கைபோ லாங்கே'
2) எங்கிருந்து வருகிறீர்கள் எனும் வாக்கியத்தின் எழுவாய் யாது?
3) கனம், கணம் -இச்சொற்களின் கருத்துப் புலப்படுமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் எழுதுக.
4) ''மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது'' இவ்வாக்கியத்தில் இடம்பெறும் வினை வடிவங்களைப் பெயரிடுக.
5) மரவுரி, வேடர், ஆதிகால, தரித்தனர், அரையில் - ஒழுங்கு மாறியுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.
6) 1) நாளை பாடசாலை விடுமுறை ஆனால் நான் ஊருக்குச் செல்லவில்லை.
2) நாளை பாடசாலை விடுமுறை ஆகவே நான் ஊருக்கு செல்லவில்லை.
இவ்வாக்கியங்களுள் சரியாக இணைக்கப்பட்டுள்ள வாக்கியத்தை எடுத்துக் காட்டுக.
7) வாசிக்கும்பொழுது கைக்கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை?
8) எப்பொழுதும் உங்கள் ஞாபகமாகத்தான் இருக்கிறான். இதிலுள்ள இடைச்சொற்களை எடுத்துக்காட்டி அவைதரும் பொருள்களைக் குறிப்பிடுக.
9) 'அவன் தானே போவதாகக் கூறினான்' - இதிலுள்ள பொருள் மயக்கத்தைச் சுட்டிக்காட்டி, பொருள் மயக்கமற்ற முறையில் திருத்தி எழுதுக.
10. விரித்தெழுதுதல் என்றால் என்ன? விரித்தெழுதுதல் சந்தர்ப்பங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்திற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.
அ) இன்று போதைவஸ்துப் பாவனை இளஞ்சந்ததியினர் மத்தியில் அதிகரித்து வருகின்றது. இதனால் பல்வேறு சமூகப் பிரச்சினைகள் தலைதூக்குகின்றன. நாட்டில் நிலவும் அமைதிக்குக் கூடப் பங்கம் விளைகிறது. இத்தகைய பேராபத்தினின்றும் இளைஞர்களைப் பாதுகாத்திட வேண்டும். இவற்றை வலியுறுத்தும் வகையில் போதைவஸ்துத் தடுப்புத் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயும் விளக்கக் கட்டுரை.
ஆ) மாணவர்கள் தொலைக்காட்சி பார்ப்பதிலேயே இன்று நேரத்தைச் செலவிடுகின்றனர். வாசிப்புப்பழக்கம் அவர்களிடம் அருகிவருகிறது. வாசிப்பு சிறந்த பொழுதுபோக்கு; அறிவுவிருத்திக்கும் கற்றலுக்கும் உதவுகிறது. நூல்கள் எமது சிறந்த நண்பர்கள். இக்கருத்துக்களை வலியுறுத்தி ''வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகின்றது'' என்ற தலைப்பில் மாணவர் மன்றக் கூட்டத்தில் நீர் நிகழ்த்தும் சொற்பொழிவு.
இ) இன்று உலகம் இணையத்தால் ஒன்றிக்கப்பட்டுவிட்டது என்று கூறக்கூடியளவுக்கு நிலைமை மாறிவிட்டது. இணையத்தினுள்ளும் பல விடயங்கள் உள்வாங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எமக்குத் தேவையான சகல விடயங்களையும் இணையத்தின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறான இணையத்தின் சிறப்பை எடுத்துக்கூறும் விவரணக் கட்டுரை.
ஈ) கண்ணன் வறுமையான குடும்பத்தில் பிறந்தவன். தனது தேவைகளை எளிதில் பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலையில் அவன் இருந்தாலும் நேரத்தைப் பொன்னாக மதித்து கடமைகளைச் சரிவரச் செய்வதில் திருப்தியும் மகிழ்வும் அடைவான். தடங்கல்கள், துன்பங்கள் வரத்தான் செய்யும். அவற்றோடு போராடி உறுதியோடு செயற்பட்டு இன்று அவன் ஒரு வைத்தியக் கலாநிதியாகி விட்டான். இவற்றைச் சித்திரித்துக் காட்டும் வகையில் அமைந்த கற்பனைச் சிறுகதை.

03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40-45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

இன்றைய காலகட்டத்தில் மக்கள் அனைவரும் விரும்புவது இன்பமே. இன்பத்தை அடைவதற்குக் கருவியாய் இருப்பது செல்வம். செல்வமானது கல்விச்செல்வம், பொருட்செல்வம் என

(19 ஆம் பக்கம் பார்க்க)

04

*அன்பு மாணவர்களே. உங்களுக்கு எழும் விளக்கமின்மை, சந்தேகங்களை குறித்த ஆசிரியரின் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகத் தொடர்புகொண்டு இரவு 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையும் தெளிவுபடுத்திக்கொள்ள முடியும். (ஆசிரியர்: கே.கே.மோகன் தொலைபேசி இலக்கம்: 077 9356859)*

# முடிவுக்கு வருமா இராமர் கோயில் விவகாரம்?

அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடத்தை மூன்றாகப் பிரித்து சம்பந்தப்பட்ட மூவருக்கும் ஆளுக்கு ஒரு பங்கு வீதம் பிரித்துக் கொடுக்க வேண்டும் என, அலகாபாத் உயர்நீதிமன்றத்தால் பரபரப்பு தீர்ப்பு வழங்கப்பட்டது. மூன்றில் ஒரு பங்கு இந்துக்களுக்கும், இன்னொரு பங்கு முஸ்லிம்களுக்கும், மூன்றாவது பங்கு நிர்மோகி அகாரா அமைப்புக்கும் வழங்க வேண்டும். நிலம் பகிர்வு செய்யும் பணியை மூன்று மாதங்களில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என அதுவரைக்கும் அமைதி நிலை




தொடரப்பட வேண்டும் எனவும் நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக இழுத்தடித்த அயோத்தி வழக்கின் தீர்ப்பை, நாடே அதிக எதிர்பார்ப்புகளுடனும், பரபரப்புடனும் எதிர்பார்த்துக் காத்திருந்தது. நாட்டின் ஒட்டுமொத்த பார்வையும், லக்னோவை நோக்கியே இருந்தது. நீதிபதிகள் தரம்வீர் சர்மா, சுதிர் அகர்வால் மற்றும் சிப்காட் உல்லா கான் ஆகிய மூன்று நீதிபதிகள் அடங்கிய லக்னோ குழு அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கியது.

இந்த தீர்ப்பில் கூறப்பட்ட முக்கிய விடயமாக: அயோத்தியில் சர்ச்சைக்குரிய 2.7 ஏக்கர் இடத்தை, மூன்று பாகமாக பரித்து,

ஸ்ரீராமர் குழந்தை வடிவில் அமர்ந்த நிலையில் சிலையாக வைத்து வழிபடப்படும் மத்திய பகுதி இந்துக்களுக்கும் சீதா ரஸோய் (சமையல் கூடம்), ராம் சபூத்ரா (யாக வேதிகை), பண்டார் ஆகிய பகுதிகள் நிர்மோஹி அகாடா என்ற வைஸ்ணவ அமைப்பிடமும் எஞ்சிய மூன்றில் ஒரு பகுதி சுனி முஸ்லிம் வக்ஃப் வாரியத்திடமும் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆங்கிலேயர் நாட்டை ஆண்டபோது, அவர்களை அயோத்தி நகரில் இந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்றுபட்டு ஆங்கிலேயனை எதிர்த்தனர். இந்த அயோத்திப் பிரச்சினை இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்குப் பாதகமாக இருப்பதால் இஸ்லாமிய சமுதாய மக்கள் கூடிப் பேசி பிரச்சினைக்குரிய இடத்தில் தொழுகை நடைபெற்றதேயில்லை. இந்துக்கள் அதை ராமஜென்ம பூமியாகக் கருதி வழிபடுகிறார்கள். எனவே, அந்தப் பகுதியின் மீது எங்களுக்கு உரிமை இல்லை என இந்துத் தலைவரிடம் எழுதிக் கொடுத்து சமாதானம் ஆனார்கள். விடயம் அறிந்த ஆங்கிலேய அதிகாரிகள் இந்த ஒற்றுமை தங்களுக்கு ஆபத்து என உணர்ந்து. உடன்படிக்கையை வாங்கி, கிழித்தெறிந்தார்கள். உடன்படிக்கை செய்துகொண்ட இந்துப் பிரதிநிதியையும் முஸ்லிம் பிரதிநிதியையும் பகிரங்கமாக, மக்கள் முன்பு, மரத்தில் தூக்கிலிட்டார்கள்.

அந்த இடம் ராமஜென்ம பூமி. அந்தப் பகுதி காவல் நிலையத்துக்கு பெயர் ஜன்ம ஸ்தான் பொலிஸ் நிலையம். ஜன்ம ஸ்தான் தபால் நிலையம். முஸ்லீம் சமுதாயத்தின் இரு பிரிவுக்கிடையே அந்த மசூதியின் உரிமைமீது வழக்கு வந்தபோது, அங்கிருந்த மசூதிக் கட்டடத்தை அவர்களே ஜன்ம ஸ்தான் மஸ்ஜித் என்றுதான் குறிப்பட்டுள்ளார்கள்.

ஒருநாளும் தொழுகை நடக்காத அந்த இடம் மசூதி அல்ல; மசூதிக்கான கட்டட அமைப்பு இல்லை. எந்த இடத்தில் மசூதி அமையக்கூடாது என அவர்களது நூல்கள் சொல்கின்றனவோ அந்த எல்லா எதிர்மறை அம்சங்களும் இந்த இடத்துக்குப் பொருந்தும்.

சிலர் இது பாபரது கல்லறை எனத் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பாபர் கட்டியதால் பாபர் மசூதி. ஹிந்து ஆலயத்தை இடித்து கட்டியதா அல்லது காலி மனையில் கட்டப்பட்டதா என்பது வழக்கு. 1950- லிருந்து நடைபெறும் வழக்கில் தற்போது இனி எவரும் பாபர் மசூதி கட்ட முடியாது.

பாபர் யார்? அவர் இந்தியரல்ல, அந்நியர். படையெடுத்து ஆக்கிரமிக்க வந்த அந்நியர். இரண்டாவது முறை அவர் தொடுத்த போரில் அவருக்கு வெற்றி கிடைத்தது. அந்த வெற்றியைக் கொண்டாட அவர் அமைத்த வெற்றிச் சின்னம்தான் ராமர் கோயிலை இடித்துக் கட்ட முயற்சித்த மசூதிக் கட்டடம்.

அன்னியனுக்கு வெற்றிச் சின்னம் என்றால் அடிமைப்பட்டவனுக்கு அடிமைச் சின்னம். ஆக்கிரமிப்பு அகன்ற உடனேயே மீண்டும் அடிமைச் சின்னத்தை மாற்றி அமைத்திருக்க வேண்டும்.

பாபர் எங்கள் மதத்தவன், அதனால் அந்தச் சின்னம் அடிமைச் சின்னமானாலும் அது போற்றுதலுக்குரியது எனக் கருதுவது தேசபக்தியின் வெளிப்பாடாக ஆகாது.

ராஜாஜி முதலமைச்சராக இருந்தபோது, மவுண்ட் ரோட்டில் இருந்த சில ஆங்கில மன்னர்களது சிலைகளை இரவோடு இரவாக நீக்கி, அருங்காட்சியகத்தில் வைத்தார் - அவை அடிமைச் சின்னம் என்பதால் அப்போது எந்தக் கிறிஸ்தவரும் எதிர்க்கவில்லை.

சோமநாதபுரம் ஆலயம் கொள்ளையடிக்கப்பட்டது வரலாறு. இடித்து மசூதியாக மாற்றப்பட்டது. நாடு விடுதலை பெற்ற பிறகு சர்தார் வல்லபாய் பிடேல் சபதம் ஏற்று, அந்த மசூதியை அகற்றி, மீண்டும் பிரம்மாண்டமாக சோமநாதபுரம் ஆலயத்தை காந்திஜியின் ஆசியோடு எழுப்பனாரே! அதேபோல தான் 1982இல் தான் விஸ்வ இந்து பரிஷத் அமைப்பு பாபர் மசூதி பிரச்னையைக் கையில் எடுத்தது. ராமர் பிறந்த அயோத்தியில் ஏற்கெனவே இருந்த இந்துக்கோயிலை இடித்துவிட்டு மொகலாய மன்னர் பாபர் மசூதியைக் கட்டினார் என்றும், எனவே பாபர் மசூதியை இடித்துவிட்டு ராமர் பிறந்த அந்த இடத்திலேயே கோயிலைக் கட்டுவோம் என திட்டமிட்டு 1992 ஆம் ஆண்டு ஒரே இரவில் மசூதியை இடித்துவிட்டு இராமர் கோயிலுக்கான தூபிகளை நாட்டுவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மதம் வேறு வேறாக இருக்கலாம்.

## நீதிமன்றத் தீர்வு சமரசத்துக்கு அடித்தளம்

ஆனால், அது எல்லை மீறியதாக இருக்கக்கூடாது. இந்தியன் என்கிற அடிப்படையில் அணுகுவதுதான் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இந் நிலத்தைப் பிரித்து மூவரிடம் வழங்கும் வரை இப்போது இருக்கும் நிலையே, அதாவது, மத்திய அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தனர்.

நீதிபதிகளின் தீர்ப்பை பல்வேறு தரப்பனரும் வரவேற்றுள்ளனர். அதே சமயம் நாடு முழுவதும் அமைதி காக்க வேண்டும் என பிரதமர் மன்மோகன் சிங் அழைப்பு விடுத்திருந்தார். எல்லா அரசியல் கட்சிகளும் மக்கள் அமைதி வாழ்க்கைக்கு உதவ ஒத்துழைப்பு வழங்குவதே இன ஒற்றுமைக்கான வழியாகும்.

- சிவானி -

---

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருவகைப்படும். பொன், மணி முதலிய பொருட்செல்வத்திலும் கல்விச்செல்வம் சிறந்தது. ஏனெனில், பொருள் பங்காளிகளால் பகுத்துக்கொள்ளப்படும். கோபங்கொண்ட கொடுங்கோல் மன்னரால் எடுத்துக்கொள்ளப்படும். வெள்ளத்தால் அடித்துக்கொண்டு போகப்படும். வெந்தழலால் வெந்து சாம்பலாய்விடும். தம்மை அண்டியோர்க்கு அளித்தாற்குறையும். இவற்றால் பொருள் அழியும் தன்மையுடையது என்பதனை அறியலாம். அன்றியும் அது பெரும்பாலும் தக்காரிடத்து உண்டாகி நிலைபெறாது உடலோடு அழிவுறும். மேலும் அதனை ஈட்டல், காத்தல், இழத்தல் என்பவற்றால் மக்கள் துன்புறுவர். அது பலரையும் பகையாக்கும். கல்வியோ எவராலும் கவரப்படமாட்டாது. தீ, வெள்ளம் முதலியவற்றால் நாசமுறாது. பிறருக்குக் கொடுக்கக் கொடுக்க வருமேயன்றிக் குறைபடாது. ஆதலில் இது அழியும் தன்மையுடையதன்று. மேலும் பெரும்பாலும் தக்காரிடத்தே உண்டாகி நிலைபெறும் ஒருவனது உடல் அழியினும் அவன் கற்ற கல்வி அழியாமல் அவனுயிரோடு கடந்து அவ்வுயிர் சென்றவிடத்துச் சென்று உதவும். இதனை ஈட்டலும் காத்தலும் எளிது.

04. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்குப் பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.

இதற்கேன் இவ்வளவு ஆரவாரம் என்று சிலர் கேட்கிறார்கள். எவரெஸ்ட் சிகரத்தை அடைய வேண்டுமானால் விமானமொன்றிலே ஏறி அங்கே போய் இறங்கலாமே. படகுப் பந்தயம் நடத்துகிறார்கள். ஏனிந்த அலைச்சல், படகில் ஏறித் தண்டு வலித்து போட்டி நடத்த வேண்டுமா? மோட்டார் வள்ளத்தில் ஏறிச் சேரவேண்டிய இடத்திற் சேர்ந்து விடலாமே. மனிதன் எவரெஸ்ட் சிகரத்தைத் தானாகவே ஏறி அடைய விரும்புகிறான். இதுதான் இதிலே உள்ள முக்கிய கருத்து. அதனாற்தான் அவன் தன்னைப் பற்றிச் சுயமதிப்புப் பெற்று ஆன்ம திருப்தியடைகிறான். எல்லா விடயங்களுக்கும் எந்திரத்திலே தங்கியிருப்பதனால் அவனுடைய வாழ்வு சப்பென்றிருக்கும். எந்திரங்களிலேயும், விஞ்ஞானக்கண்டு பிடிப்புக்களிலேயும் நாங்கள் பெரிதும் தங்கியிருக்கிறோம். அதனால் எமது உடலையோ ஆன்மாவையோ நாம் தேவையான அளவுக்குப் பயன்படுத்துவது இல்லை. எமது தனித்திறமைகளைப் பயன்படுத்துவதனால் உண்டாகக்கூடிய பல சுகங்களை நாம் இழக்க வேண்டி இருக்கிறது.

1) இப்பந்தியில் கூறப்பட்டிருக்கும் பிரதான கருத்து யாது?
2) இவ்வுரைப்பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆரவாரத்திற்கான காரணம் என்ன?
3) எல்லா விடயங்களுக்கும் எந்திரத்திலே தங்கியிருப்பதனால் அவனுடைய வாழ்வு சப்பென்றிருக்கும். இங்கே ''சப்பென்றிருக்கும்'' என்ற தொடரின் கருத்தினைக் கூறுக.
4) ''எவரெஸ்ட் சிகரம்'' என்பது எவ்வகைப் பண்புத்தொகையாகும்?
5) நாம் எதனை இழக்கவேண்டி இருக்கிறது எனப் பந்தியில் குறிப்பிடப்படுகின்றது.

05. எமது நாட்டில் இன்று ''பொலித்தீன்'' பாவனை அதிகரித்து வருவதால் பல தீங்குகள் ஏற்படுகின்றன எனப் பல சமூக நிறுவனங்கள் எச்சரித்துள்ளன. இவ் எச்சரிக்கையைச் சுட்டிக்காட்டியும் ''பொலித்தீன்'' அதிகளவில் பயன்படுத்துவதனால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள், அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் என்பவற்றை எடுத்துக்காட்டியும் செய்தித்தாள் ஆசிரியருக்கு 100 சொற்கள் அளவில் ஒரு கடிதம் எழுதுக.

01. சுருக்கமான விடை எழுதுக.
   1) ''கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
   மாடல்ல மற்றும் பிற''
   அ. மேற்படி கருத்தை அருளிச்செய்தவர் யார்?
   ஆ. இவ் அடிகளின் கருத்தை எழுதுக.
   2) ''மஞ்சுமஞ் சுங்கை.....'' என்ற பாடலைப் பாடிய புலவர் யார்? மஞ்சும் அஞ்சும் கைகளை உடையவன் என்று போற்றப்படும் மன்னன் யார்?
   3) ''கம்பனின் போலிப்புலமையை அம்பலப்படுத்தி அவனை அரசவையை விட்டு வெளியேற்றவே வந்தேன்'' இக் கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
   4) ''தோடார் கமலப் பள்ளி'' என்ற வரியில் குறிப்பிடப்படும் பள்ளி என்பதன் கருத்து யாது?
   5) ''முன்நோக்கு'' கவிதையில் கவிஞர் முருகையன் கூறமுற்படும் விடயம் யாது?
   6) மருப்பூசியாக மறங்கனல்வேல் மன்னர் உருத்தகுமார் போலையாகத்'' என்ற பாடலில் கையாளப்பட்டுள்ள அணி யாது? அதனை விளக்குக.
   7) நந்திவர்மனின் சிறப்புக்களைக் குறிப்பிடுக.
   8) ''இரு சும்மா போகலாம். மானத்தைப் பாரு எவ்வளவு அழகாயிருக்கு!'' இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது? மானத்தை என்பதன் திருந்திய வடிவம் யாது?
   9) ''பார்வைகள்'' என்ற சிறுகதையில் இடம்பெறும் கார்டன் லேபரர், கிளார்க், டொக்டர், சைக்கிள் ஆகிய சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.
   10) ''கவிச்சக்கரவர்த்தி'' எனும் நாடகத்தை எழுதியவர் யார்?

05

02. பின்வரும் செய்யுட் பகுதிகள், உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழி நடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.

   1) **மண்ணெலாம் உய்ய மழைபோல் வழங்குகரத்**
   தண்ணுலா மாலைத் தழிழ்நந்தி நல்நாட்டில்
   பெண்ணிலா ஊரில் பிறந்தாரைப் போலவரும்
   வெண்ணிலாவேயிந்த வேகமுனக் காகாதே.

   2) மடல் பெரிது தாழை மகிழினிது கந்தம்
   உடல் சிறியார் என்றிருக்க வேண்டா - கடல்பெரிது
   மண்ணீரு மாகா ததனருகே **சிற்றூறல்**
   **உண்ணீரும் ஆகிவிடும்.**

   3) 'செய்வன திருந்தச்செய்' என்பதுபோல, நாம் மேன்மை பெறுவதற்கு ஒரே வழியுண்டு. அவ்வழியாவது, நம்முடைய வேலையை நாம் லோபம் இன்றித் திருந்தச் செய்வதாம். ஒரு வேலையினுடைய தாழ்மையை எண்ணி, அவ் வேலை செய்பவரை நாம் ஒரு **போதும் தாழ்வாகக் கொள்ளலாகாது.** தாழ்ந்த வேலை செய்பவரை விட உயர்ந்த வேலை செய்பவர் சிறந்தவர் என மதிப்பதும் தவறு.

   4) பாரதியார் சிறுகுழந்தைகள் முதற் பெரிய பண்டிதர்களீறாக அனைவரும் படித்து இன்புறு தற்குரிய **அழகிய தமிழ்ப் பாடல்களைத்** தந்தமையாற் கல்வியில்லாதோரும் தாய் மொழிப்பாடல்களைப் படித்தின்புறுஞ் சுதந்திரத்தை அவர்களுக்குக் கொடுத்துள்ளார்.

03. நீங்கள் கற்றுக்கொண்ட நாட்டார் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு நாட்டார் பாடல்களில் காணப்படும் சிறப்பியல்புகளை ஆதாரங்கள் ஊடாக விளக்குக. அல்லது ''மங்கையர்க்கரசியின் காதல்'' என்ற சிறுகதையில் உண்மைக்காதல் எவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளது என்பதை விளக்குக.

04. பார்வைகள் என்ற சிறுகதையை ஆதாரமாகக் கொண்டு சிறுகதைக்குரிய சிறப்பியல்புகளைப் பற்றி விளக்குக. அல்லது
பாரதியார் கவிநயம் என்ற கட்டுரையில் பாரதியாரின் இயற்கை இரசனை பற்றிக் குறிப்பிடுக.

* 5ஆம், 6ஆம், 7ஆம் வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவுசெய்து எழுதுக.

05. அ. பாலோடளாய நீர் ...... (நாலடியார்)
   ஆ. மானங்குலங் கல்வி ..... (நல்வழி)
   இ. செறியுமரண்மிகு படைகளுடைய .......... (பழமொழிப் போதனை)
   எனத் தொடங்கும்.
   1) நீதிப்பாடல்கள் உணர்த்தும் நீதிக்கருத்துக்களைத் தொகுத்துத் தருக.
   2) அந்த நீதிக்கருத்துக்கள் எடுத்துக்கூறப்படுமாற்றில் உள்ள சிறப்புக்களை ஆராய்க.

06. ''விடியுமா?'' என்ற சிறுகதையில் இடம்பெறும் கிராமியப் பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் குறித்துத் தெளிவுபடுத்துக.

07. ''கவிச்சக்கரவர்த்தி'' என்ற நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் பாத்திரங்களின் குணவியல்புகள் குறித்துக் கருத்துரை வழங்குக.
   அ. கம்பர்.
   ஆ. ஒட்டக்கூத்தர்.

06

### வரலாறு பகுதி I இற்கான விடைகள்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01-2 | 02-1 | 03-2 | 04-2 | 05-1 | 06-2 | 07-2 | 08-3 | 09-2 | 10-3 |
| 11-1 | 12-3 | 13-3 | 14-4 | 15-3 | 16-2 | 17-4 | 18-3 | 19-4 | 20-4 |
| 21-3 | 22-3 | 23-1 | 24-3 | 25-2 | 26-4 | 27-3 | 28-1 | 29-3 | 30-2 |
| 31-1 | 32-1 | 33-3 | 34-1 | 35-4 | 36-1 | 37-1 | 38-1 | 39-4 | 40-2 |

குறிப்பு:

01. இவ்வினாத்தாள்களுக்கான பகுதி I விடைகள் செவ்வாய்க்கிழமை, கணித வினாத்தாளுடன் வெளிவரும்.

02. எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை அம்பாறை மாவட்ட பிரபல ஆசிரியர்களின் வினாத்தாள்கள் வெளிவரும்.

03. சகல வினாத்தாளுக்குமான பகுதி II, பகுதி III இற்கான விடைகள் சனிக்கிழமையில் வெளிவரும்.

# தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றும் வீரர்களுக்கு யாழ்ப்பாணத்தில் பயிற்சி

## துரையப்பா விளையாட்டரங்கில் மூன்று தினங்கள்

வலி.வடக்கு,ஒக்.4

தேசிய மட்டத்தில் கழக வீரர்களுக்கு இடையே நடைபெறவுள்ள விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள வீர, வீராங்கனைகளுக்கான பயிற்சி முகாம் எதிர்வரும் 15,16,17 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது..

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் வடமாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக இப்பயிற்சி முகாமை யாழ்ப்பாணத்தில் நடத்துகிறது.

தேசிய மட்டப் பயிற்றுநர்களைக் கொண்டு பயிற்சிகள் நடை பெறவுள்ளன.

இப்பயிற்சி முகாமில் மெய்வன்மை, கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கராட்டி, கூடைப்பந்தாட்டம் மல்யுத்தம் ஆகிய வற்றுக்கான பயிற்சிகள் இடம் பெறவுள்ளன.

இப்பயிற்சி முகாம் நீண்ட காலத்தின் பின்னர் நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (ஐ-86)

### பருத்தித்துறை வி.க. உதைபந்தாட்டம்

## யங்லயன்ஸ், வதிரி டயமன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக்.4

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டப் போட்டியில் யங்லயன்ஸ் விளையாட்டுக்கழக அணி, வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி ஆகியவை வெற்றி பெற்றன.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான 7 பேர் கொண்ட, விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தி வருகிறது. கடந்த வெள்ளிக்கிழமை திக்கம் முனை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இரு ஆட்டங்களில் முதல் இடம்பெற்ற ஆட்டத்தில் யங்லயன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக அணி மோதியது.

யங்லயன்ஸ் விளையாட்டுக் கழக அணி 4 கோல்களைப் போட்டது. எதிர்த்து விளையாடிய கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக அணியால் 2 கோல்கள் மட்டுமே போட முடிந்தது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் டயமன்ஸ் 'பி' விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொலிங்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

வதிரி டயமன்ஸ் 'பி' அணி இரண்டு கோல்களைப் போட்டு வெற்றி பெற்றது. கொலிங்ஸ் விளையாட்டுக்கழக அணியால் கோல் எதனையும் அடிக்க முடியவில்லை. (உ-23)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,ஒக்.4

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி நூற்றாண்டு விழாவையொட்டி யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்திவரும் 06 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான துடுப்பாட்டப் போட்டியில் இன்று திங்கட் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள குழு 'ஏ' பிரிவு போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி எதிர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.
* மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.
* சாவகச்சேரி இந்துக் கல்லூரி எதிர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.
* இரண்டாம் சுற்றில் இருந்து யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மோதவுள்ளது. காலிறுதி மற்றும் அரையிறுதி ஆட்டங்களும் இன்று நடைபெறவுள்ளன. (ஐ-86)

* * *

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஆட்டங்கள் இன்று காலை 8.30 மணிக்கு ஏழாலை மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன. (ஐ-86)

## கரப்பந்தாட்டத்தில் கிண்ணம் பாரதி வி.க. வென்றது

யாழ்ப்பாணம்,ஒக்.4

கிறின்பீல்ட் சனசமூக நிலையத்தின் 52 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மின் ஒளியில் இடம்பெற்றது.

பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஈச்சமோட்டை விளையாட்டுக்கழக அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் 2:1 என்ற செற்கணக்கில் பாரதி அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

இவ் ஆட்டத்தில் எஸ்.மொறிஸ் மத்தியஸ்தராக கடமையற்றினார். (உ-23)

## மரதன் ஓட்டப் போட்டியில் கெக்கிராவ மாணவன் முதலிடம்

வலி.வடக்கு,ஒக்.4

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி ஜனாதிபதி செயலகத்தின் வடக்கின் வசந்தம் செயல் திட்டத்தின் கீழ் வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஆதரவுடன் கிளிநொச்சி கல்வி வலயம் வடமாகாண மாவட்ட பாடசாலை அணிகள் மற்றும் அனுராதபுரம் மாவட்ட அணிகளுக்கு இடையே ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியை நடத்தியது இந்தப் போட்டியில் முதல் பத்து இடங்களைப் பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

கே.எம்.வசந்த (அனுராதபுரம் கெக்கிராவை கல்வி வலயம்), பி.தரோஜன் (யாழ்ப்பாணம் கல்வி வலயம்), பி.சிவகுமார் (வவுனியா தெற்கு கல்வி வயலம்), மதுசங்கர் (அனுராதபுரம் கல்வி வலயம்), பிரசாந்தன் (கிளிநொச்சி கல்வி வலயம்), ஜெயபால் (வவுனியா தெற்கு கல்வி வலயம்), விஜனன் (வடமராட்சி கல்வி வலயம்), பிரமிலன் (முல்லைத்தீவு கல்வி வலயம்), எஸ்.பிரசாந் (வடமராட்சி கல்வி வலயம்), ஒக்ஸ்பேட் (வலிகாமம் கல்வி வலயம்) (ஐ-86)

### மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலர் பரீட்சையில் 6 பேர் சித்தி

வலி.வடக்கு,ஒக்.4

இலங்கை மெய்வன்மைச் சங்கத்தினால் நடத்தப்பட்ட மெய்வன்மை தொழில் நுட்ப அலுவலர் தரம் II க்கான பரீட்சையில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு பேர் பரீட்சையில் சித்தி அடைந்துள்ளார்கள்.

50 க்கும் மேற்பட்டவர்கள் இப்பரீட்சைக்கு தோற்றினர்.

சித்தி அடைந்தவர்களின் விவரம் வருமாறு:-

டானியல் மதியழகன், எஸ்.சிவகௌரி, ஆர்.ஸ்ரீரமணன், எஸ்.சிவச்செல்வன், எஸ்.பவானந்தன், எம்.சசிக்குமார். (ஐ-86)

## எல்லே அணி இன்று புறப்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்-04

இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான 10ஆவது விளையாட்டுவிழாவை முன்னிட்டு 6 ஆம்,7ஆம் திகதிகளில் சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள எல்லே போட்டிகளில் பங்கு கொள்வதற்காக யாழ். பல்கலைக்கழக ஆண்,பெண் அணியினர் இன்று கொழும்பு புறப்படுகின்றனர்.

அதேவேளை ,5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில் சென்.தோமஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ள பூப்பந்தாட்டப்போட்டியில் பங்கு கொள்வதற்காக யாழ். பல்கலைக்கழக பூப்பந்தாட்ட அணியினர் கடந்த சனிக்கிழமை கொழும்பு சென்றுள்ளனர். (உ-23)

## மகாஜன நூற்றாண்டு விழாவை ஒட்டி பாடசாலைகளுக்கிடையில் கரபந்தாட்டம்

வலி.வடக்கு,ஒக்.4

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு பெண்கள் அணிகளுக்கு இடையே எதிர்வரும் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நடத்தப்படவுள்ளது.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம், பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி-

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி என்பன இச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளன.

(ஐ-86-23)


### பல்கலைகள் இடையிலான உதைபந்தாட்டம்

## 4கோல்கள் அடித்து அசத்திய யாழ். அணி அரை இறுதியில்

யாழ்ப்பாணம்,ஒக்.4

றுகுண பல்கலைக்கழகத்துடனான உதைபந்தாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணி வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறி யுள்ளது.

இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான 10ஆவது விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக கொழும்பு விளையாட்டு மைதானத்தில் உதைபந்தாட்ட போட்டி ஒன்றை நடத்துகிறது.




இந்த தொடரில் நேற்றுக் காலை இடம்பெற்ற கால்இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து றுகுண பல்கலைக்கழக அணி மோதியது.

அபாரமாக ஆடிய யாழ். அணி 4 கோல்களைப் போட்டது. பதிலுக்கு றுகுண அணியால் கோல் எதுவும் போட முடியவில்லை. இறுதியில் 4:0 என்ற கணக்கில் யாழ். அணி வெற்றி பெற்றது. (உ-23)

## தடகளப் போட்டியில் இறுதிநாளில் யாழ்ப்பாணத்துக்கு மேலும் 2 தங்கம்

யாழ்ப்பாணம்,ஒக்.4

கொழும்பு சுகததாஸ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவரும் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையேயான 2010 ஆம் ஆண்டுக்கான தேசிய தடகளப் போட்டியில் நேற்று இடம்பெற்ற இறுதி நாள் போட்டிகளில்யாழ்.மாவட்டத்திற்கு இரண்டு தங்கப்பதக்கங்களும் ஒரு வர்ண விருதும் கிடைத்துள்ளன.

19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தல் பிரிவு நிகழ்வில் ஹாட்லிக்கல்லூரியைச் சேர்ந்த பாலகுமார் 3.60 மீற்றர் உயரத்தினைப் பாய்ந்து தங்கப்பதக்கத்தினையும்

யாழ்.இந்துக்கல்லூரி வீரன் ஜஸ்மில் 17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான உயரம்பாய்தல் நிகழ்வில் 6.60 மீற்றர் தூரத்தினைப் பாய்ந்து முதலாவது இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தினையும் வென்றுள்ளனர்.

யாழ்.மத்திய கல்லூரி வீரன் எஸ். எடின் 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்ட நிகழ்வில் பங்கு கொண்டு 11.44 செக்கனில் ஓடி முடித்தமைக்காக வர்ண விருது வழங்கப்பட்டுள்ளது. (ஐ-23)

### தேசிய மட்ட தடகளப் போட்டியில்

## அடுத்தடுத்து தங்கப் பதக்கங்கள் வடமாகாணப் பாடசாலைகள் அபாரம்

யாழ்ப்பாணம்,ஒக்.4

பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்றுவரும் தேசியமட்ட தடகளப் போட்டியில் யாழ்ப்பாணத்துக்கு மேலும் இரு பதக்கங்கள் நேற்று முன்தினம் கிடைத்தன.

கொழும்பு சுகததாஸ விளை யாட்டு மைதானத்தில் கடந்த புதன் கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வரும் இப்போட்டிகளில் நேற்று 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோல் ஊன்றிப்பாய்தல் போட்டி நடைபெற்றது. இதில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவன் பி.கொலிங் றொசண் 3.35 மீற்றர் உயரத்தைப்பாய்ந்து முதலாவது இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைத் தட் டிச் சென்றார். இவருக்கு வர்ண விருது வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் 21 வயதுப் பிரிவு ஆண்கள் பிரிவினருக்கான உயரம் பாய்தல் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி மாணவன் எஸ்.பாலசங்கர் 1.92 மீற்றர் உயரத்தைப்பாய்ந்து இரண்டாம் இடத்தைப்பெற்று வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார்.

இப்பெறுபேறுகளின் பிரகாரம் வடமாகாண பாடசாலைகள் நேற்று வரை 6 தங்கம், இரு வெள்ளி, ஒருவெண்கலம் ஆகியவற்றுடன் மூன்று வர்ண விருதுகளையும் பெற்று பெருமை சேர்த்துள்ளன. (ஒ-16-23)



இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இறுதியாட்டம் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இதில் யாழ். மத்திய கல்லூரி அணி நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய அணி ஆகியன மோதிக் கொண்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.



## ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட்:
# சதத்தைத் தவறவிட்டார் சச்சின்; இந்திய அணி 405 ஓட்டங்கள்!

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில், நேற்றைய ஆட்ட நேர முடிவின் போது இந்திய அணி, சகல விக்கெட்டுகளையும் இழந்து 405 ஓட்டங் களைச் சேர்த்தது. இந்தியா - ஆஸ்திரேலிய அணிகள் மோதும் 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி இந்தியாவின் மொஹாலியில் நடைபெற்றுவருகிறது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி, தனது முதல் இன்னிங்ஸிற்காக சகல விக்கெட்டுகளையும் இழந்து 428 ஓட்டங்களைச் சேர்த்தது. பின்னர், தனது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி, நேற்றுமுன்தினம் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது, 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 110 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

மீண்டும் நேற்றுத் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த இந்திய அணி, டிராவிட் (77), சச்சின் (98), ரெய்னா (86) ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டம் மூலம் வலுவான இலக்கை எட்டியது. சதமடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட சச்சின் டெண்டுல்கர், 2 ஓட்டங்களைப் பெறவேண்டியிருந்த நேரத்தில் ஆட்டமிழந்து சென்றார். இது ரசிகர்களுக்குப் பெரும் ஏமாற்றமாக அமைந்தது. இறுதியில் இந்திய அணி நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது சகல விக்கெட்டுகளையும் இழந்து 405 ஓட்டங்களைப் பெற்றது.

ஆஸ்திரேலிய அணி சார்பாக பந்துவீச்சில், ஜோன்சன் 5 விக்கெட்டுகளையும், போலிஞ்சர், கௌரிச் ஆகியோர் 2 தலா விக்கெட்டுகளையும், நோர்த் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

நேற்றைய கள நிலவரப்படி இந்திய அணி, ஆஸ்திரேலியாவை விட 23 ஓட்டங்களால் பின்னிலை வகிக்கிறது.

# நான் ஒன்றும் கடவுள் இல்லையே!
## மனிதர்கள் தவறு செய்வது வழமையே என்கிறார் வேயன் ரூனி




"மனிதர்கள் தவறு செய்வது இயற்கை தான். நான் ஒன்றும் கடவுள் அல்லன்."

- இவ்வாறு வேயன் ரூனி கூறியுள்ளார்.

இங்கிலாந்து மற்றும் மான்செஸ்டர் யுனைடெட் உதைபந்தாட்ட அணிகளின் முன்கள வீரரான வேயன் ரூனி, சமீபத்தில் விலைமாது ஒருவருடன் உறவு (செக்ஸ்) வைத்துக்கொண்டார் எனப் புகார் எழுந்தது.

இதனால் எழுந்த மனக்குழப்பம், ரூனியை ஆடுகளத்திலும் தடுமாற வைத்தது. மேலும் காயம் காரணமாக நேற்றுமுன்தினம் நடந்த 'இங்கிலீஸ் பிரீமியர் லீக்' போட்டியில் சுந்தர்லேண்ட் அணிக்கு எதிரான ஆட்டத்தின்போது மைதானத்திற்கு வெளியே ஆசனத்தில் இருத்தி வைக்கப்பட்டார்.

ஆனால், அவர் வெளியே இருத்தி வைக்கப்பட்டமைக்கு காயம் மட்டும் காரணம் அல்ல. அவரது ஆட்டத் திறனின்மையும், விலை மாதருடன் அவருக்கு இருந்த தொடர்புமே காரணம் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் இதுகுறித்து ஊடகவியலாளர்களிடம் பேசிய ரூனி, "நானும் மனிதன்தான். தவறு செய்வது மனித இயல்பு. நான் ஒன்றும் கடவுள் அல்லன்." - என்று தெரிவித்துள்ளார். எதிர்வரும் 12ஆம் திகதி ஐரோப்பியக் கிண்ண உதைபந்தாட்டத் தொடருக்கான தகுதிச் சுற்று ஆட்டத்தில், இங்கிலாந்து மாண்டிகுரோவ் அணியுடன் மோதவுள்ளது. இந்தப் போட்டியில் ரூனி களம் இறங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சம்பியன் பட்டம் வென்றார் கரோலின் வொஸ்னியாக்கி!

டோக்கியோ, ஒக். 04

பான் பசுபிக் ஓப்பின் டென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவில், டென்மார்க் வீராங்கனையான கரோலின் வொஸ்னியாக்கி சம்பியன் பட்டம் வென்றார்.



ஜப்பான் தலைநகரான டோக்கியோவில், பெண்களுக்கான டபிள்யூ.டி.ஏ. பான் பசுபிக் ஓப்பின் டென்னிஸ் தொடர் நடந்தது.

இதன் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில், டென்மார்க்கின் கரோலின் வொஸ்னியாக்கி - ரஷ்யாவின் எலினா டெமென்டிவா ஆகியோர் மோதினர்.

மிகவும் விறுவிறுப்பாக நடந்த இந்த போட்டியின் முதல் செற்றை, டெமென்டிவா 6-1 என்ற கணக்கில் கைப்பற்றினார்.

பின்னர் எழுச்சி கண்ட வொஸ்னியாக்கி, 2 ஆவது செற்றை 6-2 என்ற கணக்கில் தன்வசப்படுத்தி பதிலடி கொடுத்தார்.

பின்னர், வெற்றியாளரை நிர்ணயிக்கும் 3ஆவது செற்றில் அபார ஆட்டத்தைத் தொடர்ந்த வோஸ்னியாக்கி, 6-3 என்ற கணக்கில் இறுதிச் சுற்றைக் கைப்பற்றினார்.

இறுதியில் வோஸ்னியாக்கி 1- 6, 6-2, 6-3 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று, சம்பியன் பட்டம் வென்றார். இது இந்த ஆண்டு இவர் பெறும் 5ஆவது சம்பியன் பட்டம் ஆகும்.

இந்நிலையில், இவர், தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தைப் பிடிப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தற்போது தரவரிசையில் 2ஆவது இடத்தில் இருக்கும் வோஸ்னியாக்கி (6,810 புள்ளிகள்), முதலிடத்தில் உள்ள அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸை (6,995 புள்ளிகள்) விட, 185 புள்ளிகளே குறைவாக உள்ளார்.

இவர், பீஜிங்கில் நடைபெற்றுவரும் சீன ஓப்பின் டென்னிஸ் தொடரின் காலிறுதிக்கு முன்னேறும் பட்சத்தில், முதலிடத்தைப் பிடிக்க வாய்ப்பு உள்ளது.

# தென்னாபிரிக்கத் தொடரில் பங்கேற்பேன் - சொய்ப் மாலிக்

"தென்னாபிரிக்காவுக்கு எதிராக நடைபெறவுள்ள கிரிக்கெட் தொடரில் பங்கேற்பேன் என்ற நம்பிக்கை எனக்கு நிறையவே உள்ளது." - இவ்வாறு பாகிஸ்தான் வீரரான சொய்ப் மாலிக் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில், பாகிஸ்தான் - தென்னாபிரிக்க அணிகள் பங்கேற்கும் கிரிக்கெட் தொடர் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

இதில், 2 'இருபது-20' போட்டிகள், 5 ஒரு நாள் போட்டிகள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதற்கான பாகிஸ்தான் அணி விரைவில் அறிவிக்கப்படவுள்ளது. இதில் சமீபத்தில் இங்கிலாந்தில் நடந்த டெஸ்ட் தொடரின்போது, சூதாட்டப் புகாரில் சிக்கிய சல்மான் பட், முகமது ஆஸிப் மற்றும் முகமது ஆமீர் ஆகியோருக்கு இடம் கிடைப்பது கேள்விக் குறியாகவுள்ளது.

இதனால் இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒரு நாள் தொடரிலிருந்து நீக்கப்பட்டிருந்த சொய்ப் மாலிக் இடம்பிடிக்க வாய்ப்பு உள்ளது.

இதுகுறித்துக் கருத்துக் கூறும்போதே சொய்ப் மாலிக் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

டெஸ்ட் போட்டியில் விளையாடுவதற்கான திறமை தற்போது என்னிடம் குறைவாகவுள்ளது. இதை என்னால் உணரமுடிகிறது. இதனால் உள்ளூர் போட்டி களில் பங்கேற்று, இழந்த எனது ஆட்டத்திறனை மீட்கத் திட்டமிட்டுள்ளேன். எனவே, உள்ளூர் போட்டிகளில் எனது திறமையை வெளிப்படுத்தி, அணித் தேர்வாளர்களைத் திருப்திப்படுத்துவேன். இதன்மூலம் தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள கிரிக்கெட் தொடரில் நிச்சயம் பங்கேற்பேன் என நம்புகிறேன்.


திருமணத்தால் எனது ஆட்டத்திறனில் எவ்விதப் பாதிப்பும் ஏற்படவில்லை. நான் கிரிக்கெட்டில் சாதிப்பதற்கு சானியா எனக்கு ஊக்கமளித்து வருகிறார். பாகிஸ்தானில், வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புக்காக நிதி திரட்ட, துபாயில் நடக்கும் கண்காட்சி டென்னிஸ் போட்டியில் பங்கேற்க சானியா தயாராகவுள்ளார்.

கடந்த இரண்டு சம்பியன்ஸ் லீக் தொடர்களில், பாகிஸ்தான் உள்ளூர் சம்பியன் அணிகள் பங்கேற்க முடியாமல்போனமை வருத்தமளிக்கிறது. சர்வதேச அளவில், உள்ளூர் சம்பியன் அணிகள் பங்கேற்பதால், இத்தொடர் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

எனவே, அடுத்து வரும் சம்பியன்ஸ் லீக் தொடரில் பாகிஸ்தான் சார்பாக அணிகள் பங்கேற்கும் என எதிர்பார்க்கிறேன் - என்றார்.

# அடுத்த ஆண்டுடன் ரொனால்டோ ஓய்வு!

'கொரிந்தியன்ஸ்' அணி வீரரான பிரேஸிலின் ரொனால்டோ, அடுத்த ஆண்டு உதைபந்தாட்டத்திலிருந்து முற்றிலும் ஓய்வு பெறவுள்ளார்.



பிரேஸில் அணியின் முன்னாள் நட்சத்திர வீரரான ரொனால்டோ, தற்போது கொரிந்தியன்ஸ் அணிக்காக விளையாடிவருகிறார். உலகக் கிண்ணப் போட்டியில் அதிகபட்சமாக இவர் அடித்த 15 கோல் கள் என்ற சாதனையை இன்னமும் எவரும் முறியடிக்கவில்லை. தற்போது 34 வயது நிரம்பிய ரொனால்டோ, அடுத்த வருடம் (2011) டிசம்பர் மாதத்துடன் உதைபந்தாட்டத்திலிருந்து முற்றிலும் ஓய்வு பெறவுள்ளார்.

இது குறித்து அவர் கூறியவை வருமாறு:-

காயம் காரணமாக என்னால் சிறப்பாக ஆட முடியவில்லை. இன்னமும் ஓர் ஆண்டு விளையாடுவதற்கு எனது உடல் நிலை ஒத்துழைக்குமா என்று தெரியவில்லை. ஆனால் கொரிந்தியன்ஸ் அணியின் ரசிகர்கள் நான் தொடர்ந்து விளையாடுவதை விரும்புகிறார்கள். - என்றார். இதற்கு முன் பார்சிலோனா, இன்டர்மிலான், ஏ.சி.மிலான், ரியல்மாட்ரிட் போன்ற உலகின் முன்னணி உதைபந்தாட்ட அணிகளுக்காக விளையாடியுள்ள ரொனால்டோ, மொத்தமாக 300 கோல் களை அடித்துள்ளார்.

# மேஸிக்கு விருது 'தங்கக் காலணி'

பார்சிலோனா, ஒக். 04

ஐரோப்பிய உள்ளூர் உதைபந்தாட்டத் தொடரில் அதிக கோல்களை அடித்த பார்சிலோனா அணியின் லியோனல் மேஸிக்கு, 'தங்கக் காலணி' (கோல்டன் பூட்) விருது வழங்கப்பட்டது.

ஐரோப்பாவின், உள்ளூர் உதைபந்தாட்ட தொடர்களில் ஒன்றான, 'லா லிகா ஸ்பானிஷ் லீக்' உதைபந்தாட்டத் தொடர் அண்மையில் நடந்தது.

இத்தொடரில் பார்சிலோனா அணி சம்பியன் பட்டத்தை வென்றது. இதற்கு அந்த அணியின் ஆர்ஜென்ரீன வீரரான லியோனல் மேஸியின் அபார ஆட்டம் முக்கிய காரணம்.

இவர் இத்தொடரில் 34 கோல்களை அடித்து, அதிக கோல்கள் அடித்த வீரர்கள் வரிசையில் முதலிடம் பிடித்தார்.

இதனால் இவருக்கு 'தங்கக் காலணி' விருது வழங்கப்பட்டது. இதன்மூலம் இவ்விருது பெறும் 2ஆவது பார்சிலோனா அணி வீரர் என்ற பெருமையையும் பெற்றார்.

முன்னதாக 1996-97இல் நடந்த தொடரில், மொத்தம் 34 கோல்களை அடித்த பார்சிலோனா அணியின் பிரேஸில் வீரரான ரொனால்டோ, இச்சாதனையைப் படைத்திருந்தார்.



இதுதவிர, 'தங்கக் காலணி', 'தங்கப் பந்து' மற்றும் உலகின் சிறந்த வீரர் விருது என மூன்று முக்கிய விருதுகளை வென்ற 4ஆவது வீரர் என்ற பெருமையையும் மேஸி பெற்றார்.

முன்னதாக மார்கோ வோன் பாஸ்டன், ரொனால்டோ, கிறிஸ்டியானோ ரொனால்டோ உள்ளிட்டோர் இம்மூன்று விருதுகளைப் பெற்றிருந்தனர்.

# நடால் வெளியேற்றம்!

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் டென்னிஸ் போட்டியின் ஒற்றையர் அரையிறுதி ஆட்டத்தில் ஸ்பெயின் வீரரான ரபேல் நடால் அதிர்ச்சித் தோல்வியடைந்து தொடரை விட்டு வெளியேறினார்.



நேற்றுமுன்தினம் நடந்த அரையிறுதி யாட்டத்தில், சக நாட்டு வீரரான குய்லெர்மோ கார்சியா 2-6, 7-6, 6-3 என்ற செற் கணக்கில் நடாலை வீழ்த்தி இறுதிச் சுற்றுக்கு முன்னேறி னார்.

தரவரிசையில் 53ஆவது இடத்தில் இருக்கும் குய்லெர்மோ, இந்த ஆண்டில் முதன் முறையாக இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மற்றொரு அரையிறுதியாட்டத்தில் பின்லாந்து வீரரான ஜார்க்கோ நிமினென் 6-3, 6-2 என்ற நேர் செற் கணக்கில் ஜேர்மன் வீரர் பெஞ்சமின் பெக்கரை வென்று இறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 15 |  | 04 |
| * | | * |
| 10 | | 09 |
| * | | * |
| 1940 | | 2010 |

அமரர்

### சின்னத்தம்பி சின்னத்துரை

*அரவணைப்போடு நேசமும் கொண்டு*
*ஆதரவோடு அறிவும் தந்து*
*அன்போடு பண்பும் உயர்த்தி*
*அகமதில் ஆழம் பதித்திட்ட*
*எம் அன்புத் தெய்வமே!*
*உம் ஆத்மா சாந்திபெற*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (04.10.2010) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*நவக்கிரி,*
*புத்தூர்.* (104156) - குடும்பத்தினர்.

## படையினர் முகாமுக்கு சட்டவிரோத மின்சாரம்

யாழ்ப்பாணம், ஒக்.4

சாவகச்சேரி மின்சாரசேவை நிலையத்தினர் கடந்த வியாழக்கிழமை மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது பாதுகாப்புப் படையினர் சட்டவிரோத மின்சாரம் பெற்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் வரணி, குடத்தனையில் நடைபெற்றுள்ளது.

வீடொன்றுக்கு அருகில் மின்கம்பத்தில் பாதுகாப்பற்றுப் பொருத்தப்பட்டிருந்த மின்வயர்களை அவதானித்தபோது, அவை இராணுவமுகாம் ஒன்றுக்குச் சென்றதைக் கண்டுபிடித்ததாகவும், அதனால் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் மின்சார சபையினர் திரும்பிச் சென்று விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-10-122)

## வடமராட்சி கிழக்கு மாணவர்களுக்கு இன்று முதல் மதிய உணவு

யாழ்ப்பாணம், ஒக்.4

வடமராட்சி கிழக்கில் மீள இயங்கத் தொடங்கியுள்ள பாடசாலைகளின் மாணவர்களுக்கான மதிய உணவு இன்று திங்கட்கிழமை முதல் வழங்கப்படவுள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் நிதியுதவியுடன் 6 பாடசாலைகளின் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9-236)


### ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
### இடமாற்றம் பற்றிய அறிவித்தல்

இல.68J, கன்னாதிட்டி வீதி க.ச.தங்கராசா நகைமாளிகையில் (சிவன் கோயில் முன்பாக) இயங்கிவந்த தங்கப்பவுண் டைமெசின் தொழிலகம் தற்போது இல. 102/14, கன்னாதிட்டி வீதியில் (காளி கோயில் மேற்கு வீதியில்) 27.09.2010 ஆம் திகதி தொடக்கம் இயங்கி வருகின்றது என்பதை சகல நகைக்கடை உரிமையாளருக்கும், பொற்றொழிலாளர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

த.விக்கினேஸ்வரன்.


## அறிவித்தல்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த திருமதி மரகதம் சபாரத்தினம் அவர்களின் 05.10.2010 செவ்வாய்க்கிழமையன்று நடைபெற இருந்த வீட்டுக்கிருத்திய நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. நிகழ்வு இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

*ஸ்ரேசன் வீதி, கோண்டாவில்.*
*021 222 7501, 0776909595.* குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் திருநாவுக்கரசு



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் மாரீசன் கூடல் இளவாலையை சொந்த இடமாகவும் தற்போது மேதர்ஸ் லேன் மானிப்பாயை வசிப்பிட மாகவும் கொண்ட ஆறுமுகம் திருநாவுக்கரசு 03.10.2010 ஞாயிற்றுக்கிழமை இன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும் ஞானகலையின் அன்புக் கணவரும் நாகநந்தினி, லலிதா (மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான பெரிய தம்பி, நவரத்தினம் மற்றும் பத்மாவதி, சாலாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2010) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ந.ப 12மணிக்கு மானிப்பாய் பிப்பிலி இந்துமாயனத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மேதேஸ் லேன்,
மானிப்பாய். (104149)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சின்னப்பா பராசக்தி



கைதடியைப் பிறப்பிடமாகவும், சரசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னப்பா பராசக்தி 02.10.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கணபதிப்பிள்ளை-பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா-கமலம்மாவின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னப்பாவின் அன்புமனைவியும், பத்மாதேவி, யோகராணி, சந்திரகுமாரன் (சவூதிஅரேபியா), செல்வராணி, சந்திரா (ஆசிரியை, தி/ஸ்ரீ சண்முகானந்தா இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும், குலேந்திரன் (இலங்கை மின்சாரசபை), ஜெயரட்ணம் (ஒளிப்படப்பிடிப் பாளர்), வினோதா (ஆசிரியை, கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), இராமச்சந்திரன் (வர்த்தகர்), அமிர்தலிங்கம் (ப.நோ.கூ.ச.கிளைப் பரிசோதகர்), ஆகியோரின் அன்பு மாமியாரும், யுகந்தன், சயந்தன், தர்சிகா, நிறோஸன், நர்மதா, லஜிபன், அஞ்சலியா, அபிர்வர்மா, துவாரகன், சானுகா ஆகி யோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2010) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2.30 மணிக்கு வேம்பிராய் இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S.சந்திரகுமாரன் (மகன்)
M. குலேந்திரன் (மருமகன்)

*திருத்தணி, விசுவர்வளவு,*
*சரசாலை மத்தி, சாவகச்சேரி.* (104148)


### தேவை

கல்பேட், ஊர்ச்சேவல், ஊர்ப்பேடு, விறாத்துக்குஞ்சு கூடிய விலையில் கொள்வனவு செய்யப்படும்.
தாசன் பாம்
158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்.நகரில் சிறந்த முறையில் லயின் போறிங், கிறாங்சாப், சிலிண்டர் போறிங் செய்து கொடுக்கப்படும்.
**எந்திரம்ஸ்**
395, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். 021 2224540

### உடன் விற்பனைக்கு (நெல்லியடியில்)

Armed Chairs (20) கற்பித்தலுக்கு உகந்தது. மற்றும் தளபாடங்கள் இரும்பு பிறேம்கள் (அனைத்தும் பாவித்து நல்ல நிலையில் உள்ளவை.
தொடர்பு: 0777407382 (101785)


### தவறிவிட்டது

செட்டிவளவு, அளவெட்டி வடக்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை நாகேந்திராதேவி என்பவரது தேசிய அடையாள அட்டை (576672888 V) பண்ணைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியிலோ அல்லது தொலைபேசியுடனோ தொடர்பு கொள்ளவும். செட்டி வளவு, அளவெட்டி கிழக்கு.
077 1151486, 021 3735621 (104146)






### திருமதி திருநாவுக்கரசு துரைரத்தினம்



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு துரைரத்தினம் நேற்று (03.10.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திருநாவுக்கரசின் (இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்) அன்பு மனைவியும் இலங்காதேவி (இளைப்பாறிய ஆசிரியை - யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்), சிவகுமார் (நியூசிலாந்து), சறோஜினிதேவி (ஆசிரியை- யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்), ராஜ்குமார் (பிரான்ஸ்), சுதர் சினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயும் தவரட்ணத்தின் (கொழும்பு) சகோதரியும் சிவராஜா (இளைப்பாறிய போமன் - C.T.B., சுன்னாகம்), காலஞ்சென்ற ஞானேஸ்வரி மற்றும் சிவபாலன் (ஓய்வுபெற்ற முகாமையாளர் - மக்கள் வங்கி, கன்னாதிட்டி), ஜெயரூபி (பிரான்ஸ்), பரந்தாமன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமியும் ஹரிகரன், கோபிதரன், ஹர்ஷானந், மாதங்கி, வாராகி, லக்ஷிதா (முகாமைத்துவ உதவியாளர் - யாழ்.மாநகர சபை), ஹம்ஷிகா (3ஆம் வருட விஞ்ஞானபீட மாணவி - யாழ்.பல்கலைக் கழகம்), சஞ்சய், சஞ்சீபன், ஜனனி, ஆரணி, சாருஜன், ஹரிணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நகுஷ், நிதேஷ், பிரணவி, நர்த்தஷி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2010) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 2 மணியளவில் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஸ்ரேசன் றோட்,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.* (104150)

*தகவல்:*
ச.சிவபாலன்.
*(மருமகன்).*

### திருமதி ஆறுமுகம் சரஸ்வதி



காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும் களபூமி, வளுப்போடையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சரஸ்வதி நேற்று (03.10.2010) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பையா - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பரமு - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகளும் சிவமலரின் அன்புத் தாயும் சண்முகரத்தினத்தின் (கனடா) அன்பு மாமியும் அஸ்வினியின் அன்புப் பேர்த்தியும் அமரர் பொன்னுத்துரை மற்றும் இலட்சுமிப் பிள்ளை (லண்டன்), நடராசா (கனடா), பேரம்பலம் (ஏரம்பு - வியாவில் ஐயனார் கோயில் பணியாளர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கருங்காலி இல்லத்தில் நடைபெற்று, இன்று (04.10.2010) திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு தகனக்கிரியைக்காக நீலங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
த.பேரம்பலம் (ஏரம்பு)
*(தம்பி).*

*கருங்காலி,*
*காரைநகர்.* (104158)


IELTS அவசியமில்லை

STUDY IN UK யாழ்.நகரில் மிகக் குறைந்த செலவில்...

லண்டனில் தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் உங்கள் உயர்கல்வியைத் தொடர்வதற்கு
★ கல்விக் காலத்திலேயே குடும்பத்தினரை U.K.க்கு அழைக்கும் வாய்ப்புகள்

★ Admission within 3 days
★ 100% Visa உத்தரவாதம் - ஆவணங்கள் சரியாக இருப்பது முக்கியம்
★ ஆகக் குறைந்த கல்வித் தகைமை(O/L)
★ U.K - B.A - Highly Trusted College

★விசா நிராகரிக்கப்படுமானால் College fee மற்றும் Sponsor fee திரும்பப் பெறும் வசதிகள்
★அனைத்து நாடுகளுக்குமான விசா பெறுவதற்குரிய ஆலோசனைகள்
★விசா கிடைக்க முன்போ கிடைத்த பிறகோ எதுவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.
★ இலகு தவணைக் கொடுப்பனவு வசதிகள்
★மிகக் குறைந்த கட்டணத்தில் Sponsor வசதிகள்

இறுதிச் சந்தர்ப்பத்துக்கு முந்திக்கொள்ளுங்கள்



தொடர்புகளுக்கு: 0770871616

# 2 இலட்சத்து 80 ஆயிரம் தமிழர்கள் வடக்கில் இன்றும் சிறை வாழ்க்கை

## கூறுகிறார் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, ஒக். 04

யுத்தம் முடிந்து ஒன்றரை வருடங்கள் கடந்த நிலையிலும் வடக்கில் இன்றும் கூட இரண்டு இலட்சத்து 80 ஆயிரம் மக்கள் சிறை வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கின்றனர் - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மேலும், அரசின் தகவல்படி 26 ஆயிரம் பேர் முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கின்றனர் எனவும் அவர் கூறினார்.

இலங்கை மன்றக் கல்லூரி யில் நேற்று முன்தினம் நடைபெற்ற 'தெற்காசியாவில் சமூக ஜனநாயகம்' எனும் கருப்பொருளிலான மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

இலங்கையில் எமது மக்களின் அடிப்படை உரிமை மறுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த மாநாட்டில் நாம் ஜனநாயகம் பற்றிப்பேசுகின்றோம். ஜனநாயகம் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டிருக்கும் நாட்டில்தான் ஜனநாயகம் பேசுகின்றோம்.

பொன்சேகாவை அரசு அன்று மிகப் பெரிய வீரனாகக் காட்டியது. அந்த வீரன் இன்று துரோகியாக்கப்பட்டு சிறையில் தள்ளப்பட்டிருக்கிறார்.

யுத்தத்தில் அரசு எமது மண்ணை கைப்பற்றிக் கொண்டுவிட்டது. ஆனால், தமிழ் மக்களின் மனங்களை அவர்களால் வெற்றிகொள்ளமுடியாமல் போயுள்ளது.

- இப்படி அவர் கூறினார். (சி)

# சகல மாவட்டங்களிலும் நிலையான இராணுவ முகாம்கள் அமைக்கப்படும்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.4

அனைத்து மாவட்டங்களிலும் குறைந்தபட்சம் ஒவ்வொரு இராணுவ முகாம் மற்றும் விசேட அதிரடிப்படை முகாம்களை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்று இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தெற்கில் இராணுவத்தின் பிரசன்னத்தை அதிகரிக்கும் புதிய பாதுகாப்புத் தந்திரோபாயம் பின்பற்றப்பட உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

கிழக்கின் பாதுகாப்புப் பொறுப்புக்களை விசேட அதிரடிப்படையினரிடமிருந்து, இராணுவத்தினர் பொறுப்பேற்க உள்ளனர் எனத் தெரிவிக்கப்படும் நிலையில், கிழக்கில் நிலையான இராணுவ முகாம்கள் அமைக்கப்பட உள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியவை வருமாறு -

முதல் கட்டமாக அம்பாந்தோட்டையில் நிலையான இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட உள்ளது. பொலிஸாருக்கு விசேட அதிரடிப்படையினர் ஒத்துழைப்பு வழங்க உள்ளனர். 2010 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் அரச மற்றும் தனியார் கட்டடங்களில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் அகற்றப்பட்டு நிலையான இராணுவ முகாம்களில் நிலைநிறுத்தப்படுவர். - இப்படி அவர் தெரிவித்தார். (சி)

# வடபகுதிச் சிறுவர்களின் கல்விக்கு ஐ.நா. முழு ஒத்துழைப்பு வழங்கும்

## நீல் பூனே தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 04

வட பகுதியில் இடம்பெயர்ந்த சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி நீல் புஹனே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கல்வி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறுவர் தின நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வட மாகாண சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளை உறுதி செய்வதற்கு ஐக்கிய நாடுகள் சபை பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டியது முக்கியமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவனும், பிரதீபன்- இன்பரஜிதா தம்பதியினரின் செல்வப் புதல்வனுமான

**பி.துஷ்யந்**

2010ஆம் ஆண்டு 5ஆம் ஆண்டுப் புலமைப் பரீட்சையில் 162 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு மகிழ்ச்சி அடைவதுடன் பல்கலைகளும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
இ.துரைசிங்கம் JP (அம்மப்பா)
து.மகேஸ்வரி (அம்மம்மா)
மாமாமார், சித்திமார், சித்தப்பாமார்.

முருகபதி,
அண்ணாமலை வீதி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (104160)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமில் சுதாகரன்
அனெற்மேசியின் அன்பு மகன்
செல்வன் அனோஜன்

[யா/ புனித ஜோன்போஸ்கோ வித்தியாலய மாணவன்]

அவர்கள் 2010ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 166 புள்ளிகளுடன் மாவட்ட மட்டத்தில் 119ஆம் இடத்தைப் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் கல்வியில் மேலும் சிறந்து விளங்கவும் அவர் கல்வி கற்க சிறந்த முறையில் கற்பித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, தம்பி அபினாஸ், அம்மப்பா, அன்ரி, அரஸ்டாலியல் மாமா குடும்பத்தினர்.

இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம் (104144)

## படிவம்

பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் விற்பனைக்கு உண்டு.

Bharathy Pathippakam, 430, K. K. S. Road, Jaffna.

## வீடு விற்பனைக்கு

யாழ்.நகரை அண்மித்த பகுதியில் 05 அறைகளுடன் கூடிய விசாலமான வீடு விற்பனைக்குண்டு. மேலதிக விவரங்களுக்கு அழையுங்கள்.
0774746218


# உதயன் செய்தி தொடர்பில் குடத்தனை வாசிகள் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஒக்.4

நேற்றைய உதயன் பத்திரிகையின் முன்பக்கத்தில் வெளியான ''மணல் ஏற்றுவதற்கு குடத்தனையில் எதிர்ப்பு'' என்ற தலைப்பில் வெளியான செய்தி தொடர்பில் வடமராட்சி கிழக்கு உழவு ஊர்தி சங்க உறுப்பினர்கள் உதயன் அலுவலகத்துக்கு நேரில் வந்து விளக்கமளித்தனர்.

அவர்கள் தந்த முழுமையான எழுத்து மூல விளக்கம் வருமாறு:-

எம்மைப் பொறுத்தமட்டில் செய்தியின் தலைப்பு பிழையானது. 02.10.2010 அன்று மணல் ஏற்றும் இடத்துக்கு 60 உழவு இயந்திரங்கள் சென்றன. வழமையாக மணல் ஏற்றும் இடத்தில் ஒவ்வொரு இயந்திரமும் 5 சுமை மணலை ஏற்றிய நிலையில் அங்கு வந்த மகேஸ்வரி நிதிய உள்ளூர் பணியாளர், ''இந்த இடத்தில் மணல் ஏற்றக் கூடாது'' என்றார். ''நேற்று வருகை தந்த கனிய வளப் பிரிவு அதிகாரிகள் இங்கு மணல் ஏற்ற வேண்டாம் என்று கூறி உள்ளனர். மணல் ஏற்ற வேறு இடமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது'' - என்றார்.

எனினும் புதிய இடத்தை அவரால் சரியாக அடையாளம் காட்ட முடியவில்லை. இதனால் கனிய வள பிரிவினருடன் குறித்த இடத்துக்கு வந்திருந்த மகேஸ்வரி நிதியத்தின் யாழ்.அலுவலகப் பணியாளர் அழைக்கப்பட்டார். அவர் வந்து உரிய இடத் தைக் காட்டியதும் புதிய இடத்தில் மணல் அள்ள ஆரம் பித்தோம்.

இனம் காணப்பட்ட மணல் திட்டியை அடையாளம் காண்பதில் அன்றைய தினம் நேர தாமதம் ஏற்பட்டதே தவிர தங்களது பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மாதிரி மக்களால் உழவு இயந்திரங்களோ பார ஊர்திகளோ திருப்பி அனுப்பப்படவில்லை. எழுது கிராமத்தில் (ஜே/419) உள்ள மக்கள் எவரும் மணல் அகழ்வு தொடர்பில் முறைப்பாடு செய்யவில்லை.

ஊர் மக்களுடன் இன்று (03/10) நடந்த கலந்துரையாடலைத் தொடர்ந்து ஊரின் உழவு இயந்திர உரிமையாளர்கள் சார்பாக நாம் தரும் இந்த விளக்கத்தைப் பத்திரிகையில் பிரசுரிக்கவும்.

இவ்வாறு அந்த விளக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு:**

* குடத்தனையில் இருந்து இரு பஸ்களில் புறப்பட்ட உழவு ஊர்தி உரிமையாளர்கள் மற்றும் மணல் ஏற்றும் தொழிலாளர்கள் சுமார் 30 பேர் உதயனுக்கு வந்தனர். அவர்களில் மூவர் மட்டும் ஆசிரிய பீட உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாட அனுமதிக்கப்பட்டனர்.

* வந்திருந்தவர்களுடன் ஈ.பி.டி.பி. கட்சியின் யாழ்.மாநகர சபை உறுப்பினர்களான சுதர்சிங் விஜயகாந், கோமகன் ஆகியோரும் வந்திருந்தனர். உதயன் ஊழியர்களுடன் பேச வேண்டிய பிரதிநிதிகளை தெரிந்தெடுத்து உள்ளே அனுப்பிவிட்டு வெளியே காத்திருந்தார் சுதர்சிங் விஜயகாந்.

* தம்மால் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் விளக்கங்கள் அனைத்தும் ஜே/419 கிராம அலுவலர் பிரிவுக்கு உள்ளடங்கிய மக்கள் சார்பில் மட்டுமே தெரிவிக்கப்படுகிறது என்று பிரதிநிதிகள் மீண்டும் மீண்டும் உதயன் ஆசிரியரிடம் வலியுறுத்திக் கூறினர். (உ)


## யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

**தரம் 06 அனுமதி 2011**

2011 ஆம் ஆண்டு யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தரம் 6ஆம் வகுப்பில் மாணவர்களை அனுமதிப்பதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 30.10.2010

(சி-571589) அதிபர்.

## !!யாழ் மண்ணில் முதன் முறையாக!!

## CERTIFICATE IN ETHICAL HACKING AND IT SECURITY

எந்தக் கணனிகளையும் உங்கள் கட்டுப்பாட்டின் கீழ்கொண்டுவரலாம்...

- Introduction to Ethical Hacking
- Introduction to Cyber crimes
- Introduction to Internet and e mail
- Windows Management and Configurations.
- Windows Hacking and Cracking
  - Hacking Windows XP Administrator passwords
  - Hacking Windows XP System password
  - Recover Forgot E mail login id & passwords
  - Remote spy Hacking & Key logs capturing.
  - Unlocking & Cracking the Application sofwares
  - Google Hack, Proxy servers & Resource hacker
  - 25 Important Secrets & Tricks About Windows XP
  - Hack Zip, RAR, pdf, doc ... Files' Passwords
  - Portable operating system & softwares & More...
- Safety Moves Against Hackers
  - How to safe your pc from hackers
  - How to safe System Administrator Acc
  - How to safe E mail Acc from spy and hackers
  - How to safe USB Flash drive from Virus
  - Antivirus Guard and spy remover
  - How to identify anonymous websites & More...

Duration One Month

..அதிகரித்து வரும் சைபர் குற்றங்களுக்கு எதிரான செயற்திட்டம்.. இணைய திருட்டுக்களிடமிருந்து உங்களை பாதுகாத்து கொள்ளுங்கள்

Online classes

Free Hand out Materials & Tools CDs

மறந்த விண்டோஸ் Administrator பாஸ்வேட்கள்&ஈமெயில் Login Id மற்றும் பாஸ்வேட்களை கண்டுபிடித்தல். உங்கள் கணனியை பயன்படுத்துபவர்களை இணையமூடாக முகாமை செய்தல்(Spy), மென்பொருட்களை Unlock செய்தல், மென்பொருள் கோப்புக்களை Unlock செய்தல், Proxy, Google hacks, USB மென்பொருட்கள், 25 விண்டோஸ் XP தந்திரோபாயங்கள் மற்றும் வைரஸ், Spy போன்ற இணைய திருட்டுகளுக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பல விடயங்களை உள்ளடக்கிய பாடத்திட்டம் உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்......

விபரங்களுக்கு!!!
UNI - ICT Campus
No - 83, Palaly Road, Kantharmadam
T.P No:0777-110862


## மரண அறிவித்தல்

### செல்வி கவுரிதேவி சுந்தரமூர்த்தி



பன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி - சின்னத்தங்கம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியுமான செல்வி கவுரிதேவி சுந்தரமூர்த்தி (ஓய்வுபெற்ற Pharmacist றாகம, களுபோவில, தெல்லிப்பழை வைத்தியசாலைகள்) நேற்று (03.10.2010) ஞாயிற்றுக்கிழமை பன்னாலையில் காலமானார்.

அன்னார் சண்முகநாதன் (ஓய்வுபெற்ற உள்நாட்டு இறைவரித் திணைக்கள பிரதி ஆணையாளர்) காலஞ்சென்ற உமாபதிதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை) மற்றும் பார்பதிதேவி (ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி) ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2010) திங்கட்கிழமை பன்னாலையில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 1.30 மணியளவில் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.பார்பதிதேவி (சிந்தா)
சகோதரி

குமகுடை,
பன்னாலை, தெல்லிப்பழை.

# மூவருக்கு கௌரவ கலாநிதி பட்டம்

# யாழ். பல்கலைக்கழகம் வழங்குகிறது

### நான்கு பேராசிரியர்களுக்கு இலக்கிய கலாநிதிப் பட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 4

நாளை மறுதினம் நடைபெற விருக்கும் யாழ். பல்கலைக்கழக 26 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் மூவருக் குக் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட உள்ளது. மேலும் நால்வருக்கு இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படவிருக்கின்றது.

பிரபல நாதஸ்வர மேதை எம்.பஞ்சாபிசேகன், திருமறைக் கலாமன்ற ஸ்தாபகர் அருட்திரு மரிய சேவியர் அடிகள், வாழ்வகத்தின் நிறுவுநர் செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி (தேகாந்திர நிலையில்) ஆகியோருக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படவிருக்கின்றனர்.

யாழ். பல்கலைக் கழகத்தில் 10 ஆண்டுகளுக்கு மேல் பேராசிரியர்களாக பணியாற்றிய பி.பாலசுந்தரம்பிள்ளை, சபா. ஜெயராசா, அ.சண்முகதாஸ், க.கோபால கிருஷ்ண ஐயர் ஆகியோர் இலக்கிய கலாநிதிகளாகக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

(ஐ)

## கீரிமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது. யாழ். மாவட்டத்தின் மீளக்குடியமர்வு, மிதிவெடி அகற்றுதல், சுற்றாடல் பாதுகாப்பு, வாழ்வாதாரம், போக்குவரத்து உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் அலசப்பட்டன. இதன்போது கருத் துத் தெரிவிக்கும் போதே இராணுவத் தளபதி இவ்வாறு தெரி வித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துரு சிங்க தெரிவித்ததாவது :-

✱ யாழ். மாவட்டத்திலுள்ள இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்கள் படிப்படியாக மக்களி டம் கையளிக்கப்படும். மிதிவெடி அபாயம் உள்ள இடங்களில் அவை விரைவாக அகற்றப்பட்டு வருகின்றன. அப்பணி முடிந் ததும் மக்கள் அங்கு மீளக்குடிய மர அனுமதிக்கப்படுவர்கள்.

✱ வடமராட்சி கிழக்கிலுள்ள வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு உள்ளிட்ட பகுதிகளில் ஒரு மாத காலத்துக்குள் மீளக்குடியமர அனுமதி வழங்கப்படும்.

✱ அச்சுவேலி - தொண் டைமானாறு பாதை விரைவில் மக்களின் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படும். அத்துடன் தொண்டைமானாறு சந்தியிலி ருந்து செல்வச்சந்நிதி வரையான பாதையில் உள்ள வீதித்தடை உடனடியாக அகற்றப்படும்.

✱ யாழ். மாவட்டத்தில் மக்க ளின் போக்குவரத்துக்கு என அனுமதி வழங்கப்பட்ட வீதிகளில் எவ்விதத் தடையுமின்றி மக்கள் பயணிக்க முடியும். ஏதும் இடை யூறு இருந்தால் மாவட்ட இராணு வத் தளபதியின் கவனத்துக்குக் கொண்டுவர முடியும்.

இந்தச் சந்திப்பில் சமாதானத் துக்கும் நல்லெண்ணத்துக்குமான தூதுக்குழுவினர் சார்பில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களாவன :-

✱ வலிகாமம் வடக்கு கடற் கரைப் பகுதியில் கடற்தொழில் செய்ய அனுமதி வழங்கப்பட வேண்டும்.

✱ வலி.வடக்கில் சுண்ணாம்புக் கல் அகழ்தல், உள்ளிட்ட சூழலைப் பாதிக்கும் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண் டும்.

✱ யாழ். மாவட்டத்தில் அடிக் கடி மின் வெட்டு ஏற்படுகிறது. இதனால் பல்வேறு அசௌகரி யங்களை மக்கள் எதிர்கொள்கின்றனர்.

யாழ். ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் அடிகளார் முன்னிலையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. (உ-14)

## மரண அறிவித்தல்

## கந்தையா குலசிங்கம்



கட்டுவன், தெல்லிப்பழையைச் சொந்த இடமாகவும் கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா குலசிங்கம் (ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர், பிரதேச செயலகம், உடுவில்) நேற்று (03.10.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் கந்தையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி சுப்பிரமணியம் - சிவஞானவதி தம்பதியரின் அன்பு மருமகனும் குணஞானவதியின் (ஓய்வுபெற்ற பிரதம மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் மற்றும் தவமணி நாகலிங்கம், காலஞ்சென்ற திருமதி நல்லையா மற்றும் தர்மபூபதி சிவராஜா, பாலசிங்கம், இரட்ணசிங்கம், இராஜசிங்கம், அன்னலக்ஷ்மி சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற ராஜ்குமார் மற்றும் ஷகிலா, Dr.சுரேஷ்குமார் (பெண் நோயியல் மகப்பேற்று வைத்திய நிபுணர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நகுலேந்திரன், வாசுகி (ஆசிரியை, யாழ். வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிகாஷ், ராகவி, துவாரகி, மயூரகி ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.10.2010) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லமான 15, சம்பியன் ஒழுங்கை, கொக்குவிலில் நடைபெற்று, பூதவுடல் மு.ப.11 மணிக்கு தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15, சம்பியன் ஒழுங்கை, கொக்குவில். (104161)

தகவல்: கு.சுரேஷ்குமார் (மகன்).

# கட்சிப் புனரமைப்பைத் துரிதப்படுத்தக்கோரி ரணிலுக்கு எதிராக ஐ.தே.கட்சியினர் கூச்சல்

### காலியில் நடந்த சந்திப்பில்

கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளைத் துரிதமாக நிறைவேற்றக் கோரி ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக அக்கட்சியின் காலி மாவட்ட செயற்பாட்டாளர்கள் கூச்சல் எழுப்பினர். கட்சியின் காலி மாவட்ட செயற்பாட்டாளர்களுடன் சந்திப்பு ஒன்று நேற்று காலி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர குணவர்தனவின் இல்லத்தில் இடம்பெற்றது.

இதன்போது காலி மாவட்டத்தின் ஐக்கிய தேசியக் கட்சியின் அனைத்துச் செயற் பாட்டாளர்களும் வந்திருந்தனர். அத்து டன் கூட்டத்துக்கு ரணில் விக்கிரமசிங்க தலைமை வகித்திருந்தார்.

இதன்போது உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க, அரச பணியாளர்களுக்கு 3500 ரூபா வரையில் சம்பள அதிகரிப்பை வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்தக்கருத்தை அவர் வெளியிடும்போது, ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கட்சியின் செயற்பாட்டாளர்கள் கூச்சல் எழுப்பி, ஆர்ப்பாட்டம் செய்தனர். கட்சியின் புனரமைப்பு நடவடிக்கைகளைத் துரிதமாக நிறைவு செய்யுமாறு கோரி அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்படு கிறது.

எனினும் இதனை பொருட்படுத்தாத ரணில் விக்ரமசிங்க அங்கு தொடர்ந்தும் உரையாற்றினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பொன்சேகாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட ஒருவரை மீட்க நாம் நடவ டிக்கை எடுக்கவேண்டும்.

நாடு முழுவதும் அடக்குமுறை ஆட்சிதான் இடம்பெறுகின்றது. ஜனநாயகப் போராட்டங்கள் முடக்கப்படுகின்றன. பொன்சேகாவை விடுவிக்கக் கோரி ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகள் கிழிக்கப்படுகின்றன. அச்சுவரொட்டிகளை ஒட்டும் எமது ஆதரவாளர்கள் மிரட்டப்படுகின்றனர்.

இந்த மாதிரியான அடக்குமுறையை ஒழித்துக்கட்ட இந்த இயக்கம் ஓயாது உழைக்கும். நான்காம் திகதி (இன்று) இரத்தினபுரியில் போராட்டம் நடத்தப்படும். 5ஆம் திகதி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக கையெழுத்து வேட்டை ஒன்று நடத்தப்படும்.

அதேபோல் பொன்சேகாவின் விடுதலையை வலியுறுத்தி தபால், தந்தி போராட்டங்களும் நடத்தப்படும். பொன்சேகாவை விடுவிக்கும் வரை எமது போராட்டம் தொடர்ந்த வண்ணமே இருக்கும். எந்தவொரு அடக்குமுறைக்கும், மிரட்டலுக்கும் நாம் அடிபணியமாட்டோம். - என்றார்.

(சி)

## கைதி எண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

8 x 12 அடி அறை 'எஸ்' வார்ட் என அழைக்கப்படுகிறது. இந்தச் சிறையிலிருந்த கட்டில் சரத் பொன்சேகாவை சிறைக்கு கொண்டு வருவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்னர் அப்புறப்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அந்த அறை யில் ஒரு பாயும் தலையணையும் மாத்திரமே தற்போது இருக்கின்றன.

அவர் அமர்ந்து உணவு உட்கொள்ள ஒரு மேசை கூட அந்த அறையில் இல்லையெனக் கூறப்படுகிறது.

(சி)

## சுமந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படப் போகிறார் என்று தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர், நாடாளுமன்ற சபை பிரதிநிதி பொறுப்பை ஏற்காதவர்களையே தொடர்ந்து நியமிக்கப் போவதாக அறிவித்திருந்தார்.

இதனால் டி.எம். சுவாமிநாதன் பிரதிநிதிப் பொறுப்பை ஏற்பாரா என்பது கேள்விக்குறியாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவரும் நாடாளுமன்ற சபைக்குத் தெரிவு செய்து அனுப்பியுள்ள பிரதிநிதிகளின் பெயர்களை சபாநாயகர் ஜனாதிப திக்கு அனுப்பி வைத்துள்ளார். ஜனாதிபதியின் ஒப்புதல் கிடைத் ததும் இவ் வார இறுதிக்குள் சபா நாயகர் நாடாளுமன்றக் குழுப் பிரதிநிதிகளின் பெயர்களை நாடளுமன்றத்தில் அறிவிப்பார்.

## பொன்சேகாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுறுத்தலாக இருந்து வருகின்றார். ஏனது கணவருடன் அரசியல் ரீதியாக மோத முடியாது என்பதை நன்றாகவே அவர்கள் அறிந்து வைத்திருக்கின்றார்கள். ஏனெனில் மக்கள் எனது கணவர் பக்கமே திரண்டு நிற்கின்றார்கள். ஆகவேதான் அவருக்கு எதிராகக் கட்டுக் கதைகளை அவிழ்த்து விட்டு சட்டத்தை துஷ்பிரயோகம் செய்திருக்கின்றனர் - என்றும் அவர் கூறியுள்ளார்.

இரண்டு வருடங்களுக்கு குறையாத சிறைத் தண்டனை பெற்றிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் 07 வருடங்களுக்குத் தேர்தலில் போட்டியிட முடியாது என்று அரசமைப்புக் கூறுகின்றது. இதுகுறித்து ஊடகவியலாளர்கள் கேட்ட போது அவர் தெரிவித்தவை வருமாறு:-

அரசமைப்பு என்ன சொல்கின்றது?, சட்டம் என்ன சொல்கின்றது என்றெல்லாம் எனக்கு விவரமாகத் தெரியாது. ஆனால் நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்ட எனது கணவர் முன்னெடுத்த அரசியல் பாதை வழியே தொடர்ந்து செல்வேன். அவரது அரசியல் அபிலாஷையை நிறைவேற்ற இயலுமானவரை பாடுபடுவேன். அவசியம் ஏற்பட்டால் நாடாளுமன்ற அரசியலிலும் ஈடுபடுவேன்.

இந்தியா, பாகிஸ்தான் போன்ற அயல் நாடுகளும், அமெரிக்கா, பிரித்தானியா போன்ற மேலைத்தேய நாடுகளும் சர்வதேச சமூகமும் இலங்கையில் ஜனநாயகம் ஆட்சியாளர்களால் சாகடிக்கப்பட்டுக் கொண்டிருப்பதை நன்றாகவே அறிந்து வைத்திருக்கின்றன. இலங்கையில் ஆட்சியாளர்களால் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்ற ஜனநாயக விரோத நடவடிக்கைகள் இந்நாட்டுக்கு மட்டுமல்ல, தென்னாசிய பிராந்தியத்துக்கு மட்டுமல்ல, உலக சமாதானத்துக்குக்கூட பேராபத்தானவையாக உள்ளன.

எனது கணவருக்கு எதிரான இராணுவ நீதிமன்ற விசாரணைகள் நீதியாக இடம்பெறவில்லை என்பதை எல்லோருமே அறிவோம். இந்நீதிமன்ற விசாரணை கூட இராணுவச் சட்டங்களுக்கு முரணானதுதான். ஏனெனில் எனது கணவரை விசாரிக்க நியமிக்கப்பட்ட விசாரணையாளர்கள் அவரைக் காட்டிலும் கனிஷ்ட உத்தியோகத்தர்கள். ஆனால், அவரைச் சிறைக்கு அனுப்பி விட்டார்கள். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளே இவை என் பதில் சந்தேகம் இல்லை. - இப்படி அவர் தெரிவித்தார்.


அழகியல் பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் இணைத்தல் பரீட்சைக்கான இறுதி ஒருநாள் கருத்தரங்கு ஆரம்பம் 05.10.2010 செவ்வாய்க்கிழமை காலை 8.30 - பி.ப. 2.30 வரை
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு
(யாழ்.போதனா வைத்தியசாலை எதிரில்)
விசேட வழிகாட்டிகள் வழங்கப்படும்

**வீடு விற்பனைக்கு**
நீர்கொழும்பில் சூரிய றோட்டில் NO. 4 A/Aயில் இருக்கும் புதிதாகக் கட்டப்பட்ட மூன்று மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு:
0314910266, 0772575587

**விற்பனையாகின்றது**
அனைத்து வகையான Medical, Nursing புத்தகங்கள் (Jaypee வெளியீடு) விஷேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.
இன்றே நாடுங்கள்.
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**ஞானோதயா கல்வி நிலையம்**
- சங்கத்தானை, சாவகச்சேரி -
புதிய பிரிவுகள் ஆரம்பம்
மிகக்குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் எழுத, வாசிக்க, பேச,
Spoken English with Grammar
Lectures By : Mr.Nishanthan (Dip.in.Eng)
ஆரம்பம் : 05.10.2010
செவ்வாய் - At 9.00 a.m
(செவ்வாய், வெள்ளி - 9.00 a.m
★ CD, VCD மூலமான மேலதிக பேச்சுப் பயிற்சிகளும் வழங்கப்படும்.

**THE COLLEGE OF CHEMISTRY**
The Specific Centre for Chemistry
A/L - 2011 DAY CLASSES
Sat, sun 7.30 - 9.30 Tu, Th 3.00 - 4.30
★ அலகு ரீதியான துரிதமீட்டல்
★ அச்சடிக்கப்பட்ட பாடக்குறிப்புகள்
★ மாதிரி வினாக்கள்
★ கடந்தகால தேர்வு வினாக்கள்
★ தொடர் பயிற்சிப் பரீட்சைகள்
DIAS B.sc (Hons) Spl in Chem
32, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**NEW SCIENCE CENTRE**
(Clock Tower Rd. Jaffna.)
A/L 2012
CHEMISTRY
G.Beno (B.Sc.)
இரசாயனக் கணிப்புகள்
Mon, Tue 5-6 p.m.
ஆரம்பம் :
இன்று 5 p.m.

**PRINTER REPAIRS**
hp EPSON LEXMARK SAMSUNG Canon
12 years experience in the field of computer hardware industry
CALL US
0217913020, 0777425974
DO SMS
Flexible working time Mon-Sat 9am. to 6 pm.
MICRO PC SYSTEMS
யாழ்ப்பாணம்: 218, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
நெல்லியடி: கொடிகாமம் வீதி, நெல்லியடி. 0773039536

Diploma Courses
upto 90%Discount.
Closing Date 05.10.2010
MCS
Supported By UNDP/JRRP
Ms Office - Rs.~~2400~~
Multimedia - Rs.~~3600~~
Accounting - Rs.~~3600~~
AutoCAD-2&3D - Rs.~~6000~~
Web Development - Rs.~~27000~~
Fast Track 01 Month
Unlimited Practicals
அனைத்து மாணவர்களுக்கும் Free
Dip. in English
ICDL DTP
324,Palaly Road,Parameswara Junction
SMS your name & course to 772 395 895 & Get Schol.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.